GOKULAM ஏப்ரல் '94 ரூ. 3.00

கோகுலம்




என்ன அதிசயம்!
மகிழ்ச்சியான மாலை நேரம். ராஜா பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான். திடீரென்று பலமான காற்று வீசத் தொடங்கியது. ஆகாயத்திலிருந்து பறந்து வந்த ஒரு பறக்கும் தட்டு ராஜாவின் முன்னால் வந்து நின்றது.
ஒரு குள்ளமான உருவம் அதிலிருந்து வெளிப்பட்டு ராஜாவிடம் பேசத் தொடங்கியது.
"என்னுடைய சிநேகிதனாக இருப்பியா?"
"அ..அ..ஆனா நீ யாரு?"
"செவ்வாய் கிரகத்திலிருந்து வந்திருக்கேன் இங்கே சிநேகம் செய்ய."
நடந்தது என்ன என்றறியும் முன்பு ராஜா சமாளித்து விட்டான்.
"சரி"
"அப்படின்னா, நம்ம சிநேகிதத்தின் அடையாளமா இதை எடுத்துக்க. இது எனக்கு ரொம்ப பிடிச்சது. உங்க பூலோகத்தின் அதிசயம்"
"அதிசயம்"
"நிச்சயமா! கொட்டை இல்லாத, தோல் இல்லாத, மாம்பழத்தின் ருசி."
"மாம்பழமா? இந்த குளிர்காலத்திலா? சீக்கிரம் கொடு"
"சரி... வாயைத் திற, கண்ணை இறுக்கமா மூடிக்க. எனக்கு பிடிச்ச மேங்கோ பைட்டை சாப்பிடு."
"ஆ... மேங்கோ பைட்"
ராஜாவின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவனுக்கும் பிடித்தமான மேங்கோ பைட் செவ்வாய் கிரகத்தின் விருப்பமானதும் என்று.
ராஜா மேங்கோ பைட்டை வாயில் போட்டதும், அவனுடைய புதிய சிநேகிதன் ஒரு பூ ஒதும் நிரம்பிய மேங்கோ பைட் பெட்டியைக் கொடுத்துவிட்டு "மறுபடியும் சந்திப்போம்" என்று கூறி பறந்து சென்றான்.
mango bite
மேங்கோ பைட்



எலிகளே இல்லை!

''மன்னவா, தங்கள் கட்டளையை உடனே நிறைவேற்றுகிறேன். ஆனால், தங்கள் உத்தரவின் காரணத்தை நான் அறியலாமா? மூதாட்டி தனக்கு உதவி தேவை என்பதைக் கூறவில்லையே! தன் வீட்டில் எலியே இல்லை என்றுதானே கூறினாள்? இதற்கு நாம் என்ன செய்ய இயலும்?'' என்று கேட்டார் அமைச்சர்.

தருமபுரியில் தர்மவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். மன்னன், பெயருக்கு ஏற்றபடி நீதி நெறி தவறாத தருமவானாக இருந்து, நல்லாட்சி நடத்தி வந்தான்.

ஒரு நாள், மன்னரின் அவைக்கு மூதாட்டி ஒருத்தி வந்தாள். தோற்றமே அவள் வறுமைப் பிடியில் சிக்கி வாடுபவள் என்பதைப் பறைசாற்றியது.

''தங்களுக்கு என்ன குறை? ஏதேனும் உதவி தேவையா?'' என்று அன்பாகக் கேட்டான் மன்னன்.

சிறிது யோசித்த மூதாட்டி, ''அரசே, என் வீட்டில் எலிகளே இல்லை என்பதுதான் எனக்குள்ள ஒரே குறை'' என்று கூறிவிட்டுப் போய் விட்டாள்.

''இதென்ன பைத்தியக்காரத் தனமான குறை? எலிகளே என் வீட்டில் இல்லை என்பது மிகப் பெரிய குறையா? அப்படியே இருந்தாலும், இதற்குமன்னர் என்ன செய்ய முடியும்?'' என்று பேசிக் கொண்டனர் அவையோர்.

அமைச்சரை அழைத்த மன்னர், ''இந்த மூதாட்டிக்கு இரண்டு மூட்டை நெல்லும் உதவிப்பணமும் அனுப்பி வையுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

அரசர் முகத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்தது. ''அமைச்சரே, மூதாட்டி வளமாக வாழ்ந்த பண்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். தன் வறுமையைத் தெளிவாகக் கூறி உதவி கேட்க அவர் விரும்பவில்லை. அதனால்தான், குறிப்பாகத் தன் வீட்டில் எலிகளே இல்லை என்று கூறிச் சென்றார். இதற்குப் பொருள் அவள் வீட்டில் நெல் மணிகளே இல்லை. வறுமை சூழ்ந்திருக்கிறது என்பது பொருள். நெல் இருந்தால்தானே எலிகள் இருக்கும்? எலிகள் இல்லை என்றது மறைமுகமாக வறுமையைக் குறிப்பிட விரும்பிய குறிப்பு'' என்றார் அரசர்.

அரசரின் நுண்ணறிவை வியந்த அமைச்சர் உடனே மூதாட்டிக்கு உதவ விரைந்தார்.

- இந்திரா கோபாலன்.

கோகுலம் 1994 ஏப்ரல்


இந்த இதழில்...





✸ என்னைப் போல இல்லை! - பக்கம் 81



✸ கடலில் ஒரு நண்பன்! - பக்கம் 91









எம்-பான் வருமா?

இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில், யாரும் பயணத்திற்காக அதிக நேரம் செலவழிக்க விரும்புவது இல்லை. இவர்களுக்கு ஏற்ற படி மிகை வேக ரயில்கள், அதி வேக ரயில்கள் என்று புதிது புதிதாக ரயில்கள் கண்டுபிடிக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கின்றன.

இப்போது இந்த வரிசையில் அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 'எம்-பான்' (M-Bahn) இரயில்கள் வந்துவிட்டன. இவை ஜெர்மானியக் கண்டுபிடிப்பு.


ஜெர்மனியின் இந்தத் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் இந்தியாவிலும் 'எம்-பான்' இரயில்களைத் தயாரிக்க பெல் நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது.


'எம்-பான்' இரயில் என்பது என்ன? இவை காந்த ஈர்ப்பு சக்தியால் ஓடுபவை. ஜெர்மன் நாட்டு ஸ்டார்பெர்ன் நகரைச் சேர்ந்த மேக்னடிக் பான் என்ற கம்பெனி தான் இதைக் கண்டுபிடித்தது. நிலையான காந்தங்களைக் கொண்டு, எலக்ட்ரான் இயக்கத்தில் இரயிலைச் செலுத்துவது தான் இந்தப் புதிய முறை. பழைய ரயில் தண்டவாளங்களுக்கு இனி வேலையில்லை! டாட்டா சொல்லிவிட வேண்டியதுதான்!

எம்-பானில் மோட்டார்களோ, பளு சுமக்கிற வேலையோ கிடையாது. மோட்டாருக்குப் பதிலாக மேக்னட்டுகள்தான் இரயிலை இயக்குகிறது.

இந்த இரயிலில் செலுத்துவதற்கு எனத் தனியான கருவி எதுவும் கிடையாது. அதனால் மொத்த எடையில் 50 சதவீதம் குறைவு. பழைய இரயில்களைப் பார்க்கிலும் பத்தில் ஒருபங்கே இதன் எடை என்று சொல்லலாம்.

எம்-பான் இலேசாக இருப்பதனால், அது உந்துவதற்கு எடுத்துக் கொள்ளும் சக்தியும் குறைவு.





மற்ற இரயில்களை விட இது ஓட எடுத்துக் கொள்ளும் சக்தியும் (Energy Consumption) 65 சதவீதம் குறைவு. எம்.பான் இரயில் ஓடும்போது, எழும் ஓசையும் மிகக் குறைவானதே!

எம்.பான் முழுக்க முழுக்கத் தானியங்கி (Automatic) வசதி கொண்டது. அதன் மையக் கட்டுப்பாடு, இயங்க வைப்பது ஆகியவைகளுக்கு அதிக ஆட்கள் தேவைப்படுவதில்லை. பராமரிக்கவும் எளிதானது. பாதுகாப்பான அமைப்பிலும் குறைவில்லை. இரயில் தடம்புரளும் சாத்தியமே இதில் இல்லை. விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் தடுக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவில் இந்த ரயிலுக்கு ஏக டிமாண்ட் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் எம்.பானுக்குப் போட்டியாக இப்பொழுது ஜப்பானின் 'மாக்லெவ்' இரயில்களும் வந்துவிட்டன!

மின்சாரத் தடை ஏற்பட்டாலும் மாக்லெவ் (Maglev) இரயில்கள் நிற்பதில்லை. அவற்றில் பொருத்தப்படும் பூஸ்டர்கள் மேலும் 30கி.மீ. தூரம் வரை இரயிலை இயக்கி, அடுத்த ஸ்டேஷனில் கொண்டு வந்து சேர்த்து விடும்.

இன்னும் நான்கு ஆண்டுகளில் எம்.பான், மாக்லெவ்கள் உலக முழுவதும் ஓடிக் கொண்டிருக்கும் என்கிறார்கள்.

1994ல் ஒரு குறுகிய இரயில் பாதையில் இவற்றைச் சோதித்த பிறகு விரிவு படுத்தலாம் என்று திட்டமிட்டுள்ளது நமது இரயில்வே தொழில் நுணுக்க ஆராய்ச்சிக் கழகம்.


எப்படியாயினும் 'மாக்லெவ்'வின் வர்த்தக ரீதியான ஓட்டம் 1997ல் துவங்கி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான் ஏர்லைன் கம்பெனி, நகோயா ரெயில்வே லிமிடெட் போன்ற பெரிய நிறுவனங்களின் முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள HSSYT டெவலப்மெண்ட் கார்ப்ரேஷனும் இதில் அக்கறை காட்டி வருகிறது.

அமெரிக்கா, மெக்ஸிகோ, பிரிட்டன், தென்கிழக்கு ஆசியா, சீனாபோன்ற நாடுகளில் மாக்லெவ் இரயில்கள் விரைவில் ஓட உள்ளன.

ஜெர்மனியின் எம்.பான் இரயில்கள் மணிக்கு 500கி.மீ. வேகம் கொண்டவை. இந்தியாவில் இந்த வகை இரயில்களை விடுவது, இங்குள்ள நிலத் தோற்றம் (Landscape) மற்றும் இயற்கைக்கு (Nature) பெரிய அச்சுறுத்தலாகிவிடும் என்று கவலை தெரிவிக்கிறார்கள் சுற்றுச் சூழல் நிபுணர்கள்.

- தேவராஜன்



அசத்துகிறாள் இந்த ஆல்ரவுண்டர்!

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஹைதராபாத்தைச் சேர்ந்த வித்யாசரண் என்ற ஓர் மாணவன், உர்து மொழியில் மிக அதிகமாகத் தேர்ச்சி பெற்று, உர்து அகாதமியின் தங்கப் பதக்கம் பெற்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. ஆந்திர மாநிலத்தில் இருந்து வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளும் இதை வெளியிட்டு, தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஓர் இலக்கணம் என்று வித்யாசரணைப் பாராட்டியிருந்தன. இந்த அற்புதம் தமிழ்நாட்டில் நடந்திருந்தால் கோகுலத்தில் வித்யாசரணைப் பாராட்டி தமிழ் படிக்கும் கோகுலம் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கலாமே என்ற ஏக்கம் இருந்தது. அந்த ஏக்கம் இன்று தீர்ந்துள்ளது. தீர்ந்து வைத்துள்ள பெருமைக்கு உரியவர் மாணவி ரக்ஷா.



பதினோரு வயதான ரக்ஷா, சென்னை மாம்பலத்தில் உள்ள ஸ்ரீ சங்கர பால வித்யாலயா பள்ளியில் ஆறாவது படித்து வருகிறாள். எல்கேஜியிலிருந்து இதே பள்ளிதான். ரக்ஷாவுக்கு சம்ஸ்கிருதம், இந்தி, தமிழ், ஆங்கிலம், தெலுங்கு என்று ஐந்து மொழிகள் தெரியும். வகுப்பில் முதல் மாணவி இவள்தான். அதோடு ஓவியம், பாட்டு, பேச்சு, ஒப்பித்தல், விளையாட்டு போன்ற பல கலைகளிலும் ரக்ஷா பரிசு பெற்றவள். இவைகள் எல்லாவற்றையும் விட ரக்ஷாவிடம் உள்ள மலைக்க வைக்கும் பெரிய சிறப்பு இவளுக்கு சம்ஸ்கிருதத்தில் உள்ள திறமை, ஆர்வம்!

இன்றும் பெரும்பாலான ஸ்தோத்திரங்கள் சம்ஸ்கிருதத்திலேயே உள்ளன. சம்ஸ்கிருதம் தெரியாதவர்கள் கூட, இந்த ஸ்தோத்திரங்களை மனப்பாடம் பண்ணி சரியான உச்சரிப்பு இன்றி தப்பும் தவறுமாகச் சொல்லுவதைக் காணலாம். உச்சரிப்பு சரியாக இல்லை என்றால் பொருளே வேறுபட்டு விடும். அவ்வளவு கவனமாகக் கையாள வேண்டிய மொழி. தவறு செய்தால், திருத்திவிடக் கூடிய அறிவு பெரியவர்களிடம் கூடக் குறைந்து வருகின்ற காலம் இது. அதனால், பெரும்பாலான இல்லங்களில் குழந்தைகள் இன்று சம்ஸ்கிருத ஸ்லோகங்களை விட தமிழ் ஸ்லோகங்கள், அபிராமி அந்தாதி, சஷ்டி கவசம் போன்றவற்றையே அதிக அளவுக்குக் கூறி வருகிறார்கள்.

இந்த நிலையில் பதினோரு வயதான சிறுமி ரக்ஷா சம்ஸ்கிருதத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவளாக தன்



திறமையைக் காட்டி பரிசுகளும் பெற்று வருகிறாள் என்ற செய்தி கிடைத்த போது, ஹைதராபாத் வித்யாசரணின் நினைப்பே வந்தது. ரக்ஷாவை கோகுலம் வாசகர் சார்பில் சந்திக்க முயன்றோம்.

''காலையில் பள்ளி. மாலையில் திரும்பியதும் பயிற்சி வகுப்பு, பாட்டு வகுப்பு. அதனால் சனி, ஞாயிறுகளில் தான் ரக்ஷாவைச் சந்திக்க முடியும்'' என்றார் ரக்ஷாவின் சித்தப்பா. இவர் சென்னை தி.நகரில் எலக்டிரிகல் ஷாப் வைத்திருக்கிறார். அப்பா ஜெயபருல்லா பத்திரிகைக் கடை வைத்திருக்கிறார்.

இவர்கள் பெரிய ஜபர்தஸ்து பண்ணிக் கொள்ளுகிறார்கள் என்ற எண்ணமே முதலில் எழுந்தது. சனிக்கிழமை வரும்வரை காத்திருந்து பேட்டி கண்டோம். பேட்டி கண்ட போது காலை 6.30 மணி.

''சார், அப்பாவுக்குத் தெரியாது. ஏழேகாலுக்கு எனக்கு பாட்டு வகுப்பு இருக்கிறது.'' என்று சிரித்தாள் ரக்ஷா. அவளுடைய 'எங்கேஜ்மெண்ட்' என்ற நிகழ்ச்சிகளைப் பார்த்தோம். மாலை ஏழு மணிவரை சரியாக இருந்தது. ஞாயிற்றுக் கிழமை இன்னும் அதிகம். தந்தையும், சித்தப்பாவும் கூறியதில் மிகை இல்லை என்பதை அறிந்தோம். பல இடங்களில் இவள் மாணவியாகக் கற்கிறாள்.

''உனக்கு, சம்ஸ்கிருதத்தில் எப்படி இவ்வளவு ஆர்வம் ஏற்பட்டது?'' என்ற நமது முதல் சந்தேகத்தைக் கேட்டோம்.

''நான் எல்கேஜியில் இருந்தே இதே பள்ளியில்தான் படித்து வருகிறேன். எல்கேஜியில் என்னோடு படித்த சிறுவர் சிறுமியர்கள் பலரும் ராகம் போட்டு ஸ்லோகம் சொல்லுவார்கள். அதைக் கேட்டு விட்டு நானும் அப்படியே மனப் பாடம் பண்ணி ஒப்பித்து விடுவேன். என்னுடைய இந்த ஆற்றலைக் கண்டு அதிசயித்த எங்கள் ஆசிரியை மைதிலி அவர்கள், 'உன்னுடைய உச்சரிப்பு நன்றாக இருக்கிறது. சம்ஸ்கிருதம் எடுத்துப் படித்தால், நீ சிறப்பாக வருவாய்' என்று பாராட்டினார்கள். அவர்கள் விரும்பியபடியே நான் முதல் வகுப்பிலேயே சம்ஸ்கிருதத்தைக் கற்க ஆரம்பித்தேன். அப்பா, நியூஸ் மார்ட் வைத்திருப்பவர். அதனால் பல மொழிகளையும் நேசிக்கும் மனோபாவம் அவரிடம் இருந்தது. என் சித்தப்பா எலக்டிரிகல் ஷாப் வைத்து இருப்பவர். அவருக்கும் நல்ல பரந்த மனம் இருந்தது. அதனால் வீட்டில் எனக்கு உற்சாகமளித்தார்கள்.

வீட்டுக்கு வரும் உறவினர்கள் நான் சம்ஸ்கிரதம் படிப்பதை வியப்போடு பார்ப்பார்கள். அதே போல் பள்ளிக்கு வரும் பெரியவர்கள், சம்ஸ்கிரத வகுப்பில் நான் பயில்வதை மிகவும் வியப்போடு பார்ப்பார்கள். அவ்வளவு தான். ஆனால், எல்லோருமே எனக்கு உற்சாக மூட்டினார்கள். எனக்கும் அதில் ஈடுபாடு இருந்ததால் முன்னேற முடிந்தது.'' என்று சிரித்தாள் ரகிஷா.

''தமிழிலோ ஆங்கிலத்திலோ சந்தேகம் வந்தால், வீட்டிலேயோ அல்லது அக்கம்பக்கத்திலேயோ யாரிடம் வேண்டுமானாலும் கேட்டு விளங்கிக் கொள்ளலாம். சம்ஸ்கிரதம் அப்படி இல்லையே! நீ சந்தேகங்களை யாரிடம் கேட்பாய்?''

''எங்கள் ஆசிரியை மீனாக்ஷி அவர்கள் எனது முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை கொண்டவர். அவரிடம்தான் கேட்பேன். எந்த நேரத்தில் என்ன சந்தேகம் ஏற்பட்டாலும், புரியாது எத்தனை முறை கேட்டாலும் அவர்கள் எனக்கு விளக்கிப் புரிய வைப்பார்கள். நான் இந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறேன் என்றால் அதற்கு எனக்கு அடிப்படை கற்றுக் கொடுத்த மைதிலி டீச்சரும், இப்பொழுது ஆசிரியையாக இருக்கும் மீனாக்ஷி டீச்சரும், என்னுடைய வளர்ச்சியைப் பெருமையாகக் குறிப்பிட்டு ஆர்வம் காட்டி வரும் தலைமை ஆசிரியை வேதா அவர்களும் தான் காரணம்'' என்று நன்றியுடன் கூறினாள் ரகிஷா.

''சம்ஸ்கிருதத்தைப் பொறுத்த வரை, பார்த்துப் படித்துக் கற்பதை விட, கேட்டுக் கற்பதுதானே அதிகம்? அப்பொழுதுதானே உச்சரிப்பு சரியாக இருக்கும்? குறிப்பாக, சுப்ரபாத ஸ்லோகங்களில் உச்சரிப்பு மாறிவிட்டால் பொருளே மாறிவிடுமே? உச்சரிப்புக்கு என்ன செய்கிறாய்?''

''என்னிடம் வாக்மேன் இருக்கிறது. நான் மட்டும், எந்த ஒலி நாடாவையும் எனக்கு மட்டும் கேட்கும்படி போட்டுக் கேட்கலாம். அப்பாவும், சித்தாப்பாவும் வாங்கித் தந்ததுதான். ஸ்லோகங்களை மனப்பாடம் பண்ணிய பிறகு, டீச்சரிடம் அர்த்தம் தெரிந்து கொண்ட பிறகு, உச்சரிப்பை சரிவரச் சொல்ல பலமுறை வாக்மேனைப்

போட்டுப் பார்த்துத் திருத்திக் கொள்வேன்.''

ரகிஷா வாங்கியுள்ள பரிசுக் குவியல்களையும், பாராட்டு இதழ்களையும் பார்த்தபோது மலைக்காதிருக்க முடியவில்லை. ரகிஷா பெற்றுள்ள பரிசுகளில் குறிப்பிடத்தக்கவை, திருமலை திருப்பதி தேவஸ்தானம் நடத்தும் ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதப் போட்டியில் ஆண்டுதோறும் பெற்று வரும் பரிசு(கள்), அகோபில மடம் நடத்தும் நரசிம்ம சுப்ரபாதப் போட்டியில் பெற்ற பரிசு, விஸ்வ இந்து பரிஷத் போட்டிகளில் பெற்றுவரும் பரிசுகள் தேசிய ஒருமைப்பாட்டுகாகப் பெற்ற பரிசு போன்றவை.


ரகிஷாவின் அண்ணனும் அக்காவும் இவள் படிக்கும் அதே பள்ளியில்தான் படித்து வருகிறார்கள். தங்கையின் முன்னேற்றத்தில் இவர்களுக்கு இருக்கும் ஈடுபாட்டை நேரில் பார்த்தவர்களாலேயே உணர முடியும். எந்த நேரம் என்ன போட்டியானாலும் சரி, எந்த வகுப்பானாலும் சரி, சித்தப்பாவோ, அண்ணாவோ, அக்காவோ, அம்மாவோ ரகிஷாவை உற்சாகமாக அழைத்துக் கொண்டு போகிறார்கள்.

ரகிஷாவின் இலட்சியம் தொடக்கத்தில் டாக்டராக வேண்டும் என்பது. இப்பொழுது சம்ஸ்கிருதத்தில் மேதையாகி (டாக்டராகி) தனது ஆசிரியர்களுக்கும் தான் பயிலும் பள்ளிக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் தேசிய ஒருமைப்பாடு உணர்வு செழிக்கப் பாடுபட வேண்டும் என்பது.

பரந்த மனமுடைய பெற்றோர், சித்தப்பா, குடும்பத்தார், அரவணைத்து வழிகாட்டும் ஆசிரியப் பெருமக்கள், உழைப்புக்கு அஞ்சாத உறுதி, நன்றி உணர்வு, அடக்கம் எல்லாம் பெற்றுள்ள ரகிஷாவின் உன்னத இலட்சியம் கண்டிப்பாக நிறைவேறும். ரகிஷா தீவிரமான கோகுலம் வாசகி. ஆயிரக் கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் ரகிஷாவை வாழ்த்துவோம்.

– ரே.

அட்டை வண்ணப்படம் : கோபிநாத்





புலர்ந்திடு!

திருமுக ஆண்டு தேய்ந்து கழிந்தது
சிரித்தே விடை கொடுப்போம்;
வரும்பவ ஆண்டை வாழ்த்திப் புனித
வழியில் நடை தொடுப்போம்!

வயல்வளம் ஓங்க
வான்மழை பெய்ய
வல்லோன் அருளட்டுமே;
புயல்பூ கம்பம் புடைபெய ராமல்
புவித்தேர் உருளட்டுமே!

அறிவியல் பூத்த ஆக்கப் பணிகள்
ஆயிரம் வளரட்டுமே;
செறிவுடன் செல்வம்
செழித்திடத் தாங்கிச்
சித்திரை மலரட்டுமே!

இமயம் போலே இந்தியர் ஒற்றுமை
இனிதாய்ப் பூத்திடவே,
சமயப் பொறுமை சமத்துவம் பேணிச்
சந்ததம் காத்திடுவோம்!

வேற்றுமை வாதம் வெறித்தனம்
யாவும்
விலகிட இத்தோடே;
போற்றிடும் அன்பாம்
பொற்கதிர் பரப்பிப்
புலர்ந்திடு புத்தாண்டே!

- குரு.சீனிவாசன்

ஒற்றுமை என்ன? – போட்டி முடிவு

அடே அப்பா! இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமாகப் போய்விட்டது. பெரும்பாலானவர்கள் சரியான விடையை எழுதி அசத்தியிருந்தார்கள்! பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கை கொடுத்தது!

சரியான விடை

காப்பி, காது, காந்தி, காற்று, காப்பு, காசு, காகம், காளை, கால், காலன்

ஒற்றுமை – எல்லாமே 'கா'வில் தொடங்குபவை.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

01. ஆர். கார்த்திக், மதுரை - 2
02. ஜி. ராம்குமார், அகமதாபாத் -6 குஜராத் மாநிலம்
03. அ. ஜலீல் சாகுல் ஹமீது, அரியநாயகிபுரம் அஞ்சல்
04. டி.எஸ். ரூபேஷ், மதுரை - 14
05. எம். காவேரி, பெங்களூர் - 21 கர்நாடகா மாநிலம்
06. வி. சுகந்திதேவ மனோகரி, கெங்கவல்லி
07. ராம. அழ. கருப்பையா, சென்னை - 18
08. பி. காயத்ரி, நமனசமுத்திரம்
09. க. சங்கிலிக்காளை, சமுசிகாபுரம்
10. எம். ஐஸ்வர்யா மணி, திருப்பதி ஆந்திர மாநிலம்
11. வி. நந்தினி, அவுரங்காபாத் மகாராஷ்டிரா மாநிலம்
12. ஆர். ரவிந்தரன், கட்ச், குஜராத் மாநிலம்
13. ஆர். நித்யா சங்கரி, பாப்நாயக்கன் பாளையம், கோவை
14. த. கனிமொழி, அம்பல், நாகை மாவட்டம்
15. ப. சரவணமூர்த்தி, அயோத்யா பட்டணம்
16. ஸ்வேதா ரவீந்திரன், சூரத், குஜராத் மாநிலம்
17. சத்தியா சங்கரன், பத்ராவதி, கர்நாடக மாநிலம்
18. எஸ்.என். வித்யா லக்ஷ்மி, சித்தூர், ஆந்திர மாநிலம்
19. முதூர் ஜபீர், ஸ்ரீலங்கா
தொடர்பு எஸ். ஃபரீதா, திருமலம்
20. எஸ். பாரத்வாஜ், சென்னை - 33

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டு ஆசிரியரைத் திக்கு முக்காட வைத்தவர்களுக்கு நன்றி!



தந்தை அதே டைரியை எடுத்துக் கொடுத்து, டானின் விருப்பத்தை மறு படியும் அதில் எழுதச் சொன்னார். டானும் எழுதிவைத்தான்.

வசந்த காலம் சென்று கோடை காலம் வந்தது. அப்பாவுடன் காடு, ஏரி, பூங்கா இன்னும் எங்கெங்கு செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் சென்றான் டான். மலை ஏறினான். காய்கனிகளைப் பறித்தான். மீன் பிடித்தான். கிணற்றில் நீச்சலடித்தான். நாய்க் குடைகளைக் கிள்ளி எறிந்தான். சொல்ல முடியாத சந்தோஷம்.

நான்குமே...!

அன்று ஞாயிற்றுக் கிழமை. பள்ளிக் கூட விடுமுறைநாள். பனிச் சறுக்கு விளையாட்டுக்குத் தேவையான கருவிகளை எடுத்துக் கொண்டான் சிறு வன் டான். குளிராமல் இருக்க விசேஷ உடையை அணிந்தான். உறைந்து கிடந்த நதியின் மீதும், குவிந்து கிடந்த பனிக் கட்டிகளின் மீதும், வெகு நேரம் விளை யாடினான். விளையாடி முடிந்ததும் வீட்டிற்கு வந்தான். டான் சுறுசுறுப் பாகக் காணப்பட்டான். கன்னங்கள் சிவந்து தளதளவென்றிருந்தன. விளை யாடியதால் அவனுக்கு ஒரே குஷி.

''அப்பா, பனிக்காலம் மிகப் பிரமா தம். இக்காலம் மட்டும் எப்போதும் நீடித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக் கும்?'' என்றான்.

''டைரியை எடுத்து உனது விருப் பத்தை அதில் எழுதிவை'' என்றார் தந்தை. டானும் அவ்வாறே செய்தான்.

வசந்த காலம் வந்தது. நாளெல்லாம் வண்ணத்துப் பூச்சியைப் பிடிப்பதிலும், பூக்களைப் பறிப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டான் டான். அப்பாவிடம் சென் றான். ''வசந்த காலத்தின் மகிமையே மகிமை. இக்காலம் மட்டும் இப்படியே நீடித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக் கும்!'' என்றான்.

''அப்பா, நான் என்றுமே விடு முறை நாளை இன்று போல் கழித்ததே கிடையாது. கோடைக்காலம் இப் படியே நீடிக்குமானால் எத்தனை மகிழ்ச் சியாக இருக்கும்!'' என்றான் டான்.

மறுபடியும் தந்தை டைரியைக் கொடுத்து அதையும் எழுதச் சொன்னார். இந்த விருப்பமும் டைரியில் பதிவாகி யது.

கோடை சென்று, இலையுதிர்காலம் வந்தது. எல்லா வகைப்பழங்களும் பழுத்துக் குலுங்கின. சென்ற இடம் எல்லாம் டான் பழங்களை வேட்டை யாடினான்.

''அப்பா! இலையுதிர் காலம்தான் காலங்களில் மிகச் சிறந்தது'' என் றான்.


உடனே தந்தை அவன் டைரியை வாங்கி அவனிடமே காண்பித்து ''இதைப் போன்று தானே மற்ற காலங் களிலும் நீ கூறினாய்?'' என்ற கேட்டார். டான் திகைத்தான்.

''காலங்களை நாம் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொண்டால், நான்கு காலங்களுமே நமக்கு மிகச் சிறந்தவை தான்,''என்றார் அப்பா.

- தக்கோலம் அ.முஸ்தாபா

குளவி என்ன தின்னும்?

ரேவதி



பள்ளிக்குச் செல்ல புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த மணிமொழி, ''தேனீ! தேனீ!'' என்று கத்தினாள்.

குளிக்கக் கிளம்பிக் கொண்டிருந்த அப்பாவும், கல்லூரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த பாபுவும் ஓடி வந்தனர்.

''எங்கே தேனீ?''

''அதோ, என் புத்தக அலமாரிக்குப் பக்கத்தில் இருக்கும் ஜன்னலின் மேல் விளிம்பில் பாருங்க. கூடு கட்டியிருக்கு.''

பாபு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''உஸ்ஸ்'' என்ற ரீங்காரம் கேட்டது. தோட்டத்தில் இருந்து கறுப்பு வண்ணக் குளவி ஒன்று பறந்து வந்து கூட்டைச் சுற்றி வட்டமிட்டது.

பாபு சிரித்தான்.

''மண்ணால் கூடுகட்டறது குளவிதான். தேனீ அல்ல.''

''என்னவோ கறுப்பா 'உஸ் ஸ''ன்னு' சத்தம் போட்டுக் கிட்டுப் பறந்து வந்து அந்த மண்கூட்டையே சுத்திக்கிட்டிருந்தது. எனக்குப் பயமா இருந்தது.''

''நீ பார்த்தது குளவியேதான். மண்குளவின்னு சொல்லுவாங்க. இதுவும் தேனீ இனம்தான். ஆனால் நிறைய வித்தியாசம் இருக்கு.''

''இது மண்குளவியேதான். ஆங்கிலத்தில் பாட்டர் வாஸ்ப் (Potter Wasp) என்பார்கள்,'' என்ற பாபு, அலமாரியைத் திறந்து பைனாகுலரை எடுத்தான்.

''எங்கிட்ட கொடு அண்ணா. முதல்ல நான் பார்க்கிறேன்'' என்று வாங்கிக் கொண்ட மணிமொழி, பைனா

குலரின் வழியாகக் குளவியைப் பார்த்தாள். குளவி கூட்டுக்குள் போய்விட்டது.

''என்ன அண்ணா, குளவி கூட்டுக்குள்ளே போயிடுத்தே?''

''பார்த்துக்கிட்டே இரு. அது மறுபடி வெளியே வரும். அது எங்கே போகுதுன்னு பார்.''

பார்த்துக் கொண்டிருக்கும் போதே குளவி வெளியே வந்து ரீங்காரமிட்டுப் பறந்தது. பறந்தபடி தோட்டத்திற்குள் சென்றது. மணிமொழி அவசரம் அவசரமாக ஜன்னலுக்கு வந்து பைனாகுலரால் பார்த்தாள். ரீங்கார ஓசையைக் கொண்டு குளவியின் நடவடிக்கையைத் தொடர்ந்து கவனிக்க முடிந்தது.

தோட்டத்தில் தரையோடு தரையாகத் தாழ்ந்து பறந்தது குளவி. முருங்கை மரத்தினடியில் ஒரு கம்பளிப் பூச்சி ஊர்ந்து கொண்டிருந்தது. அதன் பின்னாலேயே பறந்த குளவி அதன் மேல் அமர்ந்து முன் கைகளால் இறுகப்பற்றியது. பின் பக்கக் கொடுக்கினால் கம்பளிப் பூச்சியைக் கொட்டியது. அவ்வளவுதான். கம்பளிப் பூச்சியிடம் எந்த அசைவும் இல்லை!

''அண்ணா, இந்தக் குளவி கம்பளிப் பூச்சியைக் கொட்டியே கொன்று விட்டது!'' என்றாள் மணிமொழி.

''எங்கே கொடு. நான் பார்க்கிறேன்?'' என்று பைனாகுலரை வாங்கிக் கொண்டார் அப்பா.

''ஆமாம். கம்பளிப் பூச்சியைத் தூக்கிக்கிட்டுப் பறந்து வருது.''

''ஆமாம். ஆமாம். இதோ, ஜன்னல் கூட்டுக்கு வந்துடுத்து!'' என்று குதித்தாள் மணிமொழி.



''முடியே இல்லாத கடிதாசி எது சொல்லு?''
''தெரியலையே!''
''மொட்டைக் கடிதாசி தான்!''
- ஆர். பத்மநாபன்.

கூட்டில் அமர்ந்து சிறகடித்த குளவி, அதன் ஒட்டை வழியாகக் கம்பளிப் பூச்சியை உள்ளே போட்டது!''

''கூட்டுக்குள்ளே இதன் குஞ்சு இருக்கு போல் இருக்கு. அதான் கம்பளிப்பூச்சியைப் பிடிச்சுக்கிட்டு வந்து உணவாப் போடுது!'' என்று வியந்தாள் மணிமொழி.

''கூட்டுக்குள்ளே குஞ்சு இருக்காது. கூட்டுப் புழுதான் இருக்கும். அதற்கு உணவைத்தான் இப்பக் கொண்டு போய்ப் போட்டிருக்கு,'' என்றான் பாபு.

''குளவி மறுபடி வெளியே வந்து பறக்குது!''

பைனாகுலருக்கப் போட்டி போட அம்மாவும் வந்து சேர்ந்து கொண்டாள். ஆனாலும், குளவியின் ரீங்காரம் அதன் நடவடிக்கைகளைக் கவனிக்க எல்லோருக்கும் உதவியது.

''இப்ப, இன்னொரு கம்பளிப் பூச்சியைத் தூக்குது!''

''கம்பளிப் பூச்சிமேல உட்காருது!''

''கொடுக்கால் கொட்டி மயக்க மடைய வைச்சிட்டது போல இருக்கு!''

''தூக்கிக்கிட்டு பறக்குதே? அட இங்கதான் வருது!''

''கூட்டுமேல நடவினாப் போல பறக்குதே!''

''கூட்டுக்குள்ளே போயிடுச்சு! அண்ணா, நான் முதல்ல பார்த்தப்ப இந்தக் கூட்டுல ஆறு ஓட்டை இருந்தது. இப்ப மூன்றுதான் இருக்கு!'' என்று அதிசயித்தாள் மணிமொழி.

''ஒவ்வொரு ஓட்டைக்குள்ளேயும் ஒரு கூட்டுப் புழு (லார்வா) இருக்கும். அதற்கு உணவாகத்தான் கம்பளிப்பூச்சியைப் பிடித்து, கொட்டி, மயங்கவைத்து, கூட்டுக்குள் கொண்டு போய்ப் போட்டு மூடுது'' என்றான் பாபு.

''மறுபடி குளவி வெளியே பறக்குது!''



"அட! இப்போ இரண்டு ஓட்டை தானே இருக்கு! அப்படின்னா, இந்த இரண்டு ஓட்டைக்குள்ளேயும் கூட புழுவைப் போட்டு மூடிடுமா?"

"ஆமாம். குளவிகளோட வாழ்க்கை முறை அதிசயமானது. சில குளவிகள் கம்பளிப்பூச்சிகளைக் கொட்டி மயங்க வைத்து அவைகளின் மேல் முட்டையிட்டு கூட்டுக்குள் போட்டு மூடிடும். முட்டையில் இருந்து வெளியேவரும் லார்வா கூட்டுப் புழுவுக்கு இந்த கம்பளிப் பூச்சி தான் உணவு," என்றான் பாபு.

"இதன் கூடு இத்தனை அழகா இருக்கே! இதை எப்படி அண்ணா கட்டுது?"


"தாவரப் பொருள்களான மரப்பட்டைகளை அரித்துத் தன் உமிழ் நீரோடு சேர்த்து ஊரவைத்துக் குழைத்து சந்தனம் போல் ஆக்கிக் கொண்டு தாவரப் பொருள்களின் மேல் மட்டும் கூடு கட்டும். இலை கொடிகளின் பின்பக்கமும், மரங்களிலும், வீடுகளில் மரத்தாலான ஜன்னல் கதவுகளிலும் கூடுகட்டும். காகிதத்தைப் பயன்படுத்த முதலில் அறிந்து கொண்ட பெருமை குளவிகளுக்குத்தான் உண்டு."

"கூடுகளை இப்படி மூடிவிடுகிறதே! குஞ்சுகள் எப்படி வெளியே வரும்?"

"கூட்டில் இருக்கும் கூட்டுப் புழுக்கள் கம்பளிப்பூச்சிகளை உண்டு வளர்ந்து தாங்களாகவே கூட்டை உடைத்துக் கொண்டு வெளியே வந்து பறந்து விடும். தங்கள் பணிகளைச் செய்யும்."

"குளவிகளால் மனிதனுக்கு ஏதாவது நன்மை உண்டா அண்ணா?"

"கண்டிப்பாக. பயிர்களைத் தாக்கும் பல பூச்சிகளை இந்தக் குளவிகளே அழித்து விடுகின்றன. இந்தப் பூச்சிகள் பல்கிப் பெருகும் காலத்தில்தான் எல்லா வகைக் குளவிகளும் கூட்டைக் கட்டி, குஞ்சுகளுக்கு உணவாக இந்தப் பொல்லாத பூச்சிகளை ஏராளமாகப் பிடித்து அழித்து விடுகின்றன. இதைத்தான் இயற்கைச் சமநிலை என்கிறார்கள். குளவிகளும் எறும்புகளைப் போல், தேனீக்களைப் போல் கூட்டுச் சமுதாய வாழ்க்கை நடத்துபவைகளே. இவைகளிலும் ராணிக் குளவி, ராஜாக் குளவி, வேலைக்காரக் குளவி எல்லாம் உண்டு. ராணிக் குளவிக்கு பனிக்கால உறக்கம் உண்டு. பனிக்காலம் வந்ததும் வேலைக்காரக் குளவிகளும் ஆண் குளவிகளும் உணவு இன்றி கூட்டிற் குள்ளேயே இறந்து விடும்," என்றான் பாபு.



"தினமும் என்னைப் பகல்ல அம்மாவும், இரவுல அப்பாவும் அடிப்பாங்கடா."

"ஏன்டா அப்படி?"

"அப்பத்தானே எனக்கு இவங்க இண்டுபேரும் பாடம் சொல்லித் தராங்க!"

- சீர்காழி வி. ரேவதி.

"முதுகில் எப்படிடா அடி பட்டது?"

"இருட்டில் தென்னை மரத்தி லிருந்து விழுந்திட்டேன்."

"ஏன் பகலில் ஏறுகிறது?"

"மரம் எங்க விட்டு மரம் இல்லியே!"

- ஏ. ஹரிகிருஷ்ணன்.



அறிவியல் உண்மைகள் :

★ எறும்புகள் தேனீக்களைப் போல் குளவிகள் ஒளி ஊடுவும் நான்கு சிறகுகள் வரிசையைச் சேர்ந்தவை (Hymenoptera) ★ தாவரப் பொருள்களைக் கொண்டு, தனது உமிழ் நீரால் குளப்பிக் குழைத்து கூடுகளைக் கட்டுகின்றன. ★ பல பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவும், புழு பூச்சிகளை செயலிழக்க வைத்துக் குஞ்சுகளுக்கு உணவாக்குகின்றன. ★ ராணிக்கும், மற்ற பெண்களுக்கும் குளிர்கால உறக்கம் உண்டு. இவை தவிர்த்த மற்ற குளவிகள் பனிக் காலத்தால் உணவின்றி இறந்துவிடும். ★ குளவிகள் கூடு கட்டி, முட்டையிட்டு, பூச்சி களை உணவாக்கிக் கொள்வது இயற்கைச் சமநிலையின் அற்புதம். ★ குளவிக்கு விஷக் கொடுக்கு உண்டு. கொட்டினால் கடுக்கும். சில குளவிகள் கொட்டினால் உயிருக்கே ஆபத்தும் ஏற்படுவதுண்டு. ★ பறக்கும் போது ஏற்படும் 'ரீங்காரம்' கண்ணாடி போன்ற சவ்வுச் சிறகுகளின் அசைவே!



மந்திரப் புதை குழி!

மங்களபுரி ராஜா வீரசிம்மனுக்குக் குழந்தைகளே இல்லை. அரசர் மிகவும் நல்லவர். குடிமக்களிடம் வரி வசூலிப்பதில் மட்டும் குறியாக இருக்காது. அவர்களுக்குத் தேவையானவற்றை அறிந்து நன்மை புரிவதிலும் தீவிரமாக இருந்தார்.

அரசரின் பிறந்த நாளன்று மங்களபுரியில் ஒரே கொண்டாட்டமாக இருந்தது. மக்களின் மனம் கவர்ந்த ராஜாவாக இருந்ததால் மக்களும் தாங்களே முன் வந்து கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு அரசருக்குப் பரிசுகள் வழங்கி மகிழ்ந்தனர்.

விழாவின் கடைசி நிகழ்ச்சியாக, இரவில் அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையின் மேல் அரசர் ஊர்வலம் வந்து கொண்டிருந்தார். வாண வேடிக்கைகள் நடந்து கொண்டிருந்தன.

அந்த மகிழ்ச்சியான நேரத்தில் ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. வாணங்களில் ஒன்று வானத்தில் சீறிக் கொண்டு போகாது, பக்கவாட்டில் திரும்பி பட்டத்து யானையின் மேல் வந்து விழுந்தது. யானை மருண்டது. எல்லோரையும் மிதித்துக் கொண்டு அது ஓடத் தொடங்கியது. யானைப் பாகன் அதை வழிக்குக் கொண்டு வர எடுத்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. அவனைக் கீழே தள்ளி விட்டுத் தலை தெறிக்க ஓடியது!

யானையின் மேல் அலங்கரிக்கப்பட்ட அம்பாரியில் உட்கார்ந்திருந்த அரசர் கதிகலங்கிப் போனார். தனது குல தெய்வத்தை வேண்டிக் கொண்டு, வந்தது வரட்டும் என்று மன்னர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். பரிவாரங்கள் பின் தங்கி விட்டன.

நாடு நகரங்களையெல்லாம் கடந்து ஓடிய யானை காட்டுக்குள் வந்தது. அரசரை ஒரு குட்டையில் தள்ளிவிட்டு ஓடிவிட்டது.

''அப்பாடி! உயிர் பிழைத்தோம்!'' என்று மன்னர் மகிழ்ந்தார். மகிழ்ச்சி நீடிக்கவில்லை. மன்னரின் கால்கள் குளத்துக்குள் இறங்க ஆரம்பித்த போது தான், அது பயங்கரமான புதை குழி

சின்னபாபு

என்பது தெரிந்தது! இன்றுடன் நம் வாழ்வு முடியப் போகிறது என்ற முடிவுக்கு வந்த மன்னர், மனதைத் திடப்படுத்துக் கொண்டு தன் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டார். இடுப்பு வரை அவரது உடல் மெல்ல மெல்லப் புதைந்து விட்டது.

அந்த ஆபத்தான நேரத்தில், குட்டைக்கு மேல் நீலவண்ண நிலவொளி தோன்றியது. அதில் ஒரு தேவதை!

''மன்னவா, நான் இந்தக் காட்டைக் காக்கும் வனதேவதை. உன்னை இந்தப் புதை குழியில் இருந்து காப்பாற்றினால் நான் கேட்பதைத் தருவாயா?'' என்று கேட்டது தேவதை.

அந்த ஆபத்தான நேரத்திலும் மன்னர் சிரித்துவிட்டு, ''சாதாரணமாக தெய்வங்களும் தேவதைகளும்தான் மனிதர்களுக்கு வரம் தருவார்கள். என்ன வேண்டும் என்று கேட்பார்கள். ஆனால், இங்கே தலைகீழாக இருக்கிறது! நீங்கள் கேட்டது எதுவாக இருந்தாலும் நான் தருகிறேன்'' என்று உறுதியளித்தார்.

''வாக்குத் தவறினால் எனக்குக் கோபம் வரும். அதன் விளைவு பயங்கரமாக இருக்கும்'' என்று எச்சரித்துக்



கொண்டே மன்னரைப் புதை குழியில் இருந்து அலக்காகத் தூக்கித் தரையில் விட்டது தேவதை.

''விலை மதிப்பில்லாத எனது உயிரைக் காப்பாற்றியிருக்கும் உங்களுக்கு, நீங்கள் கேட்பது எதுவாக இருந்தாலும் கண்டிப்பாகத் தருவேன். என்ன வேண்டும்? கேளுங்கள்?'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டார் மன்னர்.

''அடுத்த ஆண்டு உங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கப் போகிறது. ஒரு வயதாகும் போது அதை இந்தக் குட்டையில் கொண்டு வந்து விட்டு விட்டுப் போக வேண்டும். தவறினால் பயங்கர விளைவுகளைச் சந்திக்கும்படி இருக்கும்'' என்று எச்சரித்தது தேவதை.

மன்னர் ஆடிப் போனார். ஒரு வயதுக் குழந்தையைப் புதை குழியில் கொண்டு வந்து போடுவதாவது! எவ்வளவு பயங்கரம்! அதைவிடத் தானே புதை குழிக்குப் பலியாவது மேல் என்ற முடிவுக்கு வந்த மன்னர், ''தேவதைகள் எல்லாம், நல்லவர்களுக்கு நன்மையே செய்வார்கள் என்றுதான் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இப்படி அசுரத்தனமான செயல்களைச் செய்யும்படியும் கேட்பார்கள் என்று நான் கேள்விப்பட்டதே இல்லை! இப்படிப்பட்ட ஒரு கொடுமையைச் செய்து விட்டு, நான் உயிர் வாழ விரும்பவில்லை. இதோ நீங்கள் காப்பாற்றிய உயிரை, நானே போக்கிக் கொள்கிறேன்'' என்று அந்தப் புதை குழியில் குதிக்கப் போனார் மன்னர்.

''வாக்குக் கொடுத்து விட்டு அதை நிறைவேற்றத் துணிவில்லாது உயிர் விடுவது கோழைத் தனம்,'' என்று சாடியது தேவதை.

''தேவதை என்ற பெயருக்கு ஏற்றபடி,



பெருமைப்படக்கூடிய செயலாகக் கேளுங்கள். அது என்னை மட்டும் பாதிக்க கூடியதாக இருக்க வேண்டும். சாபமாக இருந்தாலும் கூடச் சம்மதமே'' என்றார் மன்னர்.

''அப்படியானால் சரி. நீங்கள் பத்திர மாக அரண்மனை சென்றதும், நாளை காலை சூரிய உதயத்தில் இருந்து நீங்கள் உங்கள் கால்களைத் தரையில் வைக்கக் கூடாது. மீறினால், வெட்ட வெட்ட வளரும் பெரிய தர்பூஷணிப் பழமாக நீங்கள் மாறிவிடுவீர்கள்'' என்று கூறி மறைந்தது தேவதை.


மன்னர் மனம் தெளிந்து சிரமப் பட்டு அரண்மனையை அடைந்தார். ராணியிடம் நடந்ததைக் கூறினார்.

''நீங்கள் உயிருடன் தப்பி வந்ததே போதும். கால்கள்தானே தரையில் படக் கூடாது? கவனமாக இருந்தால் போச்சு'' என்று சமாதானப்படுத்தினாள் அரசி.

அரசர் நடக்கும் இடங்களில் எல் லாம் தரையை உயர்த்தி மரப்பலகை போட்டார்கள். மாடிப்படிகளில் ஏறும் படி இருந்தால், இரத்தன கம்பளம் விரித் தார்கள். கோவிலுக்குப் போய் சாமி தரி சனம் பண்ண, கம்புக்கு நடுவே தூளி கட்டி மன்னரை உட்கார வைத்துத் தூக்கிக் கொண்டு போனார்கள். தேவதை போட்ட நிபந்தனை மன்னரை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. தேவ தைக்குக் கோபமான கோபம்.

''வயிறு நிறைய எலியைத் தின்னும் ரொம்ப சோகமாயிருக் கிங்களே! ஏன்?''

''அந்த எலிகளெல்லாம் எலி பாஷாணம் தின்னு தொலைச் சிருக்குதாம்!''



மன்னருக்கு ஓர் அழகான இள வரசன் பிறந்தான். ''நல்லவேளை, தேவதைக்குக் கொடுத்த வாக்கை மாற்றிக் கொள்ளாது இருந்தால், இள வரசனை அந்தப் புதை குழியில் அல்லவா போட்டுவிட்டு வரும்படி நேர்ந்திருக்கும். அந்தப் பாவமான கொடுமையைச் செய்யாது இறைவன் தான் காப்பாற்றினான்'' என்று மன மகிழ்ந்தார் ராஜா.

இளவரசன் வளர்ந்து பெரியவனா னான். தந்தையைப் போலவே அவனும் மக்களின் நன்மையை நாடுபவனாக இருந்தான். தன்னைக் காக்க மன்னர் பட்ட துன்பங்களையும், தரையில் கால் கள் படாமல் இருக்க அவர் படும் தொல்லைகளையும் கண்டு அவன் மனம் கலங்கினான்.

தன் சாபம் பலிக்காமல் போவ தைக் கண்டு தேவதைக்குப் படு கோபம். 'என்னை ஏமாற்றுவதாவது?' என்று ஆத்திரம் கொண்ட தேவதை மங்களபுரியில் பஞ்சம் தோன்ற சாப மிட்டது. மழை பொய்த்தது. நீர் நிலை கள் எல்லாம் வரண்டு வெடித்தன. மக்கள் குடிக் கக்கூட நீர் கிடைக்காது வருந்தி வாடினர். கால் நடைகள் நீர் இன்றி மடிந்தன. இராஜ்ஜியத்தில் பசுமை என்பதையே காண முடிய வில்லை.

மன்னர் மனம் கலங்கிப் போனார். இதற்கெல்லாம் காரணம் தேவதையின் கோபம்தான் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். தூளியில் உட்கார்ந்து கொண்டு காட்டில் புதை குழிக்கு அருகே வந்தார். மன்னர் அறியாமல் இளவரன் பின் தொடர்ந்தான்.

''தேவதையே'' என்று அழைத்தார் மன்னர்.

''என்ன?'' என்று வெற்றிச் சிரிப்புச் சிரித்தபடி தேவதை தோன்றியது.

''என் மேல் உங்களுக்குக் கோபம் என்றால், என்னை என்ன வேண்டுமா னாலும் கஷ்டப்படுத்தி மகிழுங்கள். ஒரு பாவமும் அறியாத என் நாட்டு

கேளுங்கள் சொல்லப்படும்

✱ இரும்பு வெப்பத்தில் விரியும் என்பதற்காக ரயில் தண்டவாளங்களுக்கு இடையே இடைவெளி விடுகிறார்கள் இல்லையா? அப்படியானால், முழுதுமே எஃகு இரும்புச் சட்டங்களால் ஆன ஈஃபில் கோபுரத்திற்கும் இடைவெளி விட்டிருக்கிறார்களா?

– சா. கிருஷ்ணவேணி,
திருப்பாதிரிப் புலியூர்.

சுவையான கேள்வி. வெப்பத்தால் விரிவதற்கு இடம் விட்டே ஈஃபில் கோபுரம் கட்டப்பட்டுள்ளது. வெப்பம் காரணமாக இந்த கோபுரத்தின் உயரம் அதிக அளவு ஆறு அங்குலம் வரை கூடுகிறது!

மக்களைப் பஞ்சத்திற்கு இலக்காக்கி வதைப்பது எந்த விதத்தில் நியாயம்? அவர்கள் உங்களுக்கு என்ன தீங்கு செய்தார்கள்?'' என்று கேட்டார் மன்னர்.

''அவர்கள் உன் குடிமக்களாக இருப்பதுதான் அவர்கள் செய்த குற்றம்'' என்று சிரித்தது தேவதை.

''தேவதையே'' என்று முன்னே வந்த இளவரசன், ''நான் புதை குழிக்கு பலியாக வேண்டும் என்பதுதானே உங்கள் விருப்பம்? அப்படி நடக்கவில்லை என்பதற்காகத்தானே பஞ்சத்தை வரவழைத்திருக்கிறீர்கள்? என் ஒருவனுக்காக இந்த நாட்டு மக்கள் அனைவரும் துன்பப்படுவதை என்னால் தாங்க முடியவில்லை. நானே புதை குழியில் இறங்குகிறேன். அதற்குப் பரிசாக மழை பொழிய வைத்து, மக்களை வாழ விடுங்கள்'' என்று புதை குழியில் இறங்க வந்தான் இளவரசன்.

''நில் குமரா'' என்று தடுத்த மன்னர், ''குடிமக்களைக் காக்க வேண்டிய பொறுப்பு மன்னனாகிய என்னுடையது. நீயும் என் குடிமக்களுள் ஒருவனே. அதனால், பொறுப்பும் கடமையும் என்னுடையதே. என் கால்கள் தரைமீது பட்டால் வெட்ட வெட்ட வளரும் தர்பூஷணிப் பழமாகி விடுவேன் என்பது தானே இந்தத் தேவதையின் சாபம்? மக்களின் பசியையும் தாகத்தையும் தீர்க்க முடியாத மன்னனாக இருந்து ஆள்வதைவிட, மக்களின் தாகத்தையும் பசியையும் போக்கும் தர்பூஷணிப் பழமாகிப் பயன்படுவதையே நான் விரும்புகிறேன். இதன் மூலம் மக்களின் பசியும் தணியும்; இந்தப் பொல்லாத தேவதையின் ஆத்திரமும் தணியும். மக்களுக்கு நன்மை செய்து அவர்களுடைய குறை தீர்க்கும் காவலனாக இருந்து தரும ஆட்சி செய்'' என்று இளவரசனிடம் கூறிய மன்னர் தூளியில் இருந்து இறங்கி பூமியில் கால்களை வைத்தார்.

அடுத்த கணம் மன்னர் மறைந்தார். அவர் இருந்த இடத்தில் ஒரு பெரிய தர்பூஷணிப்பழம் இருந்தது!

''சாதாரண மனிதராகிய மன்னர் தனது குடிமக்களின் நன்மைக்காக இப்படித் தியாகம் செய்துள்ளதும், நீயும் உன்னைத் தியாகம் செய்ய முயன்றதும் என் கண்களைத் திறந்துவிட்டன. நான் மாறிவிட்டேன். உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டது தேவதை.

''மழை பெய்து மக்களின் துயர் தீர வேண்டும். உடனே இந்தப் புதை குழி மூடப்பட வேண்டும்.''

''உனக்கு என்று எதையும் கேட்கவில்லையே?''

''என் தந்தையின் தியாகம் நிலைத்திருக்க, தர்பூஷணிப் பழம் இனி சிவப்பாக இருக்க வேண்டும்.''


மகிழ்ச்சியோடு தலை அசைத்தது தேவதை.

கேளுங்கள் சொல்லப்படும்

* நோபல் பரிசு பெற்ற மேடம் கியூரி, பெண் குலத்திற்கே பெருமை சேர்த்தவர்தானே?

- கு. மஞ்சுளா, ஆண்டாள்குப்பம்.

கண்டிப்பாக. ஆனால், நோபல் பரிசு பெற்ற அவருக்கும் கூட, அவர் பெண் என்பதால் சில பெருமைகள் மறுக்கப்பட்ட கசப்பான உண்மைகள் உண்டு. 'பிரெஞ்சு அகாடமி'யில் உறுப்பினராகும் தகுதி, அவர் பெண் என்ற ஒரே காரணத்தினாலேயே ஆயுள் முழுவதும் அவருக்கு (1867 - 1934) மறுக்கப்பட்டுள்ளது!



அயர வைக்கும் புத்தகக் கடல்

உலகிலேயே மிகப் பெரிய நூலகம் என்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆஃப் காங் கிரஸ் என்பதுதான். இங்குள்ள புத்தகங்களையும் புத்தகங்கள் தொடர்பானவற்றையும் ஒரே வரிசையில் ஐந்து தட்டு அலமாரிகளில் ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாக அடுக்கி, நடந்தே பார்வையிட விரும்பினால் 542 மைல் தூரம் நடந்தாக வேண்டும்!

சரி! நடக்காமலேயே ஒரு பொருளுக்கு ஒரு நிமிடம் வீதத்தில் தினம் எட்டு மணி நேரம் எடுத்து, ஒரு வாரத்தில் ஐந்து நாட்கள் பார்வையிட்டால் ஒரு ஆண்டிற்குப் பிறகு பார்வையிட வேண்டிய அயிட்டங்கள் எவ்வளவு மீதி இருக்கும் தெரியுமா? 97.8 மில்லியன்! ஆறு விநாடிகளுக்கு ஒரு புதிய புத்தகம் அல்லது அது தொடர்பான ஒரு பொருள் இங்கே சேர்க்கப்படுகிறது! அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள இந்த நூலகம் மூன்று மாபெரும் கட்டடங்களில் இயங்குகிறது. 5,000 க்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள். இந்த நூலகத்தின் செலவுக்கான ஆண்டு பட்ஜெட் 260 மில்லியன் டாலர்!

1800 ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 3000 புத்தகங்களோடு ஆரம்பிக்கப்பட்டது தான் இந்த நூலகம். 1814 ஆம் ஆண்டில் அமெரிக்காவை பிரிட்டன் தாக்கியது. பிரிட்டிஷ் படைகள், தலைநகர் வாஷிங்டனைத் தாக்கி அரசு மாளிகையைக் கொளுத்திய போது இந்தப் புத்தகங்கள் எல்லாமே எரிந்து விட்டன. இதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு அதிபர் தாமஸ் ஜெஃப்பர்சனிடமிருந்து அவர் சேகரித்து வைத்திருந்த 6487 புத்தகங்களை இந்த நூலகம் அப்படியே வாங்கி கொண்டது. ஆயினும் 1851 ஆம் ஆண்டு மீண்டும் இந்த நூலகம் தீக்கிரையானது. அப்போது அங்கிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 35,000 க்கும் மேல்!

அதிபர் ஆப்ரகாம் லிங்கன் இந்த நூலகத்திடம் தனிச் சலுகை காட்டினார். "ஐன்ஸ்வொர்த் ராண்ட் ஸ்போஃபோர்டு" என்பவரை 1864 ஆம் ஆண்டு ஆறாவது நூலக காப்பாளராக நியமித்து, மூன்றாவது முறையாக இந்த நூலகத்திற்குப் புனர்ஜென்மம் கொடுத்தார். அதோடு அவர் அரும்பாடுபட்டுப் பல புதிய நூல்களை இந்த நூலகத்திற்குச் சேர்த்தார். அத்துடன் பொது மக்களும் இதைப் பயன்படுத்த வகை செய்தார்.

1870 ஆம் ஆண்டு வந்த காப்பிரைட் சட்டத்தின்படி அமெரிக்காவில் வெளியிடப்படும் எந்தப் புத்தகமாக இருந்தாலும் இரண்டு பிரதிகளை, இந்த நூலகத்திற்கு அனுப்பியாக வேண்டும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம் வந்த பிறகு புத்தகங்கள் மட்டுமின்றி காப்பிரைட் தேவைப்படும் வரைபடங்கள், சார்ட்டுகள், போஸ்டர்கள், மாடல்கள், புகைப்படங்களும் இங்கு மலை போல் குவிய ஆரம்பித்து விட்டன. இடைவிடாது தொடர்ந்து குவிய


ஆரம்பித்த. இந்தப் பொருள்களை வரிசைப் படுத்தி வகைப்படுத்தி அட்டவணை தயாரித்து அடுக்கிப் பாதுகாக்க 1897 ஆம் ஆண்டு தாமஸ் 'ஜெஃப்பர்சன்' கட்டடம் கட்டப்பட்டது. அதுவும் போதாமல் 1939 ஆம் ஆண்டு 'ஜான் ஆடம்ஸ்' என்ற கட்டடமும் கட்டப்பட்டது. பின்பு அதுவும் கூடப் போதாமல் 'ஜேம்ஸ் மாடிசன் நினைவுக் கட்டடம்' 1980 ஆம் ஆண்டு சேர்க்கப் பட்டது.


இப்பொழுதிருக்கும் சேகரிப்பான 98 மில்லியன்களில் என்னென்ன அயிட்டங்கள் இருக்கின்றன தெரியுமா? இவை யாவுமே 470 உலக மொழிகளில் இருக்கின்றன. 15 மில்லியன் புத்தகங்கள், 39 மில்லியன் கையெழுத்து பிரதிகள், 16 மில்லியன் "Visual Materials" (இதில் 5.25 மில்லியன் சினிமா படங்கள் அடங்கும்), 13 மில்லியன் புகைப் படங்கள், 7 மில் லியன் மைக்ரோ பிலிம்கள், 4 மில்லியன் வரை படங்கள், 1 மில்லியன் ஆடியோ சமாச்சாரங்கள், இவை தவிர 3.47 லட்சம் டிராயிங்கு கள், 1.15 லட்சம் வீடியோ டேப்புகள், வீடியோ டிஸ்குகள், 78,000 போஸ்டர்கள் ஆகியவை!

சிறுவர்க்கான புத்தகங்கள் இங்கு சிறப்பான காட்சிப் பொருள்கள். இவை ஏராளம். ஹேன்ஸ் கிரிஸ்டியன் ஆண்டர்சன் எழுதிய தேவதைக் கதைகளின் மூலப் பிரதிகளை இங்கே நீங்கள் காணலாம். மாஜிக் விஷயங்கள் வேண்டுமா? ஹூடினியின் 4350 மாஜிக் புத்தகங்களில் எதை வேண்டுமானாலும் எடுத்துப் படிக்கலாம்!

இந்தப் பூவுலகில் எதைப் பற்றிய தகவல் வேண்டுமானாலும் இந்த நூலகத்தில் கிடைக்கும். எத்தனையோ நூற் றாண்டுகளாய் மிகச் சிறந்த மனித மூளைகள் வெளியிட்ட பல இலட்சக்கணக்கான தகவல்களை ஒரே இடத்தில் சேர்த்து வைத்து, வேண்டுவோருக்குத் தரும் பயனுள்ள அமைப்பு லைப்ரரி ஆஃப் காங்கிரஸ். இதை இந்த உலகின் தகவல் கருவூலம் என்றால் மிகையல்ல. இதன் சேகரிப்பு அதிகரித்துக் கொண்டே போகும் வேகத்தைப் பார்த்தால் இவற்றையெல்லாம் தொகுத்து, இனம் பிரித்து, வகைப்படுத்தி வைக்க இன்னும் எத்தனை கட்டங்களை எதிர் காலத்தில் கட்ட வேண்டியிருக்குமோ தெரியாது!

- பெரு. இளங் கம்பன்.





சுமை போல் இருந்தது!

ரத்தினபுரியில், சொக்கன் வாழ்ந்து வந்தான். அவனிடம் நிறைய ஆடு, மாடுகள் இருந்தன. அவற்றை மேய்ச்சலுக்காக அவன் பக்கத்துக் காட்டிற்கு ஓட்டிக் கொண்டு செல்வது வழக்கம். ஒரு நாள் மேய்ச்சல் முடிந்து திரும்பும் வழியில், ஒரு மாடு காணாமல் போய் விட்டது. எனவே, அதைத் தேடிக் கொண்டு நடந்தபடி பக்கத்திலுள்ள கிராமத்திற்குச் சென்று விட்டான். ஊருக்குள், செல்லும் பொழுதே வீதியெங்கும் தோரணங்கள் தொங்குவதையும், மக்கள் புத்தாடை, அணிந்து மகிழ்ச்சியுடன் இருப்பதையும் கவனித்தான். ''என்ன விசேஷம்?'' என்று அங்கிருந்த ஒரு பெரியவரைக் கேட்டான். ''கிராமத்தின் தெய்வமான எல்லையம்மனுக்குத் திருவிழா'' என்று அவர் கூறினார்.

அந்தக் கிராமத்தில் சொக்கனுக்கு தூரத்துச் சொந்தமான அத்தை ஒருத்தி தனியாக வசித்து வந்தாள். மாலை நேரமாகி விட்டதால், அத்தை வீட்டுக்குச் சென்று அங்கேயே தங்கி நன்றாக விருந்து சாப்பாட்டை ஒரு பிடி பிடித்து விட்டு மறு-நாள் தன் கிராமத்திற்குச் சொல்லலாம் என்று முடிவு செய்து கொண்டு, அத்தை வீட்டிற்குச் சென்றான் சொக்கன். அவன் சென்ற போது வீடு திறந்திருந்தது. ஆனால், அத்தை வெளியே சென்றிருந்தாள்.

சொக்கன் உள்ளே நுழையும் போதே நீள, நீளமான முருங்கைக்காய்கள் முற்றத்தின் ஒரு மூலையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்ததைப் பார்த்தான் சமையில்

அறையில் ஒரு பக்கம் பொன்னி அரிசி பொங்கி வைக்கப்பட்டிருந்தது. அடுப்பில், குருமா ''சள, சள'' வென்று சீறிக் கொதித்து கொண்டிருந்தது. பக்கத்திலுள்ள பெரிய பாத்திரத்தில் வெள்ளையாகவும், பஞ்சு போலவும் மிருதுவான ஆப்பம், கட்டு கட்டு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. இதையெல்லாம், கண்ட சொக்கனுக்கு நாக்கில் நீர் சுரந்தது. அத்தை, இன்னும் சிறிது நேரத்தில் வந்து விட்டால், சிற்றுண்டி பலகார வகைகளை ஒரு கை பார்க்கலாம் என்ற கற்பனையில் சொக்கன் அங்கேயே வெளியில் திண்ணையில் அமர்ந்திருந்தான்.



சிறிது நேரத்தில் எங்கேயோ வெளியில் சென்று விட்டிருந்த அத்தை வந்தாள்.

உறவுக்கார சொக்கனைப் பார்த்தவுடன் ''பகீர்'' என்றது அத்தைக்கு. 'நல்ல நாளும் அதுவுமா, நல்லா வக்கணையா தின்பதற்கு வந்திட்டான்' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள். ஆனாலும் வெளியில் எதையும் காட்டிக் கொள்ளாமல், எப்ப அவன் வந்தான், வீட்டில் அனைவரும் நலமா போன்றவற்றை விசாரித்தாள். சொக்கனும் பதிலளித்து விட்டு, தான் மாடு தேடி வந்த விவரத்தைக் கூறினான்.

'ஊரில் கோவில் திருவிழா என்றாலும் தான் ஒண்டிக்கட்டை, அநாதை, ஏழை என்றும் தனக்கு எதிலும் கலந்து கொள்ளக் கொடுப்பினை இல்லை என்றும் பொய்க் கண்ணீரைச் சிந்தினாள் அத்தை. பிறகு, ''வந்ததுதான் வந்தே, கூழும், குழம்பும் இருக்கு. சாப்பிட்டு விட்டுச் செல்'' என்று போலியான அன்புடன் கூறினாள்.

அத்தை கூறியது சொக்கனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தான் உள்ளே பார்த்த பலகார வகைகளை அவன் கூறவில்லை. அத்தை ஓரேயடியாகப் புளுகியது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. தனக்குப் பசியில்லை என்று கூறி, அவனிடம் விடைபெற்றுத் தன் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டான். வழியில், அவனுடைய மாடும் கிடைத்து விட்டது.

அத்தையின் கிராம எல்லையைத் தாண்டும் போது ஒரு பாம்பு பாதையை அடைத்தவாறு படுத்திருப்பதை சொக்கன் பார்த்து நடுங்கி நின்றுவிட்டான். அதை அடிக்கவும் அவனுக்குத் துணிவு



இல்லை. கடந்து போகவும் பயமாக இருந்தது. வேறு வழியின்றி தன் அத்தை யின் கிராமத்திற்கே திரும்பிச் சொன் றான். அதோடு, பாம்பை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு அத்தை வீட்டில் தங்கி விடவும் அவன் முடிவு செய்தான்.

அத்தை, தன் வீட்டின் வாசலிலேயே நின்றிருந்தாள். சொக்கன் திரும்பி வருவதைக் கண்டு அவளுக்கு ''பகீர்'' என்றது. காரணம் கேட்டாள். சொக்கன், வழியில் தான் கண்ட பாம்பைப் பற்றிக் கூறினான். அது என்ன பாம்பு என்றும், அது எப்படி இருந்தது என்றும் அத்தை கேட்டாள்.


அத்தையை வெறுப்பேற்ற இது தான் வாய்ப்பு என்று முடிவு செய்தான் சொக்கன்.

''அந்தப் பாம்பு என்ன பாம்பு என்று தெரியவில்லை. ஆனாலும், அதனுடைய நீளம் உங்க வீட்டின் உள்ளே முற்றத்தில் அடுக்கப்பட்டுள்ள முருங்கைகாய்களின் அளவு இருக்கும். அது என்னைப் பார்த்துப் படம் எடுத்த போது, அதன் முகம் பாத்திரத்தில் கட்டு வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருந்த ஆப்பம் போல் அகலமாக இருந்தது. என்னைக் கண்டு அது சீறிய போது தெரிந்த பற்கள், பொங்கி வைக்கப்பட்டுள்ள பொன்னி அரிசிச் சாதம் போல வெண்மையாக இருந்தது. அதனுடைய சீற்றம், அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த குருமாவைப் போல இருந்தது'' என்றும் அடுக்கி கொண்டே போனான்.

அத்தை தன் தவறை உணர்ந்து வெட்கித் தலைகுனிந்தாள். அவனிடம், தான் பொய் கூறியதற்காக மன்னிப்பும் கேட்டாள். அங்கு தங்கி உணவருந்தி விட்டு மறுநாள் தான் செல்ல வேண்டும் என்று மனமார வேண்டி னாள்.

சொக்கனும், 'மகிழ்ச்சியுடன் சம்மதித்து வயிறார உண்டு, சுகமாக உறங்கி, மறுநாள் தன் கிராமத்திற்குத் திரும்பினான்.

- வானதி.



சோம்பல்

சூரியக் கதிர்கள் மண்ணில்
சுடும்வரைத் தூங்கும் பேர்கள்
கூறிய வார்த்தை யெல்லாம்
குப்பை யாகிப் போகும்,
தைரியம் இழக்கச் செய்யும்
தன்மை கொண்ட சோம்பல்
தேறிய மனதைக் கூட
தெளிவினை இழக்கச் செய்யும்!

சும்மா இருக்கச் செய்யும்
சுகமே சோம்பல் ஆகும்.
அம்மா கொடுத்த பாலும்
அழுமே அவனைப் பார்த்து,
இம்மா நிலத்தில் உள்ளோர்
இனியும் சோம்பல் கொண்டால்
பொம்மை உணர்வு ஒன்றே
பொதிந்து கிடக்கும் அன்றோ!

காலைத் தூக்கம் கலைந்தெழுந்தால்
கண்ணில் சோம்பல் விட்டொழியும்
வேலை செய்ய நம் மனமும்
விரைந்தே நாளும் கைகூடும்.
சோலை போல புத்துணர்வு
சோம்பல் முறித்தால் வந்திடுமே!
நாளை உலகம் நம்மிடமே!
நலமாய் வாழ்வோம் சோம்பலின்றி!

- அருப்புக்கோட்டை செல்வம்

என்ன ரேங்க்?

இந்த வருட ஆண்டுவிழாவிலும் மணி எழுதிய கல்வியைப் பற்றிய கதை தான் முதலிடம் பெற்றது. அதை நினைத்த போதே மணியின் பெற்றோருக்குச் சந்தோஷமாக இருந்தது. அதேசமயம் வருத்தமாகவும் இருந்தது. ஏனென்றால், அவனுக்குக் கதை எழுதுவதில் இருந்த ஆர்வம் படிப்பில் இல்லை!

மணி வீட்டிற்கு ஒரே பிள்ளை. அதனால் அவனை அடித்துப் படிக்கச் சொன்னால் அவனுடைய மனம் கஷ்டப்படுமே என்று பெற்றோர் அவனை அடிக்காது கண்டிப்பதோடு விட்டுவிட்டனர்.

மணிக்கு படிக்க வேண்டும் என்ற எண்ணம் நாளடைவில் தானாகவே எப்படியாவது உருவாகும் என்று அவனுடைய பெற்றோர் எதிர்பார்த்தனர். ஆனால், அவனோ படிப்பைப் பற்றிச் சிறிதும் கவலை இல்லாதவனாய் இருந்தான். அவனுடைய அப்பா சுந்தரம் அவனை மாற்ற எத்தனையோ முயற்சிகள் எடுத்தார். எதுவும் பயனளிக்கவில்லை.

ஒருநாள் அப்பா மணியை அழைத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். ''மணி, நீ இதோடு எத்தனை கதைகள் எழுதியிருக்கிறாய்?'' என்று கேட்டார். மணி பெருமையுடன், ''ஏழு கதைகள் அப்பா. அத்தனையும் பள்ளியில் பரிசு வாங்கியவை'' என்றான்.


''ஆமாம், இதையெல்லாம் நீ என்ன செய்யப் போகிறாய்?''


''சிறுவர்க்காக முத்து பத்திரிகை வருகிறதே அப்பா, அதில் சிறுகதைப் போட்டி வைத்திருக்கிறார்கள். 'பாப்பா' பத்திரிகையில் கூட அடுத்த இதழில் ஒரு சிறுகதைப் போட்டி வரப் போகிறதாம். அவைகளுக்கு அனுப்பப் போகிறேன். அவை கண்டிப்பாகப் பரிசு பெறும். என்னைப் பேட்டி காண ஆசிரியரே வருவார்'' என்றான் மணி, ஆவலும் நம்பிக்கையும் கலந்த குரலில்.

''சரி, சரி... அந்த ஆசிரியர் வந்து பேட்டியில் 'என்ன மணி, இத்தனை அழகாகக் கதைகள் எழுதுகிறாயே! பள்ளிப் பாடங்களை எப்படிப் படிக்கிறாய்? என்ன ரேங்க்?' என்று கேட்டால் என்ன சொல்வாய்? ஐம்பது என்றா சொல்வாய்? சரி, கதை எழுதும் பசங்களெல்லாம் இப்படித்தான் படிப்பில் அசட்டையாக இருக்கும் போல இருக்கு என்றுதானே அவர் எண்ணுவார்? இப்படிக் கதை எழுதுபவர்களைப் பற்றி மோசமாக எண்ணிக் கொள்ள நீ காரணமாகலாமா?'' என்று கேட்டார் அப்பா.

மணியின் முகத்தில் திகைப்பின் சாயல். குரல் கம்ம, மெல்லிசாக, ''அப்பா, என்னை மன்னிச்சிடுங்க. இனிமேல், நான் கதை எழுதுவதோடு மட்டுமல்லாமல், நன்றாகப் படிக்க மற்றவர்களுக்கு நல்ல முன்னுதாரணமாகவும் இருப்பேன்'' என்று உறுதியாகச் சொன்னான்.

– சி. பூ. இனியவன்





தண்டனை!

இரவு பத்து மணி. ராமுவுக்குத் தூக்கம் வந்தது. வீட்டுப் பாடத்தைப் பாதியிலேயே விட்டு விட்டுத் தூங்கி விட்டான்.

ராமு தூங்கிய சிறிது நேரத்தில் - அவன் தலைமுடி ''கலகல''வெனச் சிரித்தது.

முடியின் திமிர் சிரிப்பைக் கண்ட தலை, ''முடியே! ஏன் இப்படிப் பைத்தியம் மாதிரிச் சிரிக்கிறாய்? சிரிக்கும் காரணத்தை என்னிடம் கூறிவிட்டுப் பிறகு சிரியேன்?'' என்றது.

''அற்பத்தலையே, நான் சிரிக்கும் காணத்தை என் அடிமையான உன்னிடம் எப்படிக் கூற முடியும்? நானா பைத்தியம்? நீ தான் பைத்தியம்,'' என்று தலையைப் பார்த்து மறுபடி சிரித்தது முடி.

''ரொம்பப் பேசாதே. நான் உனக்கு எப்படி அடிமையாவேன்?'' என்று கேட்டது தலை.

''இதிலென்ன சந்தேகம்? உனக்கு மேல் நான் இருப்பதால், நீ எனக்கு அடிமை தானே? நான் தலைவன், நீ அடிமை,'' என்றது முடி.

தலை ஒன்றும் கூறவில்லை. ஆனால் முடி விடவில்லை. தலையைப் பார்த்து மேலும் மேலும் கேலி பண்ணிக் கொண்டே போனது.

''எனக்கு தினமும் வாசனை ஷாம்பு போடுகிறார்கள். வாசனை யான எண்ணெய் தடவுகிறார்கள். அழகாக வாரி விடுகிறார்கள். ஆனால், உனக்கு என்ன போடுகிறார்கள்? நீ அற்பம். அடிமையை யார் கவனிப்பார்கள்?'' எனச் சிரித்துக் கிண்டல் பண்ணியது முடி.

பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா? ''முடியே நீ சிரித்து கேலி பண்ணுவது சரியல்ல. இன்று நிறைய சிரித்தால் நாளை அழவேண்டும்,'' என்றது தலை.

''நான் நாளை அழ வேண்டுமா! அழும்படி எனக்கு என்ன கஷ்டம் வந்தது? இதோ தூங்குகிறானே ராமு, அவனும் உன்னைப் போல் எனக்கு அடிமைதான். நாளைக் காலையில் பார், யார் தலைவன், யார் அடிமை

எனத் தெரிந்து விடும்,'' என முடி சவால் விட்டுக் கொக்கரித்தது. தலை அமைதியாக இருந்தது.

மறுநாள் காலை.

ராமு எழுந்தான். கொஞ்ச நேரம் படித்தான். பள்ளிக்குப் போக நேரமானதால் தலை வார கண்ணாடிப் பக்கம் போனான். கண்ணாடியில் தனது தலையைக் கண்டதும் திடுக்கிட்டான்.

நேற்றுவரை அழகாக இருந்த முடி, இன்று முள்ளம் பன்றி முதுகைப் போலிருந்தது! ஆம், ஆணவத் தனமாகப் படியாது, செங்குத்தாக நின்றது முடி! எண்ணெய் நிறையத் தேய்த்துப் படியவைக்க முயற்சித்தான். பலனில்லை

இதைக் கண்ட தலை வருந்தியது.

''பார்த்தியா, ஐயா திறமையை? நான் மனசு வைச்சாத்தான் படிவேன். ராமு வேணுமானால், படியப்படிய வாரிக்கலாம். ஆனா, நான் வளையாம நிமிந்துட்டா ராமு அவ்வளவுதான்'' என்று முடி 'கலகல'வெனச் சிரித்து.

பள்ளிக்குப் போன ராமுவை நண்பர்கள் ''முள்ளம்பன்றி'' என்று கிண்டல் பண்ணினார்கள். முடி நட்டுக்குத்தாக நின்றதைப் பார்த்த ஆசிரியர், ராமுவை அழைத்து ''ராமு, உடனே மொட்டை அடித்துவிடு. அப்புறம் நன்றாக படியப் படிய முடி வளரும், நன்கு படியும்'' என்றார்.

முடி திடுக்கிட்டது. ''ஐயையோ, என் தலைக்கனத்தால் நானே அழிந்துவிடுவேன் போல் உள்ளதே!... தலை அப்பவே கூறியதைக் கேட்காம போனேனே?'' என்று பதறி, ''தலையே என்னைக் காப்பாற்றேன்,'' என்று அழுதது முடி.

''நேற்று தலைக் கனத்தால் பேசியதன் விளைவு இது. என்னையும் கேலி செய்தே. அகம்பாவத்தால் அடுத்தவர் மனதைப் புண்படுத்தும் அனைவருக்கும் நிச்சயம் தண்டனை உண்டு. அதை அனுபவித்தே தீர வேண்டும்!'' என முடியைப் பார்த்துத் தலை கூறியது.

ராமு, தலையை மொட்டை யடித்துக் கொண்டான். தன் அகம்பாவத்தால் தனது முடியைத் தானே தேடிக் கொண்டது முடி.

- எஸ். ஜின்னா.



''உங்க பையன் கணக்கு போடறப்ப மட்டும் 'உருமிக் கிட்டே' இருக்கானே?''

''அவன் கணக்குலே 'புலி'ங்கிறதை சிம்பாலிக்கா காட்டறான்!''

- தஞ்சை இரா. ஆதி.

நண்பர்களுக்குத் தெரியாது!

பள்ளிப் பேரவை நடந்து கொண்டிருந்தது. மாணவர்கள் சீருடையில் நேர்த்தியாக, வரிசை வளையாமல் அழகாக நின்று கொண்டிருந்தது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒழுக்கத்தின் மேன்மை பற்றி ஆசிரியர் தர்மசீலன் பேசி முடித்ததும், தலைமையாசிரியர் ஒரு அறிவிப்பைச் செய்தார்.

''பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஒரு பேனா கண்டெடுக்கப்பட்டது. பேனாவைத் தவற விட்ட மாணவர் அடையாளங்களைச் சொல்லி என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.''

அறிவிப்பு முடிந்ததும், பேரவை முடிந்து மாணவர்கள் அணிவகுத்து வகுப்பறை நோக்கிச் சென்ற நேர்த்தி ராணுவ அணிவகுப்பை நினைவூட்டியது!

இடைவேளை நேரம். தலைமையாசிரியர் அறைக்குள், ஆறாம் வகுப்பைச் சேர்ந்த தியாகுவும் எட்டாம் வகுப்பைச் சேர்ந்த மணியும் நுழைந்தார்கள்.

இரண்டு பேருமே அந்தப் பேனாவுக்கு உரிமை கொண்டாடினர்! தனித் தனியாய் விசாரித்த போது இரண்டு பேர் கூறிய அடையாளங்களும் சரியாகவே இருந்தன! இப்படி ஒரு பிரச்னையை தலைமையாசிரியர் எதிர்பார்க்கவே இல்லை.

இதென்ன, மரியாதை ராமனிடம் வந்த வழக்கைப் போல் ஆகி விட்டதே! கண்டிப்பாக பேனா இருவரில் யாரோ ஒருவனுடையதுதான். அதுவரை உறுதி. யாருடையது என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?

''இவர்களுடைய வகுப்பு நண்பர்களை அழைத்து விசாரித்தால், உண்மை தெரியும் சார்'' - அருகில் இருந்த ஆசிரி



மு. நடராசன்


யர் யோசனை சொன்னார். அது நல்ல யோசனையாகப்பட்டது தலைமை ஆசிரியருக்கு.

மணியை அழைத்து, ''உனது வகுப்பு நண்பர்கள் யாரையாவது அழைத்துக் கொண்டு வா'' என்றார் கறுகறுப்பாக.

''சார் அந்தப் பேனா, பிறந்த நாள் பரிசா எங்க மாமா எனக்குத் தந்தது. 'அழகிய பேனா. விலை உயர்ந்தது. பள்ளிக்குக் கொண்டு போனால் தொலைத்து விடுவே. வீட்டிலேயே வைத்துக் கொண்டு எழுது' என்று அம்மா சொன்னதால், நான் அதைப் பள்ளிக்குக் கொண்டு வந்ததே இல்லை. ஒரு ஆவலில், அம்மாவுக்குத் தெரியாமல் நேற்றுதான் முதல் முறையா எடுத்துக் கொண்டு வந்தேன். விளையாட்டு மைதானத்தில் தவற விட்டு விட்டேன். என் நண்பர்களுக்கு அந்தப் பேனாவைக் காட்டக் கூட இல்லை. அவர்களுக்குத் தெரியாது!'' சாமர்த்தியமாகப் பேசினான் மணி.

தலைமையாசிரியரின் முகம் தொங்கிப் போயிற்று. மணிக்குக் கை நீளம் உண்டு என்பது பள்ளியில் எல்லோருக்கும் தெரியும். அவன் மீது ஏகக் குற்றச் சாட்டுகள் உண்டு. விசாரணைக்காக அடிக்கடி தலைமையாசிரியர் அறைக்கு வந்ததாலேயே அவனுக்குப் பயம் குறைந்து போயிருந்தது. உறுதியாகப் பேசினான்.

உண்மையில் அந்தப் பேனா தியாகு வினுடையதுதான். அதை அவனுடைய முகத்தில் கப்பியிருந்த சோகமே காட்டியது. மணியின் முகத்தில் வருத்தத்தின் சுவடு கூட இல்லை! தியாகுவின் பேனாவை மணி பார்த்திருக்க நிறைய சந்தர்ப்பங்கள் உண்டு. அதனால், அடையாளங்களைச் சரியாகச் சொல்கிறான். ஆனால்,



இதை நிரூபித்தாக வேண்டுமே! எப்படி?

தியாகுவின் நண்பர்கள் வந்து கூறினாலும், 'ஏன் அதே நிறத்தில் என்னுடைய பேனா இருக்கக் கூடாதா? உலகத்தில் அந்த மாதிரி ஒரே ஓர் பேனாவைப் பண்ணி அதைத் தியாகுவுக்குத் தந்திருக்கிறார்களா என்ன?' என்று மணி துணிவாக எதிர்க் கேள்வி கேட்டு மடக்குவான். இப்படிப்பட்ட விசாரணைகள் எல்லாம் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடு! அவனை எப்படிச் சமாளிப்பது?

உண்மையில் மணியைப் போன்ற மாணவர்களைச் சமாளிக்கத்தான் அதிகமாக அறிவைச் செலவிட வேண்டியிருக்கிறது!

அடித்து விரட்டி விடலாம். அது முறையாகாது. ஆனால், இப்படிப்பட்ட மாணவர்களைச் சற்றுப் பொறுமையுடனும், சாமர்த்தியத்துடனும் கையாள்வதன் மூலமே அவர்களை நல்வழிப் படுத்த முடியும் என்பது தலைமையாசிரியரின் அசைக்க முடியாத நம்பிக்கை! என்ன செய்யலாம் என்று மூளையைக் குடைந்து கொண்டிருந்தவருக்கு பளீரென ஒரு யோசனை தோன்றியது. மணியை அழைத்தார். பேனாவை அவனிடம் கொடுத்தார். முகத்தில் மகிழ்ச்சி பொங்க அதைப் பெற்றுக் கொண்டான் மணி.

''இதோ பார் மணி, 'இனி எனது உடைமைகள் மீது கவனமாய் இருப்பேன். தவற விட மாட்டேன்! என்று எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்து விட்டுப் போ'' என்று ஒரு தாளையும் அவனிடம் கொடுத்தார் தலைமையாசிரியர்.

விடுவிடுவென்று அவர் கூறியபடியே எழுதிக் கொடுத்தான் மணி. அவன் எழுதுவதையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார் தலைமையாசிரியர். அதைப் பெற்றுக் கொண்டு அந்த பேனாவையும் அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு சற்று நேரம் வெளியில் காத்திருக்குமாறு கூறினார்.

பிறகு, தியாகுவை அழைத்து, அந்தப் பேனாவையே கொடுத்து, அவனிடமும் 'அதைப் போலவே' எழுதித் தரச் சொன்னார். அவன் எழுதிக் கொடுத்ததையும் பெற்றுக் கொண்டபின், மணியையும் உள்ளே அழைத்தார்.

''இதோ பார் மணி. நீ எழுதிய தாளில், எழுதும் போது நானும் பார்த்தேன். எழுத்து சரளமாக வரவில்லை. காரணம் அது உனக்குப் பழக்கப்படாத பேனா. முள்ளால் குத்தின மாதிரி கிறுக்கலாய் வந்திருக்கு. இதோ தியாகு எழுதியதைப் பார். எழுத்து தெளிவாய் இருக்கு. ஒரு குத்தல் கிறல் கூட காகிதத்தில் இல்லை. உண்மையில் அவன் பேனாவாக இருந்ததால்தான், கை வாட்டத்திலேயே தேய்ந்து தேய்ந்து அவன் எழுத வசதியாய் இருக்கும். எழுத்து எப்படித் தெளிவாய் வந்திருக்கு பார்! ஆனால் உன் கைவாட்டமும், பேனா முள் தேய்ந்த வாட்டமும் வேறுபட்டிருப்பதால்தான் உன் எழுத்து காகிதத்தைக் குத்திக் கிழித்திருக்கு.''

தப்பிக்கவே வழியின்றி வகையாக மாட்டிக் கொண்ட வருத்தம் மணியின் முகத்தில் தெரிந்தது. மறுத்துப் பேச வழியின்றி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

''இதோ பார் மணி, வாய்ப்பும், மடக்கிப் பேசும் திறமையும் இருக்கிறது என்பதால் பிறர் பொருளுக்கு உரிமை கொண்டாடுவதும் ஒரு வகைத் திருட்டு தான். ஒழுக்கமும், நேர்மைக் குணமுமே ஒருவனை உயர்த்தும். முறையற்ற வழி என்றுமே பலன் தராது!''


தலைமையாசிரியரின் அறிவுரை மணியை நிச்சயம் பாதித்திருக்க வேண்டும். இனி தவறான வழிக்குச் செல்ல மாட்டான் என்பதற்கு, அவன் கண்களிலிருந்து உருண்டோடிய கண்ணீரே சாட்சி!

''அவர் ஓடுற ரயிலை ஒரு கையாலேயே நிறுத்தினார்...''

''ஆச்சரியமா இருக்கே! எப்படி?''

''அபாயச் சங்கிலியைப் பிடிச்சுத்தான்!''

— கி. சிவா, ஆலப்பாக்கம்.



என்ன ஊர்? - போட்டி



இங்கே மொத்தம் 16 பக்கங்கள் இருக்கின்றன. இவைகளில் இரண்டைச் சேர்த்தால் ஓர் ஊரின் பெயர் கிடைக்கும். இந்த எட்டு ஊர்களும், தென்னக ரயில்வே கால அட்டவணையில் உள்ள வைதான். இவற்றை எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு. வெளிநாட்டில் உள்ள வாசகர்கள், தங்கள் இந்திய தொடர்பு முகவரியைக் (இந்தியாவில் உள்ள உறவினர்/நண்பர்கள் முகவரி) கண்டிப்பாகத் தரவேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

என்ன ஊர்? - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

....

பின்கோடு : ....

முடிவு தேதி : 30.4.94

ஏன் திரும்பணும்?

கோடை விடுமுறையைக் கழிக்க வகுப்பாசிரியருடன் சுற்றுலா வந்திருந்த மாணவர்களின் ஆடல் பாடல்களுடன் குதூகலமாக வந்து கொண்டிருந்த பேருந்து குலுங்கி நின்றது.

''என்ன டிரைவர், ஏன் வண்டியை நிறுத்திவீங்க?'' என்றார் ஆசிரியர்.

''காரணமாத்தான் சார். இங்கே ஓர் அழகான கோவில் இருக்கு. இதை நீங்க தரிசனம் பண்ண விரும்புவீங்கன்னுதான் நிறுத்தினேன். பாடல் பெற்ற தலம் சார் இது'', என்று பதிலளித்தார் டிரைவர்.

''சரி, சாமியை தரிசனம் பண்ணிட்டுப் போகலாம். இறங்குங்க எல்லாரும். யாரும் எங்கும் தனியாப் பிரிந்து செல்லக் கூடாது'' என்றவாறே எழுந்தார் ஆசிரியர்.

ஊருக்கு வெளியே அமைந்திருந்த அந்தப் புராதன கோவில் அமைதியாக இருந்தது. சிற்பக்கலைக் கருவூலமாக இருந்த அதன் சிறப்பைப் பார்த்து வியந்தபடி எல்லோரும் நடந்தனர். சன்னிதியை அடைந்ததும் மாணவர் கூட்டம் அமைதியாக நின்று விட்டது. மேலே நகரவில்லை.

''ஏன் நின்னுட்டீங்க? சீக்கிரம் உள்ளே போய்த் தரிசனம் பண்ணிட்டுக் கொண்டு கிளம்பினால்தானே திட்டப்படி மற்ற இடங்களுக்குச் செல்ல முடியும்?'' என்று கூறியவாறே வந்த ஆசிரியர், அங்கிருந்த போர்டைப் பார்த்துத் திகைத்து நின்றார் - காரணம், இந்துக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். "Only Hindus are allowed" என்று இருந்தது அந்த போர்ட்டில்.

மாணவர்களின் தயக்கம் ஆசிரியருக்குப் புரிந்தது. அவரது வகுப்பில் ஏழு பேர் முஸ்லீம்கள். நால்வர் கிறித்துவர்கள்.

அப்துல்லா சொன்னான் - ''சார், நாங்க பஸ்ஸிலேயே உட்கார்ந்திருக்கிறோம். நீங்க பார்த்துட்டு வாங்க சார்'' மாணவர்கள் அமைதியாய் விலகினர்.

''ஆமாம் சார். நாங்களும் பஸ்ஸிலேயே இருக்கோம். நீங்க போய்ப் பார்த்துட்டு வாங்க சார்'' என்று அந்தோணி சாமியும் நண்பர்களுடன் சென்றான்.

கலகலப்பு ஒரே நிமிடத்தில் திடீரென்று குறைந்து விட்டதுபோல் தோன்றியது. பதினோரு பேர் திரும்பி விட்டாங்களே! ஆசிரியர் முகத்தில் சிந்தனை படர்ந்தது. உடனே அவர் ஒரு முடிவு செய்தார். ''மாணவர்களே! எல்லோருமே உடனே திரும்புங்கள். நாம் பத்தொன்பது பேர் மட்டும் கோவில் உள்ளே போகப் போவதில்லை. பேருந்து உடனே புறப்படுகிறது'' என்றவாறே திரும்பி நடந்தார்.


மற்ற மாணவர்கள் குழப்பத்துடன் அவரைப் பின்தொடர்ந்தனர்.

ஆசிரியர் ''டிரைவர், வண்டிய எடுங்க'' என்றவுடன் கூடவே வந்த டிரைவர் வியப்புடன், ''சார், நீங்களெல்லாம் இந்துக்கள் தானே? நீங்க ஏன் சார் திரும்பணும்?'' என்று கேட்டார். ஆசிரியரோ புன்சிரிப்புடன், ''நாங்க எல்லாம் இந்தியர்கள். மற்றவர்களோடு சுற்றுலாவுக்குத்தான் வந்தோம். எல்லோருமாக வந்துவிட்டு மதத்தின் பெயரால் தனிச் சலுகையை அனுபவிக்க என் மாணவர்கள் விரும்ப மாட்டார்கள். அதை நானும் அனுமதிக்க முடியாது'' என்றார்.

''எங்கள் பெருமைக்குரிய ஆசிரியர்...'' ''வாழ்க! வாழ்க!''

''தொடர்ந்து சாரே ஜஹாங்ஸே அச்சா'' பல குரலாக ஒலிக்க பஸ் புறப்பட்டுச் சென்றது.

- ஜோதி



நன்னா காப்பாடு!

த. ஜானகி



''செழியா! எங்கேடா போறே?''

''பக்கத்துத் தெருவிலே கன்னட வகுப்புக்கு.''

''கன்னடம் கத்துக்கவா போறே?''

''பின்னே வேடிக்கை பாக்கவா போறேன்?''

''மூணு மாசத்துக்கு முன்னாடி நீ பேசின பேச்சுக்கும், இப்ப கன்னடம் கத்துக்கறத்துக்கும் ரொம்ப ஆச்சர்யமா இருக்குடா?''

அரவிந்தனின் வியப்புக்குக் காரணம் இருந்தது.

மூன்று மாதங்களுக்கு முன் :

சனிக்கிழமை. பள்ளி இல்லை என்றாலும் கணக்கு ஸ்பெஷல் க்ளாஸ் மதியம் வரை இருந்தது. செழியன் நண்பர்களுடன் சைக்கிளை எடுக்க வந்தான். ''நீங்க எல்லாம் போங்க. நான் தெலுங்கு ட்யூஷனுக்குப் போயிட்டு வீட்டுக்கு வரேன்'' என்று விக்னேஷ் தன் சைக்கிளில் ஏறப் போனான்.

''நம்ம தமிழ் தாண்டா உசந்த மொழி. அதைத் தவிர வேறு எதையும் படிக்க எனக்குப் பிடிக்கலே'' என்றான் செழியன்.

''வேற மொழியப் படிச்சா என்னவாம்?'' - என்று கேட்டான் விக்னேஷ் பதிலுக்கு.

''உன்னி வீட்டிலே ஏதோ மொழியிலே பேசறாங்க. என்ன இருந்தாலும் தமிழ் மாதிரி ஆகாது.''

''உனக்கு எப்படி உன் தாய்மொழி உசத்தியோ, அதே போலத்தான் மற்றவங்களுக்கும் அவங்கவங்க தாய் மொழி உசத்தி. தெரிஞ்சுக்கோ'' - இது ஆல்பர்ட்.

''சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைப் போம்னு பாரதி கூடப் பாடி இருக்கார் தெரியுமா?''

''மலையாளத்துல நாங்க பேசும் போதே ராகத்தோட பேசுகிறோம்'' என்றான் அச்சுதன்.

''கன்னட மொழியிலே 'க'விலே நாலு, 'ச'விலே நாலு, 'ட'விலே நாலுன்னு நிறைய உச்சரிப்போட எழுத்துகள் இருக்கு. பேச எத்தனை இனிமையா இருக்கும் தெரியுமா?'' என்றான் பீமண்ணா.

''தமிழ் நாட்டை விட்டு வேறு மாநிலத்துக்குப் போனா நீ ரொம்பக் கஷ்டப்படுவே'' - இது அரவிந்தன்.

''எனக்கு வேறு மாநிலத்துக்குப் போக வேண்டிய அவசியமும் இல்லே. வேறு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டிய நிர்பந்தமும் இல்லே.''

''முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையிலே தாய் மொழியோட கூட வேறு ஒரு மொழியையும் கற்றுக் கொள்

வது தப்பில்லைன்னு நான் நினைக்கிறேன்.''

''நான் அப்படி நினைக்கலே. என் தாய் மொழி தமிழைத் தவிர வேறு எந்த மொழியையும் நான் விரும்ப மாட்டேன், படிக்க மாட்டேன் - படிக்கவே மாட்டேன், மாட்டேன்.''

கோபத்தோடு சைக்கிளில் ஏறிச் சென்றான் செழியன்.

''என்ன அரவிந்தா.. அன்னிக்கு நடந்த நிகழ்ச்சியையா அசை போடறே?''

''ஆமா! அன்னிக்கு அப்படிப் பேசின நீ.. இன்னிக்கு.. இப்படி....?''

''இந்தி கற்றுக் கொள்ளும் அளவுக்கு எப்படி மனம் மாறினேன்னு தானே கேட்கறே? காரணம் இருக்கு.''

செழியன் சொல்ல ஆரம்பித்தான்.

செழியனின் மாமி வீடு ஊட்டிக்கு அருகில் குன்னூரில். மாமாவுக்கு மின்சார வாரியத்தில் வேலை. அவர்களுக்குக் குழந்தைகள் கிடையாது. கோவையில் நடைபெற்ற உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்கு செழியன் தன் அப்பாவுடன் சென்றிருந்தான். கல்யாணம் முடிந்ததும் ஒரு வாரம் தங்க செழியனை குன்னூருக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டாள் மாமி.

செழியன், மாமி வீட்டிற்கு வந்து மூன்று நாட்கள் ஓடிவிட்டன. அன்று புதன் கிழமை. இரவு மணி ஒன்பதுக்கு மேல் இருக்கும்.

வானம் பயங்கரமாக கர்ஜிக்க ஆரம்பித்தது. பளீர் பளீர் என்று விழிகளைக் கூசவைக்கும் மின்னல். ஹோ என்ற ஒலியோடு பேய்க்காற்று மரங்களைத் தன் விருப்பம் போல் ஆட்ட, மழை 'சோ' என்று கொட்ட ஆரம்பித்தது.

அத்தையின் வீடு பஸ் செல்லும் மெயின் ரோடின் மீது அமைந்திருந்தது. கொட்டும் மழையை வேடிக்கை பார்த்



துக் கொண்டிருந்த செழியனை உள்ளே வந்து படுக்கும்படி மாமி அழைத்தாள். அந்தச் சமயம் பார்த்து, பயங்கரமாக வானம் சிரித்த மின்னல் சிரிப்பில் மின்சாரம் 'கட்' ஆகிவிட்டது. அவசர அவசரமாக அரிக்கன் விளக்கை ஏற்றி வாசல் பக்கம் வந்து கதவைத் தாழ்ப்பாள் போடும் சமயத்தில் அவர்கள் வீட்டு வாசலில் ஓர் அம்பாசிடர் கார் வந்து நின்றது. காரிலிருந்து இறங்கிய முப்பது வயது மதிக்கத் தக்க ஒருவர் சுற்று முற்றும் பார்த்தார். அக்கம் பக்கத்து வீடுகள் எல்லாம் இருள் போர்வையை போர்த்தியபடி சாத்தப்பட்டு இருந்ததால் மாமியின் வீட்டுக்குள் நுழைந்தார். அவரைப் பின் தொடர்ந்து இருபத்தி ஐந்து மதிக்கத் தக்க ஒரு பெண். அவள் தோளில் நான்கு வயது மதிக்க ஒரு சிறுவன் உறங்கியபடி மழையில் இலேசாக நனைந்தபடி வந்து கொண்டிருப்பது அரிக்கன் விளக்கின் மங்கிய ஒளியிலும், விட்டு விட்டு வீசிய மின்னல் ஒளியிலும் தெரிந்தது.




இதற்கிடையில் மாமாவும் வாசல் பக்கம் வந்து விட்டார்.

மாமாவைப் பார்த்ததும் அந்த ஆள், ''ஸார்! ஊட்டியிலே எங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு போன்லே செய்தி வந்தது. கோவையிலேர்ந்து குடும்பத்தோட வரேன். மழை காத்துல ரோடுக்கு குறுக்கே மரம் விழுந்து விட்டதாம். காலையிலேதான் மரத்தை எடுத்ததும் போக முடியும்னு சொல்லிட்டாங்க. குழந்தைக்கு உடம்பு வேறு சரியில்லை. கரண்ட் கட்டானதால ஒரே இருட்டா இருக்கு. இன்னிக்கு ராத்திரி மட்டும் கொஞ்சம் தங்க இடம் கொடுத்தீங்கன்னா காலையிலே கிளம்பி விடுகிறோம். தயவு பண்ணுங்க'' என்றார்.

மாமாவுக்கு இளகிய மனசு. ''தாராளமா தங்கிக்கிங்க'', என்று உள்ளே வரச் சொன்னார். ஹாலை ஒட்டிய அறையை அவர்களுக்குக் கொடுத்தார். மேட்டுப்பாளையத்திலேயே இரவு உணவைச் சாப்பிட்டு விட்டதாக அவர்கள் சொன்னார்கள்.

மறுநாள் காலை. வியாழக்கிழமை. கண்விழித்த செழியன் அந்த அறையை எட்டிப் பார்த்தான். சுருள் சுருளான முடி. வட்ட முகம். சிவந்த நிறம். சிவப்பு டிராயர். வெள்ளைச் சட்டை. கொழு கொழுவென்று படுக்கையில் உட்கார்ந்து சிணுங்கினான் அவர்களோடு வந்திருந்த குழந்தை ராஜா. அவனோட அம்மாவும் அப்பாவும் வீட்டின் பின் பக்கம் பல் துலக்கச் சென்றிருந்தனர். ராஜாவை ரொம்பவும் பிடித்திருந்தது செழியனுக்கு. அவன் அருகில் சென்று மெதுவாக, ''ராஜா! எழுந்திரு. காப்பி குடிக்கறயா? பால் சாப்பிடறயா?'' என்று அன்பாகக் கேட்டான்.

செழியனைப் பார்த்த ராஜு மெதுவாக எழுந்தான். சில விநாடிகள் பேசாமல் இருந்து விட்டு, சுற்றும் முற்றும் பார்த்தான். கருந் திராட்சைகண்கள் இங்கும் அங்கும் சுழல்வதை செழியன் ரசித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய பெற்றோர்கள் ஹாலுக்குள் நுழைவதைப் பார்த்த ராஜா, ''இவர்களு நல்ல, தாயு தந்தே அல்ல... இவர்



களு நன்ன தாயு தந்தே அல்ல. நன்ன காப்பாடு'' என்று வீரிட்டு அலறிக் கொண்டே அழ ஆரம்பித்தான். அவன் பேசியது கன்னடம். அது செழியனுக்கு விளங்கவில்லை.

இதற்குள் அந்தப் பெண்மணி ஓடோடி வந்து அவனை அன்போடு தூக்கிக் கொண்டாள். அவன் முரண்டு பிடித்தான். தாயும் மகனும் செழியனுக்குப் புரியாத கன்னட மொழியில் பேசிக் கொண்டனர்.

இதற்குள் அத்தை காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். உங்களுக்கு எதற்கு சிரமம்? ஹோட்டலில் பார்த்துக் கொள்கிறோம்.''

''நல்லா இருக்கே! பிள்ளைக்கு முதல்லே கொடுங்க'' என்றாள் அத்தை.

காப்பியைப் பார்த்த ராஜா, ''போடா... போடா...'' என்று கத்தினான்.

இதற்குள் கணவன், சூட்கேசிலிருந்து ஒரு மாத்திரையை அந்தப் பெண்மணியிடம் எடுத்துக் கொடுத்தான். இந்தியில் ஏதோ சொன்னான்.

''உடம்பு சரியில்லாட்டி இப்படித்தான் முரண்டு பிடிப்பான்'' என்று கூறியபடி ராஜாவை அதட்டி உருட்டி மாத்திரையைக் காப்பியில் கலந்து கொடுத்தாள் பெண்மணி. ராஜா மறுபடியும் தூங்க ஆரம்பித்தான்.

அடுத்த அரை மணி நேரத்தில் சாலையின் குறுக்கே விழுந்திருந்த மரம் அகற்றப்பட்டு விடவே அவர்கள் நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டனர். அன்றும், மறுநாள் வெள்ளிக்கிழமையும் கூட செழியனுக்கு அந்தக் குழந்தை ராஜாவின் நினைவு அடிக்கடி வந்தது.

சனிக்கிழமை காலை, பெங்களூரில் பல வருடங்களாக வேலை பார்த்து வரும் மாமாவின் அண்ணன் குன்னூருக்கு வந்திருந்தார். அவர் கொடுத்த இனிப்புகளை சாப்பிட்டுக் கொண்டே அவர் கொண்டு வந்திருந்த கன்னட செய்தித்தாளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் செழியன்.

கடைசிப் பக்கத்தைப் பார்த்த செழியன் திடுக்கிட்டான். காரணம் ராஜாவின் புகைப்படம் அதில் வெளியாகி இருந்தது!

''மாமா, ராஜாங்கற இந்த சிறுவனைப் பற்றி இதுல என்ன எழுதியிருக்காங்கன்னு படிச்சு சொல்லுங்க, ப்ளீஸ்?!

"உனக்கு இவனை எப்படித் தெரியும்?"

செழியன் புதன்கிழமை இரவு நடைபெற்ற செய்திகளைத் தெரிவித்தான். மாமாவும் தன் பங்கிற்கு நடந்ததைக் கூறினார்.

செய்தித் தாளில் ராஜாவைப் பற்றிப் போடப்பட்டிருந்ததை மாமாவின் அண்ணன் தெளிவாகக் கூறினார்.

சிறுவனின் உண்மையான பெயர் சத்தியா. பெங்களூரில் உள்ள பிரபல டாக்டர் ஒருவரின் மகன். எல்.கே.ஜி. படிக்கிறான். திங்கட்கிழமை மாலையில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சத்தியா காரில் கடத்தப்பட்டிருக்கிறான். ஒரு லட்ச ரூபாய் கொடுத்தால்தான் சத்தியாவை உயிரோடு பார்க்க முடியும் என்று போனில் மிரட்டல் செய்தி வந்தது டாக்டருக்கு. மறுநாள் எழுபத்தி ஐந்தாயிரம் ரூபாயைக் குறிப்பிட்டிருந்த இடத்தில் வைத்தார். மேற் கொண்டு தர தன்னிடம் வசதி இல்லை என்றும் சத்தியாவை விட்டு விடும்படியும் வேண்டினார் டாக்டர். ஆனால், சதிகாரர்கள் மீதிப் பணத்தை புதன் கிழமை மாலைக்குள் தர வேண்டும் என்று வற்புறுத்தவே டாக்டர் செய்தியைப் போலீசுக்குத் தெரிவித்து விட்டார். கோபம் கொண்ட சதிகாரர்கள் காரில் சத்தியாவை அழைத்துக் கொண்டு ஊட்டிக்கு வந்திருக்கின்றனர். எதிர் பாராத விதமாக மழை வந்து கரண்ட் கட்டாகி பாதையில் மரம் விழவே, அன்று இரவு மாமியின் குடும்பத்தினர் நம்பும்படியான பொய்யைச் சொல்லி விட்டுத் தங்கியிருக்கின்றனர். மறுநாள் காலை சாமர்த்தியமாக சத்தியாவுடன் தப்பித்துச் சென்று விட்டனர். மகனைக் காணாது தந்தை கொடுத்த விளம்பரம் தான் அது!

செழியனுக்கு அழுகை அழுகையாக வந்தது. தனக்கு மட்டும் கன்னட மொழி தெரிந்திருந்தால், "இவர்கள் என்னோட அம்மா அப்பா இல்லை. என்னைக் காப்பாற்று" என்று அந்தச் சிறுவன் கூறியதுமே காப்பாற்றியிருக்கலாம். இப்ப என்ன செய்வது? அந்த அழகிய குண்டு முகம், ரோஜா வண்ணக் கன்னம், திராட்சை விழிகள் எல்லாம் காப்பாற்று காப்பாற்று என்று கெஞ்சின.

"தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையா இப்ப வருத்தப்பட்டு என்னடா பிரயோஜனம்?" - சத்தம் போட்டார் மாமாவின் அண்ணன்.

"மாமா... அவர்கள் ஏறி வந்த காரின் நிறம், காரின் நம்பர், எல்லாம் எனக்குத் தெரியும். நீங்க போலீசுக்குத் தகவல் கொடுங்க. அவங்க எப்படியாவது சத்தியாவைக் காப்பாத்தி விடுவாங்க" என்றான் செழியன் துடிப்போடு.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை. செழியன் வருத்தத்தோடுதான் தன் ஊருக்கு வந்தான்.

பத்து நாட்கள் கழித்து மாமாவின் அண்ணன் விரிவான கடிதம் ஒன்று எழுதியிருந்தார். அதில் :


"நீ கொடுத்த தகவல்களை வைத்து போலீஸ் தீவிர நடவடிக்கை எடுத்தது. அந்தக் காரைக் கண்டு பிடித்துத் துரத்திக் கொண்டு வரும் போது, தாங்கள் எப்படியும் மாட்டிக் கொள்வது உறுதி என்று பயந்த சதிகாரர்கள் சத்தியாவையும் காரையும் பெங்களூர் லால்பாகில் விட்டு விட்டுத் தப்பிச் சென்று விட்டனர். மயங்கிய நிலையில் இருந்த சத்தியாவை வாட்ச் மேன்தான் கண்டுபிடித்தான். அடிக்கடி தூக்க மாத்திரையைக் கொடுத்துக் கொடுத்து அவனைத் தூங்கச் செய்ததால் சத்தியா ஆரோக்கியம் குன்றி இருந்தான். தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து கவனமாக வைத்தியம் செய்ததில் இன்றுதான் பழைய நிலைக்குத் திரும்பியிருக்கிறான்.

"பிராக்ரஸ் கார்டுல பெற்றோரின் கையொப்பம்னுதானே இருக்கும்? இதுல என்னடா மகனின் கையொப்பம்னு இருக்கு?"

"இது எங்க தாத்தாவோடதுடா... முதியோர் பள்ளி பிராக்ரஸ் கார்டுல அப்படித்தான் இருக்குமாம்!"

- சீர்காழி வி. ரேவதி.





பவ ஆண்டே வா!

பங்குனி அக்கா போ! போ!
பறந்து சித்திரை வா! வா!
எங்கும் மகிழ்ச்சி தா! தா!
எல்லோர் புகழ வா! வா!

படையில் வைத்தோம் பார்! பார்!
பார்த்துச் சுவைத்துப் பார்! பார்!
உடைகள் கோடி பார்! பார்!
உள்ளம் வெள்ளை பார்! பார்!

ஏரிடும் உழவர் காண வா!
எங்கள் வீட்டைக் காண வா!
சோறிடும் வயல்கள் காண வா!
தூய்மை பவ ஆண்டே வா!

- வேட்டைநல்லூர், தமிழன்பன்.

திருடப்பட்ட கார் அதன் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது!'' என்று எழுதப்பட்டிருந்ததை நான்கு முறை படித்தான். படிக்கப் படிக்க அவன் மனதில் மற்ற மொழிகளின் மேல் இருந்த வெறுப்புக் குறைந்தது.

செழியன் கூறி முடித்தான்.


''ஆமா அரவிந்தா. கன்னட மொழியோ, அல்லது கணவன் மனைவி மாதிரி நடித்து அவர்கள் பேசிக் கொண்ட இந்தி மொழியோ எனக்குத் தெரிந்திருந்தால், சத்தியாங்கற சின்னப் பாப்பாவை மேலும் வேதனைப் படவைக்காம உடனேயே காப்பாற்றி யிருப்பேன். எல்லாவற்றையும் விட அந்தச் சமூக விரோதிகளை இந்த மாதிரிக் கொடுமைகள் செய்யாமல் இருக்க போலீசில் பிடிச்சுக் கொடுத் திருப்பேன். நாட்டுக்குச் செய்ய வேண்டிய ஒரு நற்பணியைச் செய்யும் அரிய வாய்ப்பை நான் இழந்துட்டேன்'' என்றான் செழியன் வேதனையோடு.

அரவிந்தன் அவனையே வியப் போடு பார்த்தான்.


''தாய் மொழி மீது பற்றுத் தேவை தான். ஆனால், அதுவே வெறியாக மாறிவிடக் கூடாதுன்னு எங்கப்பா அடிக்கடி சொல்வார். அதோட மற்ற மொழி களைக் கற்றுக் கொள்வதால் அதோட இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு எல் லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம் இல்லையா? நம்மோட உள்ளத்து எண்ணங்களை, கருத்துகளை மற்ற வங்ககிட்டே சொல்ல, அவங்க பேசு வதை நாம புரிந்து கொள்ளப் பாலமாக இருப்பதுதான் மொழின்னு புரிஞ்சுக்கிட்டேன். வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதுதானே நமது இந் தியப் பண்பாட்டின் சிறப்பு? அதனால, தாய் மொழியோடு மற்ற மொழிகளை யும் நாமாக விரும்பிப் படிப்பது நமது முன்னேற்றத்திற்கு மிகவும் நல்லது தான்னு புரிந்து கொண்டேன்.''

''சரி... சரி... கிளாசுக்குக் கிளம்பு. அடுத்த வருடம் இரண்டு பேரும் மலை யாளம் படிக்கலாம்'' என்றான் அரவிந் தன் சிரித்தபடி.


''நாங்களும்டா'' என்றனர் மற்ற நண்பர்கள்.


கணேச சரணம்
கதை: குமரன்
படம்: செல்லம்
விதர்ப்ப தேசத்தை வீமன் ஆண்டான்.
சாருகாசினி! செல்வமும் கீர்த்தியும் இருந்தும் நமக்கு ஒரு குழந்தை இல்லையே...
மந்திரிகளை அழைத்து...
நாங்கள் வனம் சென்று தவம் புரியப் போகிறோம். எங்கள் சார்பில் நீங்கள் இருவரும் இந்நாட்டைக் கண்ணும் கருத்துமாய் ஆண்டு வர வேண்டும்.
ஆறு ஆண்டுகளில் நாங்கள் திரும்பி வராவிட்டால் ஆளுக்குப் பாதியாக ராஜ்யத்தைப் பிரித்து எடுத்துக் கொள்ளுங்கள்.
காட்டில் விசுவாமித்திரரை சந்தித்தனர்.
நல்ல புத்திரன் பிறப்பான்.
எங்கள் மனக்குறை அறிந்து கேட்காமலே வரம் தந்தீர்கள்.
வீமனே! உன் முன்னோர்கள் நாள் தவறாமல் விநாயகரைப் பூஜித்தனர். நீ அலட்சியம் செய்தாய்.
தவறு தான் சுவாமி.



இனி தினந்தோறும் விக்னராஜனை பூஜிப்பேன், அருள் பெறுவேன்.
உன் முன்னோர் பற்றிச் சொல்கிறேன், கேள்...
...சிந்துதேசத்தில் கல்யாண் என்று ஒரு வணிகன், மனைவி இந்துமதி, குழந்தை வல்லாளன்..
கொழு கொழுன்னு எத்தனை அழகு!
வல்லாளன் சூடிகையான சிறுவனாக வளர்ந்தான்...
வாங்கடா! தோப்புக்குப் போய் விளையாடலாம்.
இந்தக் கல்லைப் பாருடா, பிள்ளையார் மாதிரியே இல்லை!
அடடா, ஆமாம்!
கல்லுக்கு யோகம்!
விநாயகரை இங்கே பிரதிஷ்டை செய்வோம்; அபிஷேக நீர் கொண்டாங்க


அபிஷேகம் செய்தனர்.
பிள்ளையாரப்பா! சிவபாலா! காப்பாத்து!
பந்தல் போட்டு, மலர்களால் அலங்கரித்து, தீபாராதனை....
விக்னேசுவரா! கணேசா!
வீதி வலம் வந்தனர்...
கணேசா சரணம்,
சரணம், சரணம், கணேசா!
அவரவர் வீட்டிலிருந்து நிவேதனப் பொருள்கள் கொண்டு வந்தனர்.
தேங்காய், பொரி கடலை.
அப்பம், தயிர்.
சந்தனம், தேன்.
உற்சாகத்தில் சிறுவர்கள் வீட்டையே மறந்தனர். தாய்மார்கள்....
இந்து, உன் பிள்ளையால் எங்க வீட்டுப் பிள்ளைங்களும் கெட்டுப் போறாங்க.
நேரத்தோடு வீடு திரும்பறதில்லை.



வேளைக்குச் சாப்பிடறதில்லே; படிக்கிறதேயில்லே...
பிள்ளையைக் கண்டித்து வளர்க்காதவன் ஒரு அப்பனா!
கல்யாணுக்கு ஆத்திரம் பொங்க...
ஊரார் ஏச்சுக்கு என்னை ஆளாக்கிய வல்லாளனை...
வேண்டாங்க, நல்ல வார்த்தை சொல்லி திருத்துவோம்.
மனைவி பேச்சைக் கேட்காமல் கல்யாண் தோப்பை அடைந்து...
வல்லாளா! உங்க அப்பா வரார். ஒரே கோபமா இருக்கார்.
ஓடுங்கடா!
மகனைப் பிரம்பால் அடித்தார்.
ஏண்டா நீதான் கெட்டுப் போறேன்னா, ஊர்ப் பிள்ளைகளையும் கெடுக்கிறியா!
விநாயகருக்குத் தானே திருவிழா எடுத்தோம்.
கோபத்தில் கல்யாண் பந்தலைப் பிய்த்து, பாத்திரங்களை உருட்டினார்.
நீ படிக்கற பாட்டுக்குத் திருவிழா ஒரு கேடா!




அப்பா என்னை அடித்தாலும் பரவா யில்லை. கோபத்தில் தெய்வ நிந்தனை செய்துட்டீங்களே, மன்னிப்பு கேளுங்க.
ஏண்டா! அப்பனுக்கே உபதேசம் பண்ணுறியா!
மகனைக் கட்டிப் போட்ட கல்யாண்...
இப்ப உன் விநாயகர் வந்து உன்னைக் காப்பாத்தட்டும்!
வீடு திரும்பிய கல்யாணுக்குக் காதும் கேட்கலை, வாயும் பேசலை, பார்வை யும் இல்லை!
என்ன, ஆச்சுங்க?
பே! பே!
இந்துமதி கதிகலங்கினாள்...
ஐயோ! இவருக்கு ஏன் இந்த கதி? தோப்பில் என்ன நடந்தது? வல்லாளன் எங்கே?



தோப்பில் விநாயகர் தோன்ற, கட்டுக்கள் தானாய் அவிழ்ந்தன....
கல்யாணன் தன் தவறுக்குத் தண்டனை அனுபவிக்க ஆரம்பித்து விட்டான்! உனக்கு என்ன வேணும்?
உங்கள் சாந்நித்தியம் இந்தச் சிலையில் என்றும் நிலைக்க வேண்டும்.
அப்படியே ஆகட்டும்.
விநாயகர் மறைய, ஓடி வந்து சேர்ந்த இந்துமதிக்கு
வல்லாளா! என்ன நடந்தது?
அப்பா தெய்வ நிந்தனை செய்து விட்டார்.
...அதற்குரிய தண்டனையை அடுத்த ஜன்மத்திலும் அவர் அனுபவித்தாகணும்; வேறு வழியில்லை.
நீ வீட்டுக்கு வா.
இல்லை, இதுதான் இனி என் இருப்பிடம்.
வல்லாளன் அங்கேயே தவமிருக்க, சிலகாலம் சென்று சிவகணங்கள் தோன்றி...
கணநாதர் உன்னை அழைக்கிறார். புஷ்பக விமானம் அனுப்பியிருக்கிறார்.


வல்லாளன் விமானமேறி விண்ணு லகம் அடைந்தான்.
சிவபாலா! உன் கருணையே கருணை!
விமராஜனுக்கு அவன் முன்னோர் களின் கதையைத் தொடர்ந்து கூறி னார் விசுவாமித்திரர்...
தெய்வ நிந்தனை யால் தண்டனை பெற்ற கல்யாணன் மறுபிறவியில் கூர்நாடக தேசத் தில்...
...மன்னன் வல்லவனின் மகனாகப் பிறந்தான்...
கமலை! நம் குழந்தைக் குப் பார்வையும் இல்லை; காதும் கேட்கலை...
முன் வினைப் பயன்
எனக்குத் தக்கனையும் பிடிக்கலை; இவனைப் பெற்றெடுத்த உன்னையும் பிடிக்கலை; போய் விடு!
ஐயோ! எங்கே போவேன்?
வல்லவன் கருணையின்றி விரட்டிவிட கமலையும் தக்கனும் குண்டினபுரம் அடைந்தனர்.
இந்தக் கோயி லில் இளைப் பாறலாம்.



குண்டினபுரத்தையொட்டிய காட்டில் தவவாழ்க்கை நடத்தி வந்தார் முற்கல முனிவர்...
ஓம், கணேசாய நம: ஓம், விக்னராஜாய நம: ஓம், வக்ரதுண்டாய நம:
பிள்ளையார் கோயிலுக்கு அவர் தரிசனம் செய்ய வந்தபோது, அவர் தேகத்தைத் தழுவிய காற்று தங்கள் உடல் மீது பட...
ஆகா! கண் தெரிகிறதே!
நிஜமாவா! பேசவும் செய்தாயே? என்ன அதிசயம்!
காதும் கேட்கிறது அம்மா!
இருவரும் முற்கல முனிவரை வணங்கி...
நீங்கள் அருகில் வர, இவன் குணமாகி விட்டானே!
விநாயகர் அருள். நாள் தவறாமல் அவனைப் பூஜியுங்கள்.
முனிவர் மந்திரோபதேசம் செய்தார்.
ஏகாக்ஷர மந்திரத்தை ஜபித்து வா.



முனிவரிடம் விடைபெற்று தக்கனும் அம்மையும் கவுண்டின்யபுரம் அடைந்தனர்.
அம்மா! இந்த விநாயகர் ஆலயத்தில் முனிவர் அருளிய மந்திரத்தை ஜபிக்கிறேன்.
பல ஆண்டுகள் தவமிருந்தான் தக்கன்.
ஓம்.. ஓம் ஓம்...
ஒரு நாள்... கவுண்டின்ய புரத்தின் அரசன் இறந்துவிட அமைச்சர்கள் ஆலோசனை...
வாரிசு இல்லாத ராஜ்யமாகி விட்டதே...
ராஜகுரு...
இது போன்ற சந்தர்ப்பங்களில் பட்டத்து யானையிடம் மாலை கொடுத்து அனுப்ப வேண்டும்.
அப்படியே செய்வோம்.
அதன்படி...
யானை, ராஜாவா யாரைத் தேர்ந்தெடுக்கப் போகுதோ!


ஊர் எல்லையில் விநாயகர் ஆலயத்தை அடைந்த யானை, தக்கனுக்கு மாலையிட...
மன்னர் வாழ்க!
வாழ்கவே
தக்கன் தாயை வணங்க...
எல்லாம் நீ பூஜிக்கும் விநாயகர் அருள் தான்.
அரண்மனையை அடைந்த தக்கன்...
மறைந்த மன்னர் சந்திரசேனரின் பட்டத்தரசி சுலபை.
உங்களையும் தாயாகவே கருதுகிறேன்.
முடி சூட்டு விழா...
ஜய விஜயீ பவ!
முற்கல முனிவரை அழைத்து வரச் செய்து, தக்கன்...
வர வேண்டும் முனிசிரேஷ்டரே! தங்களால் இந்த பாக்கியம் அடைந்தேன்.


வல்லவனுக்குச் செய்தி எட்ட...
ஆட, என் மகன் நோய் தீர்ந்து அரசனாகியும் விட்டானா! உடனே போய்ப் பார்க்கிறேன்.
தக்கன் தன் தாயுடன் தந்தையை வரவேற்றான்.
மைந்தா, என்னை மன்னித்துவிடு!
தந்தையே! என் வினை தீர உதவினீர்கள், அவ்வளவே.
பக்கத்து ராஜ்யத்தில் மன்னன் வீரசேனன் கனவில்...
உன் மகளைத் தக்கனுக்கு மணமுடித்துக் கொடு.
வீரசேனன் கவுண்டின்யபுரம் அடைந்து...
வேழமுகத்தோன் கட்டளை. என் மகளை மருமகளாக ஏற்க வேணும்.
மகிழ்ச்சியோடு சம்மதிக்கிறோம்.
தக்கன் திருமணம் கோலாகலமாக நடந்தது.


விசுவாமித்திரர் கதை கூறி முடித்தார்.
பீமனே! இவ்வாறு உன் முன்னோர்கள் விநாயகரைத் துதித்து நற்கதி அடைந்தனர். அந்த வம்சத்தில் நீ ஏழாவது தலைமுறை.
சுவாமி! என் முன்னோர் போலவே நானும் விநாயகரைத் துதித்து வரம் பெறுவேன்.
மந்திரோபதேசம் செய்கிறேன்.
பீமன், விசுவாமித்திரர் சொற்படி நடந்தான். தினந்தோறும்...
ஓம், கணபதயே நம: ஓம், விக்ன ராஜாய நம:
நாளடைவில் புத்திர பாக்கியம் பெற்று மகிழ்ந்தான்...
வாரிசு இல்லையே என்ற மனக்குறை தீர்ந்தது...
கொழு கொழு வென்று பிள்ளையார் போல் ஒரு பிள்ளை!
ஆதாரம்: கார்த்திகேயன் எழுதிய ஸ்ரீ விநாயகர் புராணம், கிரி பதிப்பகம், சென்னை-4.
ஸ்ரீ விநாயகர் புராண

அபிராமியின் அட்டிகை



10. இன்னா செய்தாரை....

பொன்னுசாமியின் ஆள் கடிதத்தை சக்கரவர்த்தியிடம் கொடுத்து விட்டுப் பதிலுக்கு நிற்காமல் போய்விட்டான்.

கடிதத்தை அவசரமாகப் பிரித்துப் படித்த சக்கரவர்த்தியின் முகத்தில் கவலையும், கலவரமும் படர்ந்தது. ''கடவுளே! இது என்ன அநியாயம்!'' என்று தனக்குள் சொல்லிக் கலங்கினார். மேற் கொண்டு என்ன செய்வது என்று தோன்றாமல், நாற்காலியில் கவலையுடன் அப்படியே சாய்ந்து கொண்டார். கண்களில் நீர் பொங்கி கன்னங்களில் வழிந்தது. மெல்ல மேல் துண்டால் துடைத்துக் கொண்டார். அறையில் மாட்டியிருந்த மிகப் பெரிய ராமகிருஷ்ண பரமஹம்சரின் படத்தையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தார். அவர் முகத்தில் படிந்திருந்த கலக்கம் விடை பெற்றுக் கொண்டது!

''மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலா போய் விடுவான்!'' என்று சொல்லிக் கொண்டே கடிதத்தை மடித்து, மேஜைக்குள் வைத்துவிட்டு 'யாரங்கே?' என்று குரல் கொடுத்தார்.''

''என்னய்யா? என்ன செய்யணும்?'' என்று ஏககாலத்தில் கேட்டுக் கொண்டே அபிராமி, குயில், அரவிந்தன், கணபதி என்று எல்லோரும் ஒன்றாக உள்ளே வந்தனர்.

''எல்லாரும் இங்கேயா இருக்கிங்க!'' என்று வியப்புடன் கேட்ட சக்கரவர்த்தி ''உங்களுக்கு ஒன்னுமில்லே. நீங்க எல்லாம் போங்க'' என்றார்.

''எங்களுக்கு ஒன்னுமில்லேங்கறது சரிய்யா. ஆனால், உங்களுக்கு என்னாச்சு? ஏன் என்னவோ போல இருக்கிங்க?'' என்று கேட்டனர் பிள்ளைகள்.

கூத்தபிரான்

''ஐயா, கடிதத்திலே பொன்னுசாமி என்னையா எழுதியிருக்கார்? உங்க முகத்தைப் பார்த்தா எங்க ளுக்குக் கவலையா இருக்கு?'' என்றாள் அபிராமி.

''அது உங்களுக்குச் சம்மந்தமில்லாத விஷயம்.''

''என்னய்யா இது! எங்களைப் பத்தின சமாச் சாரமா இருந்தால்தான் நீங்க கவலைப்படுவீங்க என் பது எங்களுக்குத் தெரியாதா? எங்களைப் பத்தினது இல்லைன்னா, ஏன் இப்படிக் கவலைப் பட்டீங்க? நீங்க கண்கலங்கினதை நாங்க பார்த்தோமே?'' என்று கேட்டாள் அபிராமி.

''அது நிர்வாக சம்பந்தப் பட்டது. உங்களுக்கும் இதுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இப்போ போயி உங்கள் வேலைகளைப் பாருங்க'' என்றார் சக்கரவர்த்தி.

அபிராமி நகருவதாக இல்லை.

''இது என்னுடைய கவ லைம்மா. உங்களுக்கும் இதுக் கும் சம்பந்தமே இல்லை. நீ போய் உன் வேலையைப் பாரும்மா'' என்று சக்கரவர்த்தி மீண்டும் சொன்னார்.



''சந்தோஷத்தைப் பகிர்ந்துக் கிறது சாதாரணம். ஆனால் துன்பத்தைப் பகிர்ந்துக்கிறது தான் மனுஷத்தனம்னு பிரார்த் தனைக் கூட்டத்திலே நேத்து தானே நீங்க விளக்கமாச் சொன் னீங்க? அதனாலதான் உங்க ளுக்கு ஏற்பட்ட கவலையைத் தெரிஞ்சுக்க இவ்வளவு பிடிவாதமா முயற்சி பண்ண றேன். நாங்கள், துன்பங்களைக் கண்டு துவண்டு விடும் வசதியான குழந்தைகள் அல்ல. துன்பம் எங்க ளுக்குப் புதிதும் அல்ல. இங்கே அன்பு இல்லத்திற்கு நாங்கள் வரும் வரை, ஒவ்வொருவரும் வகை வகை யான துன்பங்களை அனுபவித்தவர்கள்தான். அத னால், எதையும் தாங்கும் மன வலிமை எங்களுக்கு உண்டு. ஆனாலும், உங்களுக்குக் கூற விருப்பம் இல்லை என்றால் நாங்கள் வற்புறுத்த மாட்டோம். வர்றேன் ஐயா'' என்று சொல்லிக் கொண்டே அபி ராமி நகர்ந்தாள்.

அவள் வருத்தப்பட்டுக் கொண்டுதான் போனாள் என்பதற்கு அடையாளமாக இரண்டு சொட்டு கண்ணீர்த் துளிகள் தரையில் முத்துப் போல் விழுந்திருப்பதைக் கண்டார் சக்கரவர்த்தி.

''கடவுளே! இந்தச் சிறுமிக்குத்தான் எத்தனை பொறுப்பு! எத்தனை பாசம்! எத்தனை கண்ணியம்!'' என்று தனக்குத்தானே வியந்து கொண்டார் சக்கர வர்த்தி.

அடுத்த நாள் பொழுது விடியும் நேரம். அந்த நேரத் தில்தான் அந்த நாளுக்குத் தேவையான காய்கறிகள், பால், தயிர் எல்லாம் அன்பு இல்லத்திற்கு வரும். அதைக் கவனத்துடன் பெற்று சமை யற் கூடத்தில் சேர்க்கும் பொறுப்பு குயிலுடையது. அதனால் குயில் விடியற்



காலையிலேயே எழுந்து குளித்து விட்டு, பாடப் புத்தகங்களுடன் அன்பு இல்லத்தின் வாசலிலேயே படித்துக் கொண்டு தயாராக நிற்பாள். இரண்டு சைக்கிள்களில் பொன்னுசாமியின் ஆட்கள், சரியாகக் காலை ஐந்து மணிக்கு வருவார்கள். இரண்டு சைக்கிள் மணி யோசையும் சேர்ந்தாற்போல் ஒலிக்கும். பால், தயிர், காய்கறிகள் எல்லாவற்றையும் குயில் வாங்கிக் கொண்டு உள்ளே எடுத்துச் செல்வாள்.

அன்றும் வழக்கம் போல் அதிகாலையில் இருந்தே குயில் காத்துக் கொண்டிருந்தாள். மணி ஆறாகி விட்டது. இன்னும் பொன்னுசாமியின் ஆட்கள் வரவில்லை. வாசலில் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டால் போதும். குயிலின் பார்வை அந்தப் பக்கம் ஓடும். நேரம் ஆக ஆக அவளுடைய தவிப்பு அதிகமானது. கொண்டு வரும் ஆட்களுக்கு வரும் வழியில் ஏதாவது ஆகியிருக்குமோ என்று ஏதேதோ எண்ணத் தொடங்கி விட்டாள்!

சமையல் அறைப் பக்கம் போன அபிராமி விஷய மறிந்து கவலை யோடு குயில் காத்திருந்த இடத்திற்கு வந்தாள். தவிப்புடன் நின்று கொண்டிருந்த குயில் அவளைப் பார்த்ததும், ''இன்னும் வரலே அபிராமி. இதுவரை இப்படித் தாமதமானதே கிடையாது!'' என்றாள்.

எப்போ பால் வந்து, எப்போ பிள்ளைங்க குடிக்கிறது? காய்கறி வந்தால் தானே சமையல்? நாமே வேண்டுமானால் போய்ப் பார்க்கலாமா?'' என்று கேட்டாள் அபிராமி.

''அதான் சரின்னு படறது. வா, போகலாம்''.

குயிலும், அபிராமியும் கிளம்பின போது, சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. மிகவும் ஆவலுடன், ''அதோ எல்லாம் வந்தாச்சு'' என்று துள்ளிக் கொண்டு குயிலும், அபிராமியும் வாசற் பக்கமாக ஓடினர்.

சைக்கிளில் வந்து இறங்கிய இருவரும் பொன்னுசாமியின் ஆட்கள்தான். ஆனால், அவர்களுடைய சைக்கிளில் எதுவுமே இல்லை!

அவர்கள் இருவரும் எதுவுமே கொண்டு வர வில்லை என்பது குயி லுக்கும், அபிராமிக்கும் ஏமாற்றமாகவும் அதிர்ச் சியாகவும் இருந்தது. ஏதோ நடக்கக் கூடாதது ஒன்று நடந்திருக்கிறது என்று அவர்கள் உள் ளுணர்வு கூறியது.

''ஐயா, பால் கொண்டு வரலீங்களா?''

''காய்கறிகள் கூட வரலையே! என் னாச்சு?''

அபிராமியும் குயிலும் மாறி மாறிக் கேட்டார்கள்.

''எங்களுக்கு எது வும் தெரியாதுங்க. நேத்து பால், தயிர் கொண்டு வந்த கேனை யும், கோணிகளையும் மட்டும் இங்கிருந்து கேட்டு வாங்கிக்கிட்டு வரச் சொன்னாங்க'' என் றான் வந்த ஆட்களில் ஒருவன்.

அபிராமியும், குயிலி யும் குழப்பத்துடன் ஒரு வரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அப்போ பால், தயிர் காய்கறிக்கு என்ன செய்யறது?''

''எங்களுக்கு அதெல் லாம் ஒன்றும் தெரியா தும்மா'' ''வழக்கமா நீங்கதானே எல்லாம் கொண்டு வந்து தரு வீங்க? ஏன் இன்னிக்குக் கொண்டு வரலே?''

''தெரியாதுங்க.''

''நாளைக்கா வது வருமா?''

''தெரியாதுங்க. அவங்க கொடுத்தா கொண்டு வந்து கொடுப் போம். நீங்க பால் கேனையும், கோணிப் பைகளை யும் தர்றீங்களா? நாங்க போகணும்?'' என்று பணி வாகக் கேட்டான் ஒருவன்.

அந்த நேரத்தில், பால் கேனுடனும், கோணிப் பைக ளுடனும் உள்ளே இருந்து வந்த சக்கரவர்த்தி, ''இந்தாங்கப்பா.. எடுத்துகிட்டுப் போங்க'' என்று அவர்களிடம் கொடுத்தார். ஆட்கள் இருவரும் அதை யெல்லாம் வாங்கிக் கொண்டு சைக்கிளில் பறந்தார் கள்.

சக்கரவர்த்தி நடந்து கொண்ட விதம், அங்கு நடந் ததை அவர் எதிர் பார்த்தே இருந்தார் என்பதை உணர்த் தியது.

''ஐயா!'' என்றாள் குயில் கவலையுடன்

''இனிமே இப்படித்தாம்மா. நன்கொடையா பால், தயிர், காய்கறி எதுவுமே இனிமே நம்ம பள்ளி விடுதிக்குக் கிடைக்காது. நாம்ப வேறு ஏதாவது ஏற் பாடு செய்தாகணும்.''

''ஏன் ஐயா, இத்தனை ஆண்டுகளாகப் பொன்னு சாமி ஐயா செய்து வந்த உதவிதானே இதெல்லாம்! ஏன் திடீர்னு நின்னு போச்சு?'' என்று பிரமிப்புடன் கேட் டாள் அபிராமி.

''என்னமோ தொடர்ந்து நமக்கு உதவி செய்ய அவர் விரும்பலே. உதவுவதும், மறுப்பதும் அவங்க வங்க விருப்பம்தானே? இந்த விஷயத்தை இதோட



விட்டுடறதுதான் எல்லோருக்கும் நல்லது. நீங்க போயி மத்த வேலைகளைக் கவனிங்க. நான் காய்கறிகளுக்கு ஏற்பாடு செய்துட்டு வர்றேன். இன்னிக்குக் காலை, பால் கிடையாதுன்னு சொல்லி, பிள்ளைகளைப் பள்ளிக்குக் கிளம்பத் தயார் பண்ணுங்க'' என்று சொல்லிவிட்டு வேகமாகப் புறப்பட்டார் சக்கரவர்த்தி.

அபிராமியும் குயிலும் விடுதியின் ஒவ்வொரு அறையாகச் சென்று, அன்று பால் இல்லை என்ற செய்தியைப் பக்குவமாகச் சொல்லிவிட்டுத் தாங்களும் பள்ளிக்குக் கிளம்பலானார்கள்.

வகுப்பில் அபிராமியால் பாடத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. 'பொன்னுசாமி திடீர் என்று தன்னுடைய உதவிகளை நிறுத்திவிடக் காரணம் என்னவாக இருக்கும்? அவர் இளகிய மனம் உடையவர். மற்றவர்க்கு உதவுவதில் மகிழ்ச்சி காண்பவர். அதை அபிராமியே எத்தனையோ முறை கண்ணால் கண்டிருக்கிறாள். அப்படிப்பட்ட நல்ல மனிதர் திடீரென்று இப்படி மாற என்ன காரணம்?'

சக்கரவர்த்திக்கும் அவருக்கும் இடையே ஏதோ கருத்து வேறுபாடு இருப்பதைக் கடந்த சில நாட்களாக அவளால் உணர முடிந்தது. ஆனால், இப்படி இந்தப் பிள்ளைகளையெல்லாம் பட்டினி போடும் அளவுக்கு அது வளர்ந்து விடும் என்பது அவள் எதிர்பாராதது!

இனி சக்கரவர்த்தி என்ன செய்யப் போகிறார்? ஒன்றா இரண்டா? இத்தனை பிள்ளைகளுக்கும் அவர் இரண்டு வேளை யாவது சாதம் போட்டாக வேண்டுமே! அவரால் நன்கொடை வாங்க முடியுமா? பொன்னுசாமியைப் போல் தர்ம சிந்தனை உடையவர்களை எங்கு எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

அன்றாடம் பால், தயிர், காய்கறிகள் வாங்குவது என்றால் விடுதிக்குச் செலவு அதிகமாகுமே? அதைச் சமாளிப்பது என்பது மிகவும் கடினமாயிற்றே. அன்றாடச் செலவுகளுக்கு என்ன ஏற்பாடு பண்ணப் போகிறார்?

சக்கரவர்த்திக்கு ஏற்பட்டுள்ள பிரச்னையைச் சமாளிக்கத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்த அபிராமி, பெரிய குழந்தைகளான குயில், விவேகானந்தன், சரோஜினி, செண்பகம், செந்தில் போன்ற எல்லோரையும் ஒன்று கூட்டிப் பேசினாள். ஒவ்வொருவரிடமும் நிறைய ஐடியாக்கள் இருந்தாலும், அவைகளை நடைமுறைப் படுத்துவதில் பிரச்னைகள் இருந்தன.

கடைசியில் விவேகானந்தன், ''அபிராமி, உன் மனதில் ஏதோ திட்டம் வைத்துத்தான் எங்களைக் கூட்டியிருக்கே. எங்களை விட நீ ஆழ்ந்து யோசிப்பவள். எது நடக்கும்



எது நடக்காது என்பதெல்லாம் உனக்கு நன்கு தெரியும். உன் யோசனையைக் கூறு. கண்டிப்பாக அது நடைமுறைப் படுத்தக் கூடியதாகத்தான் இருக்கும்'' என்றான்.

''ஆமாம் அக்கா. உங்க யோசனையைச் சொல்லுங்க?'' என்றாள் செண்பகம். எல்லோரும் அபிராமியைப் பார்த்தனர்.

''மற்றவரிடம் நன்கொடை கேட்க சக்கரவர்த்தி ஐயா கண்டிப்பா முயற்சி பண்ணுவார். ஆனா, நாமும் நம்மால் ஆனதைப் பண்ண வேண்டும். விடுதியில் இத்தனை அனாதைப் பிள்ளைகள் இருக்கிறோம். நாமே பக்திப் பாடல்களையும், தேச பக்திப் பாடல்களையும் பாடிக் கொண்டு தெருத் தெருவாக, கிராமம் கிராமமாகச் சென்று நன்கொடை கேட்டு வந்தால் என்ன?'' என்று தன் யோசனையை முன்னே வைத்தாள் அபிராமி.

''நல்ல யோசனை. நம்மைப் பார்த்தால் கண்டிப்பாக உதவ வேண்டும் என்ற எண்ணம் பிறக்கும்.''

''அப்படியே செய்வோம்.''

''நம்ம ராமுகிட்டே சொல்லி, பெரிய பெரிய அட்டைகளில் 'பொருள் கொடுப்பீர், உதவி செய்வீர்', 'விடுதிக் குழந்தைகளைக் காப்பீர்', 'நிதி உதவி செய்வீர்' அன்பு இல்லம் காத்திடுவீர்'' என்று பெரிதாக எழுதப்பட்ட அட்டைகளையும், தூக்கிக் கொண்டு போவோம்.''

அபிராமியின் யோசனை நன்கு விவாதிக்கப்பட்டு ஏற்கப்பட்டது.

'அப்புறம் ஒரு விஷயம். நம்ம பள்ளியில் ஒரு கை வண்டியிருக்கு இல்லியா? அதிலே நிறைய கோணிப் பைகளையும், காலி டின்களையும் ஏற்றி இழுத்துக்கிட்டுப் போவோம். பொது மக்கள் இரக்கப்பட்டு என்ன உதவி செய்யறாங்களோ செய்யட்டும். எல்லாத்தையும் வாங்கி அவற்றில் நிரப்பிக்கிட்டு வருவோம்'' என்று அபிராமி சொல்லி முடித்தாள்.

யாரோ கைதட்டும் சத்தம் கேட்டது! ''சபாஷ் அபிராமி'' என்று சொல்லிக் கொண்டே சக்கரவர்த்தி வந்தார்.

''இத்தனை நேரமும் நான் இங்கே தாம்மா இருந்தேன். உன்னுடைய பொறுப்புணர்ச்சி, நடைமுறைப் படுத்தக் கூடிய யோசனையே. இல்லத்தின் மேல் நீ வெச்சிருக்கிற அன்பு, நன்றி உணர்வு, எல்லாத்தையும் நினைக்கும் போது, நீ ஒரு வித்தியாசமான குழந்தை என்ற என் எண்ணம் உறுதியாகிறதும்மா'' என்றார் சக்கரவர்த்தி.

அடுத்த நாள் பள்ளிக்கு விடுமுறை. பிள்ளைகள் தயாராகிவிட்டனர். ஹார்மோனியப் பெட்டியைக் கழுத்தில் கட்டிக் கொண்டு அரவிந்தன்! குட்டி மிருதங்கத்தை மாட்டிக் கொண்டு விவேகானந்தன்! கையில் ஜால்ரா, சிப்ளாக் கட்டையுடன் மற்ற குழந்தைகள். கோலாட்டக் கழிகளுடன் சில குழந்தைகள். குயிலி கருவிப் பெட்டியை எடுத்துக் கொண்டாள். அன்பு இல்லத்திலிருந்து ஒரு பெரிய ஊர்வலமே அபிராமி தலைமையில் புறப்படத் தயாராயிருந்தது. ஊர்வலத்தின் பின்னால் வர பெரியசாமியும், மாணிக்கமும் கட்டை வண்டியுடன் தயாராக இருந்தனர்.

சக்கரவர்த்தி, குழந்தைகளின் உற்சாகத்தையும் பரந்த எண்ணத்தையும், எண்ணி எண்ணிப் பரவசப்பட்டபடி நின்றிருந்தார்.

அபிராமி, சக்கர வர்த்தியிடம் வந்து, ''ஐயா, எங்களை வாழ்த்தி அனுப்புங்க'' என்று வணங்கினாள்.

''நல்ல செயல், நல்ல எண்ணம், நல்ல முயற்சி எல்லாம் என்றுமே தோல்வி கண்டதில்லை. போயிட்டு வாங்க, சின்னப் பிள்ளைகளைக் கவனமா பார்த்துக்குங்க'' என்று குரல்

''உங்க மகன் விடிய விடிய படிச்சான்னு சொல்றீங்க. அப்ப ஏன் பரீட்சையில் பெயிலாயிட்டான்?''

''அவன் படிச்சது எல்லாம் கதைப் புத்தகம் ஆச்சே!''

- ஆ. செல்வராஜ்.



தழுதழுக்கச் சொல்லி அனுப்பி வைத்தார் சக்கரவர்த்தி.

ஊர்வலம் கிளம்பியது. பிள்ளைகள் பக்திப்பாடல்களையும், தேச பக்திப் பாடல்களையும் பாடிக் கொண்டு புறப்பட்டார்கள். ஆரம்பத்தில் இந்த ஊர்வலத்தை யாரும் சரியாகக் கவனிக்கவோ, உதவி செய்யவோ முன்வரவில்லை. இரண்டு மூன்று தெருக்களில் ஒரு சிலர் அரிசி, பருப்பு, காசு என்று கொடுத்தார்கள். பிரதான சாலையை அன்பு இல்லக் குழந்தைகள் கூட்டம் நெருங்கிய போதுதான் பலரது கவனித்தையும் அது கவர்ந்தது. ஊர்வலத்தின் நோக்கத்தைப் புரிந்து கொண்டதும், இது ஏமாற்று ஊர்வலம் அல்ல. ஆதரவு தர வேண்டிய ஊர்வலம் என்பதை உணர்ந்து அவர்களாகவே உதவ முன் வந்தார்கள். பிரதான சாலையின் நடுப்பகுதியை அபிராமியும், குழந்தைகளும் அடைந்த போது மளிகைக்கடைக்காரர்கள் அரிசி, பருப்பு என்றும், மற்ற, பல கடைக்காரர்கள் எண்ணெய், காய்கறி, விறகு என்றும் வண்டியில் கொண்டு வந்து குவித்தார்கள். குழந்தைகள் உண்டியலில் ரூபாய் நோட்டுக்கள் அடையத் தொடங்கின. அத்தனையையும், குயில் பொறுப்பாகப் பெற்றுக் கொண்டு தலை வணங்கி நன்றி தெரிவித்தாள். அபிராமியின் தேச பக்திப் பாடலும், பக்திப் பாடலும் களைகட்டியது. சில கடைக்காரர்கள் அவர்களை நிற்க வைத்து சில நிமிஷங்கள் பாடச் சொல்லிக் கேட்டுப் பணம் கொடுத் தார்கள்.

அபிராமி பாடிய பஞ்சாபிப் பாடலைக் கேட்டு மனமகிழ்ந்த ஒரு பஞ்சாபி தனது நன்கொடையாக ஒரு மூட்டை சம்பா கோதுமையைக் கொடுக்க முன் வந்த போது எல்லோரும் திணறினர். குழந்தைகளின் வேண்டு கோளுக்கிணங்க, அவரே அதை நேரிடையாக அன்பு இல்லத்திற்கே அனுப்பி வைத்து விடுவதாகச் சொன்னார்.

பொது மக்கள் அளித்த ஆதரவால் திக்குமுக்காடி நெகிழ்ந்து போன குழந்தைகள், ஊர்வலத்தை ஓர் இடத்தில் முடித்துக் கொண்டு திரும்பினர்.



"ஒண்ணு ரெண்டு சொல்லு பார்க்கலாம்."

"ஒண்ணு ரெண்டு!"

"ஏன் நிறுத்திட்டே?"

"நீங்க ஒண்ணு, ரெண்டு மட்டுந் தானே சொல்லச் சொன்னீங்க!"

- ஆர். கார்த்திகேயன்.

குழந்தைகள் முயற்சியால் கிடைத்த பொருள்களையும், பணத்தையும் கண்ட சக்கரவர்த்தி பிரமித்துப் போனார். அபிராமியும் மற்றவர்களும் உண்டிப் பணத்தை எண்ணி, சரிபார்த்து திகைத்துப் போனார்கள். இரண்டாயிரத்துக்கு ஐம்பது காசு குறைவாக இருந்தது. உடனே இல்லத்திலிருந்த ஏழைப் பையன் ராமு தன்கைவசம் செலவு செய்யாமலேயே வைத்திருந்த ஐம்பது காசு நாணயத்தைப் போட்டு இரண்டாயிரம் ஆக்கினான்.

பணத்தை சக்கரவர்த்தியிடம் கொடுத்த அபிராமி 'ஐயா' இது ஆரம்பம் தான். போகப் போக அதிகமாகும் என்று நம்புகிறேன்' என்றாள்.

"உன்னுடைய இந்த லீடர்ஷிப் இருக்கே, இதை வர்ணிக்க வார்த்தை களேயில்லை. இறைவன் உங்களை ஒரு குறைவும் இல்லாமல் காப்பாற்றுவான்' என்று சொல்லி ஒவ்வொரு குழந்தையின் கையையும் குலுக்கி, தலையைத் தொட்டு ஆசீர்வாதம் செய்தார் சக்கரவர்த்தி.

"ஐயா! இந்தப் பணமும் பொருளும் இப்போதைக்குப் போதுமா?" என்று அபிராமி கேட்டாள்.

"ஒரு வாரத்திற்குப் போதும்மா" என்று பரவசப்பட்டுச் சொன்னார் சக்கரவர்த்தி.

அன்று இரவு எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அபிராமிக்கு மட்டும் உறக்கம் வரவில்லை. என்னவோ நடக்கப் போகிறது என்று அவளுடைய உள்ளுணர்வு எச்

சரிந்தது. அதற்கு ஏற்றபடி கூரையில் ஏதோ சத்தம் கேட்டது.

அபிராமி எழுந்து உட்கார்ந்து கொண்டாள். பக்கத்தில் படுத்திருந்த குயிலும் 'விசுக்'கென்று எழுந்து கொண்டாள்.

''கூரை மேல் யாரோ நடக்கிற சத்தம் போல இல்லே?'' என்று மெல்லக் கேட்டாள் குயில்.

''ஆமாம்'' என்று தலையாட்டினாள் அபிராமி. இருவரும் மெல்ல எழுந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தனர்.

குப்பென்று மண்ணெண்ணெய் நாற்றம் அடித்தது. அடுத்த நிமிஷம், ''ஐயோ அம்மா'' என்று யாரோ அலறும் சத்தம்! தொடர்ந்து கூரையில் யாரோ உருண்டது கேட்டது. ''பொத்து'' ''பொத்தென்று'' கூரையில் இருந்து மூன்று பேர் கீழே விழுந்தனர்!

அபிராமி 'அரிக்கேன்' விளக்கைப் பெரிதாக்கிக் கொண்டு வெளியே வந்தாள். பின்னாலேயே குயில். இதற்குள் சத்தம் கேட்டு மற்ற குழந்தைகளும் விழித்துக் கொண்டனர். சக்கரவர்த்தியும் ''என்ன சத்தம்? யார் அலறியது?'' என்று கேட்டுக் கொண்டே பரபரப்புடன் வந்து விட்டார்.

முற்றத்தில் மூன்று பேர் விழுந்து கிடந்தார்கள். இருவருக்குக் கையில் அடி. மற்றவர் மயங்கிக் கிடந்தார்.

''இவங்க மூணு பேரும் பொன்னுசாமி கடையில் வேலை பண்றவங்க ஆச்சே!'' என்று வியப்போடு கூறினார் சக்கரவர்த்தி.

''ஆமாம் ஐயா. நான் சோலை, இவன் மருதன், அவன் ராசு. நம்ம வீட்டுக் கூரையில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைக்கும்படி எங்க ஐயா எங்க மூணு பேரையும் அனுப்பினாருங்க. நாங்க எத்தனையோ மறுத்தோம். கேட்கலே. செய்யலேன்னா, வேலைக்கு சீட்டுக் கிழிச்சிடுவேன்னு பயப்படுத்தினாரு. அதான் கடைசியில் இஷ்டமில்லாம இந்தப் பாவச் செயலைப் பண்ண வந்தோம். மண்ணெண்ணெயைக் கூட கூரையில ஊத்திட்டோம். தீக்குச்சி கிழிக்க வேண்டியதுதான் பாக்கி. சாமிக்கே இது பொறுக்கலே போல இருக்கு. மருதன் காலில் பாம்பு கடிச்சிடுச்சி. அவன் கத்தின கத்தலில் நாங்களும் நிலை தடுமாறி உருண்டு விழுந்திட்டோம். எனக்குக் கையைத் தூக்க முடியலே. ராசுவுக்குத் தலையில் அடி. மருதன் மயங்கிக் கிடக்கிறான். பாவ காரியத்தைப் பண்ண வந்ததற்குச் சரியான தண்டனையை சாமி கொடுத்துட்டுதுங்க'' என்று அலறினான் சோலை.

அபிராமி ஓடிப் போய் முதலுதவிப் பெட்டியை எடுத்து வந்தாள். இரத்தக் கசிவைத் துடைத்து தொட்டில் கட்டுப் போட்டனர். பாம்புக் கடிக்கு இலக்காகியிருந்த மருதன் இன்னும் மயங்கியே கிடந்தான்.

''ஐயா, இந்த மூன்று பேரையும் உடனே மருத்துவமனைக்கு எடுத்துக் கிட்டுப் போறதுதான் நல்லது.'' என்றாள் அபிராமி.

''இவங்களையா! இவங்க நம்ம வீட்டுக்குத் தீவைக்க வந்தவங்க'' என்று குழந்தைகள் துடித்தன.

''இவங்க தாங்களாகவே வரலே. யாரோ பலவந்தமா அனுப்பி வந்திருப்பவங்க. விரோதியா இருந்தால் கூட ஆபத்தில் உதவுவதுதான் மனிதத் தன்மை. ஒரு தவறை இன்னொரு தவறால் சரி செய்து விட முடியாது'' என்றாள் அபிராமி.

அதற்கு மேல் பிள்ளைகள் விவாதிக்கவில்லை. அபிராமியின் விளக்கம் முழு மன நிறைவை அளித்திருக்க வேண்டும். விவேகானந்தனும், அரவிந்தனும் கை வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். ஒரு பெரிய ஜமுக்காளத்தை விரித்து மூவரையும் அலக்காக வண்டியில் வைத்தார்கள். அரவிந்தனும், விவேகானந்தனும் முன்னே இழுக்க, அபிராமியும் குயிலும் பின்னே இருந்து தள்ள வண்டி நகர்ந்தது.

''அபிராமி'' என்று குரல் தழுதழுக்க அழைத்தார் சக்கரவர்த்தி.

''நீங்கள் என்ன கூறப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும் ஐயா. பொன்னுசாமி ஐயாவின் பெயர் வெளியே வராது. அவர் எனக்கும் சாதம் போட்டிருக்கிறார் அல்லவா?'' என்று சிரித்தாள் அபிராமி.

வண்டி வேகமாக நகர்ந்தது!

(தொடரும்)

வீட்லதான் இருக்கும்


அம்மாவின் குரல் ஓங்கிக் கேட்டது.

''ஏண்டா புஸ்தகப் பையை இப்படி வீசி எறியறே? இப்படி எறியாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்?''

பள்ளி விட்டு வந்து புத்தகப் பையை வீசியெறிந்த முருகனைத்தான் கடிந்து கொண்டாள் அம்மா. அம்மாவின் குரலில் கோபத்தைவிட ஆதங்கமே அதிகம் தெரிந்தது.

''எங்கேம்மா போயிடப் போகுது? நம்ம வீட்லதானே இருக்கும்!'' என்று பதில் சொல்லிவிட்டு ஓரே ஓட்டமாக விளையாடப் போய் விட்டான் ஆறாம் வகுப்பில் படிக்கும் முருகன்.

எப்பவுமே முருகன் இப்படித்தான். எத்தனையோமுறை நல்லபடியா அப்பா சொல்லிப்பார்த்தாச்சு. அம்மா கடிந்து



பார்த்தாச்சு. முருகன் திருந்துவதாகவே இல்லை. இருந்தாலும் படிப்பிலும் விளையாட்டிலும் முருகன் படுசுட்டி. வகுப்பில் அவன்தான் முதல் ரேங்க்! குறும்பு எல்லாம் செய்து தொல் லைப்படுத்த மாட்டான். ஆனால், எடுத்த பொருளை மட்டும் எடுத்த இடத்தில் வைக்கும் குணம் அவனிடம் இல்லை. அவன் முதல் ரேங்க் என்பதால் அப்பாவுக்கு அவனைப் பற்றி ஏகப் பெருமை! ஓரே செல்லம்தான்! அம்மா அவனை மாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை.

இன்னும் சற்று நேரத்தில் விளையாடச் சென்ற முருகன் வந்துவிடுவான். வரும்போதே ''அம்மா, பால் ரெடியா?'' என்று கேட்டுக் கொண்டேதான் வருவான். அம்மா பால் காய்ச்ச எழுந்தாள்.

''உள்ளே நுழையும்போதே ''அம்மா பால் ரெடியா?'' என்று அவசரம் அவசரமாகக் கேட்டுக் கொண்டே களைப்பாக வந்த முருகன் நேராகக் குளியலறைக்குச் சென்று முகங்கழுவி வந்து பாலைக் குடித்தான். வீட்டுப் பாடங்களை எழுத ஸ்கூல் பையை எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந்தான். நோட்டுப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு பேனாவுக்காக பையைத் துழாவினான்.

''அம்மா! என் பேனாவை பார்த்தீங்களா?''

''என்னடா இது? நீதானே ஸ்கூல் பையை வீசி எறிஞ்சிட்டுப் போனே? இப்போ என்னைக் கேட்டா என்ன அர்த்தம்? எந்தப் பொருளையும் எடுத்த இடத்திலேயே திரும்பவைன்னு சொன்னாக் கேட்டாத்தானே!''

அந்தப் பேனா முருகனின் பிறந்த நாளுக்காக மாமா அன்புப் பரிசாகக் கொடுத்தது. பளபளவென்று பொன்னிறக் கலரில் கையில் எடுக்கும் போதே சுகமாக இருக்கும். ''ஆறாவது படிக்கிற பையனுக்கு இப்போது எதுக்கு பேனா?'' என்று அம்மா முட்டுக் கட்டை போட்ட போதும் மாமா ஆசை யோடு வாங்கிக் கொடுத்த பேனா அது.

''பார்த்து விட்டுத் தருகிறேன்!'' என்று நண்பர்கள் கேட்டபோது கூட மறுத்து விட்டான் முருகன். அப்படிப் பட்ட பேனாவைக் காணவில்லை என்றால் எப்படியிருக்கும்?''

''விளையாடப்போன இடத்துல எங்கயாவது கைமறதியா விட்டுவிட்டு வந்திட்டியா? எதுக்கும் போய்ப் பார்த்திட்டு வா!'' என்றாள் அம்மா.

ஆர். சி. மதிராஜ்

ஒரு நப்பாசையுடன் விடுவிடென்று விளையாடிய இடம் சென்று தேடிய முருகன் வெறுங்கையோடு திரும்பி வந்தான். அவனுடைய குணத்திற்கு இது வேண்டும்தான் என்றாலும், மகனின் முகத்தைப் பார்க்க, பார்க்க அம்மாவுக்கும் கவலை யாக இருந்தது.

''பையை எங்கே கொண்டு வந்து வீசி எறிஞ்சே?''

''பெஞ்சுக்குக் கீழேம்மா!''

''சரி பெஞ்சுக்குக் கீழேயும் பார்த்துடலாம்'' என்று பெஞ்சிமேல் இருந்த சாமான்களை எடுத்து வைத்துவிட்டு, பெஞ்சை நகர்த்தினாள் அம்மா.

''அதோ அந்த மூலையில இருக்குமா!'' என்று மகிழ்ச்சிக் குரல் கொடுத்த முருகன் பேனாவை எடுத்து ஆவலுடன் தடவிப் பார்த்தான்.

''பார்த்தியா, நீ பையைக் கொண்டு வந்து வீசின வேகத்தில் பேனா மட்டும் இங்கே வந்து விழுந்திருக்கு! இதுக்குத்தான் பொருள்களை எடுத்தா, கவனமா அதனதன் இடத்தில் வைக்கணும்னு சொல்றேன். புரிஞ்சுதா?''

''இப்ப எங்கம்மா போயிடுச்சு? எனக்குத் தெரியும் நம்ம வீட்டிலதான் இருக்கும்னு!'' என்று கூறிய மகனை வேதனையோடு பார்த்தாள் அம்மா...

''ஹூம் இப்பக் கூட இவன் திருந்துவதாக இல்லை! திருந்துவானோ, இல்லை இப்படியே இருந்து விடுவானோ!

ஆறாம் வகுப்பு மாணவர்கள் மிகவும் அமைதியாக அமர்ந்திருந்தனர். வகுப்பு ஆசிரியர் அமலநாதன் மாணவர் களுக்கு அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்!

''மாணவர்களே! இந்த ஆண்டு முழுக்க நீங்கள் எப்படிப் படித்திருக்கிறீர்கள் என்பதைக் காட்டுவதற்கான வாய்ப்பு நாளைக்கு ஆண்டுத் தேர்வின் முடிவில் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. ஒவ்வொருவரும் கவனத்துடன் படித்து நல்ல மதிப் பெண் பெற என் வாழ்த்துகள்!''

வாழ்த்துக் கூறிய ஆசிரியர் ''முருகா! எல்லாத் தேர்விலும் முதல் மதிப்பெண் எடுக்கும் மாணவன் நீ. இறுதித் தேர்விலும் நீ முதலாவதாக வர வேண்டும்'' என்றார்.

''நிச்சயம் வருவேன் சார்'' - நம்பிக்கையுடன் கூறினான் முருகன்.

அன்று மாலை முருகன் வழக்கம் போல் சற்று நேரம் விளையாடிவிட்டு புத்தகப்பையை எடுத்துக் கொண்டு படிக்க அமர்ந்தான். எதையோ தேடி பையில் துழாவினான். முகத்தில் கலவரம் படர்ந்தது.

''அம்மா! என் பையிலேந்து ஏதாவது புத்தகம் எடுத்தீங்களா?''

உனக்கு இதே வேலையாப் போச்சு போ! நான் எதுக்கு உன் பையை எடுக்க



றேன். என்னத்தைக் காணோம்? பேனாவா இல்லை குறிப்பேடா?''

''அம்மா, நாளைக்கு முழு ஆண்டு தமிழ்ப் பரிட்சைம்மா. தமிழ்ப் புத்தகத்தைக் காணலை''- முருகனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

''இப்போ அழுது என்ன பயன்? சொன்ன போதெல்லாம் கேட்டியா? ஒழுங்கா உன்னோட பொருளைப் பத்திரமாப் பாதுகாத்துக் கொண்டால் இவ்வளவு சிரமம் கவலையே இல்லையே?''

''என்னை மன்னிச்சுடும்மா... நீங்க சொன்னபோதெல்லாம் எனக்குப் புரியலே. இப்போதான் என் தவறு தெரியுது''


முருகனின் நண்பன் செல்வகுமார் அவசரம் அவசரமாக உள்ளே வந்தான்.

''முருகா! இந்தா உன் தமிழ்ப் புத்தகம். வகுப்பிலேயே விட்டுட்டு வந்திட்டியே? நான்தான் பார்த்தேன். நாளைக்குத் தேர்வாச்சேன்னு நான்தான் எடுத்துக்கிட்டு வந்தேன். இப்படியா பொறுப்பில்லாம நடந்துக்கிறது?'' என்று முருகனை உரிமையுடன் கடிந்து கொண்டான்.

''மிகவும் நன்றிடா குமார்!'' என்று நா தழுதழுக்கக் கூறினான் முருகன்.

இப்பொழுதெல்லாம் முருகன் எந்தப் பொருளையும் அலட்சியமாக விட்டெறிவதே இல்லை. தனது உடைமைகளை, குறிப்பாக புத்தகங்களையும், குறிப்பேடுகளையும், பேனாக்களையும் கவனமாகப் பார்த்துக் கொள்கின்றான் என்பதைக் கூறவும் வேண்டுமோ?





நெல்லூர் கிராமத்தில் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானுக்கு ஓர் அழகான சிறிய கோவில் இருந்தது. ஊர் மக்கள் இராமபிரானிடம் அளவில்லாத அன்பு கொண்டவர்கள்.

அதே கிராமத்தில்தான் பொன்னன் இருந்தான். அவனுக்குத் தொழில் சலவை செய்வது. அவன் கடினமான உழைப்பாளி. அவன் மனைவியும் அப்படித்தான். இருவரும் இராமபிரானின் மேல் அளவிட முடியாத அளவுக்குப்

பொன்தட்டு


பக்தி கொண்டவர்கள். சமைக்கும் போதும் சரி, துணி துவைக்கும் போதும் சரி இருவரும் இராமனின் திவ்ய நாமத்தை மனத்துள் எண்ணியபடியே இருப்பார்கள். எல்லாவற்றையும் விடக் குறிப்பிடத்தக்கது அவர்களுடைய இரக்க மனம்தான். உதவி என்று யார் வந்து கேட்டாலும் சரி, அவர்கள் தயங்காது உதவுவார்கள்.

பணியைப் பொறுத்தவரை பொன்னனும் சரி, அவன் மனைவியும் சரி சொன்ன சொல் தவறாதவர்கள். குறித்த காலத்தில் துணிகளை வெளுத்துக் கொண்டு வந்து தருவார்கள். இருவரும் இராமனிடம் அளவில்லாத பக்தியுடையவர் களாக இருந்தாலும், ஒரு நாள் கூடக் கோவிலுக்குள் வந்து சாமியை வணங்கியது கிடையாது. காரணம், அவர்களுக்கு அதற்கு நேரம் கிடையாது. கோவில் வாசலில் இருந்தபடி, ''ராமா, எல்லாம் நீதான்'' என்று கையெடுத்துக் கும்பிட்டுப் போவார்கள்.

ஒருநாள் இராமருக்கு அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. ஊர் மக்கள் அனைவரும் அங்கே திரண்டிருந்தனர். திடீரென்று வானத்தில் இருந்து வட்ட வடிவில் ஒரு ஜோதி தெரிந்தது. அது பறந்து வந்து சன்னதியின் முன் நின்றது. அதிலிருந்து கோடி சூரியப் பிரகாசம் ஒன்று கூடியது போன்ற கண் கூசும் ஒளி வீசியது! அது ஓர் அழகான பொன் தட்டு!



''இந்தப் பொன் தட்டு, என்னிடம் மாறாத அன்பு கொண்ட உண்மையான பக்தன் ஒருவனுக்கு எனது பரிசு. அந்த பக்தன் தொட்டதும் இது இன்னும் பல மடங்கு ஒளி வீசும்!'' என்று அசரீரி கேட்டது.



"இராமரிடம் மாறாத அன்பு கொண்டவன் நான்தான். எத்தனை ஆண்டு காலமாக இராமருக்குப் பூஜை செய்து கொண்டு வருகிறேன் தெரியுமா?" என்று தட்டைத் தொட்டார் கோவில் அர்ச்சகர்.

"நான் எத்தனை வருஷங்களாக எத்தனை அழகழகான வாசனை மலர்களால் இராமருக்கு மாலை கட்டித் தருகிறேன் தெரியுமா?" என்று கேட்டார் பூக்காரர்.

"நான் எத்தனை வருஷமாக இராமருக்கு அபிஷேகம் பண்ண கைவலிக்க சந்தனம் அரைத்துத் தருகிறேன் தெரியுமா?" என்று முன்வந்தார் கோவில் பண்டாரம்.


"இராமருக்கு நைவேத்தியம் வைக்க எத்தனை வகையான இனிப்பு பலகார வகைகளைச் செய்து தந்து தொண்டு செய்து வருகிறேன் தெரியுமா?" என்று முன்னே வந்தார் கோவில் மடைப்பள்ளி சமையற்காரர்.

"நான் இதுவரை பத்து லட்சம் முறை இராமஜெயம் எழுதியிருக்கிறேன். நான்தான் உண்மையான பக்தை" என்று முன்னே வந்தாள் அம்முப் பாட்டி.

"இதுவரை எத்தனை முறை இராமாயணம் படித்து, ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாத்தி, பானகம் பண்ணி பூஜை செய்திருக்கேன் தெரியுமா?" என்று முன்னே வந்தாள் பஜனைப் பார்வதி அம்மாள்.

இவர்களையெல்லாம் 'க்யூ' வரிசையில் நிற்க வைத்து பொன் தட்டைத் தொட வைத்தார் கோவில் அதிகாரி. இவர்கள் தொட்ட மாத்திரத்திலேயே தட்டு ஒளிமங்கி கறுத்துப் போனது. அடுத்தபடியாக ஊரில் உள்ள எல்லோரையும் வரவழைத்தார் அதிகாரி. எல்லோருக்கும் அதே கதிதான்.

''யாருக்குத்தான் இந்த அதிசய தங்கத் தட்டும் இராமபிரானின் அருளும் கிடைக்கப் போகிறதோ?'' என்று வியந்து கொண்டனர் அனைவரும்.



அந்த நேரம் பார்த்து பொன்னனும் அவன் மனைவியும் தோய்த்த துணி மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு அங்கே வந்தனர். வழக்கப்படி ''ராமா, எல்லாம் எனக்கு நீதானப்பா'' என்று கோவில் வாசற்படியில் நின்று கொண்டு கணவனும் மனைவியும் கைகூப்பிக் கத்தினார்கள்.

அதிகாரிக்கு என்னவோ தோன்றியது.

''பொன்னா, நீ உன் மனைவியைக் கூட்டிக் கொண்டு உள்ளே வா. இந்தப் பொன் தட்டைத் தொடு'' என்று அழைத்தார்.

''ஐயையோ! இவன் ஒரு தடவை கூடக் கோவிலுக்கு வந்து ராமரைத் தொழாதவன். இவனா உண்மையான பக்தனா இருப்பான்?'' என்று கிண்டல் பேசினர் அனைவரும்.

''ஐயா. இவங்க சொல்றது உண்மை தானுங்க. எனக்கு எதுக்குங்க இந்த தட்டு கிட்டு எல்லாம்?'' என்று நகர்ந்தான் பொன்னன்.

''இல்லை பொன்னா. நீயும் உன் மனைவியோடு வந்து தொட்டு விட்டுப் போ'' என்று அழைத்தார் அதிகாரி.

''இப்ப முடியாதுங்க. எனக்கு வேலை தலைக்கு மேலே கிடக்கு. இந்தத் துணியை உரியவங்ககிட்ட ஒப்படைக்கணும். என் கழுதையைக் கூட்டிக்கிட்டு ஆற்றைக் கடந்து அக்கரைக்கு வைத்தியர் வீட்டுக்குப் போகணும். யாருக்கோ கபஜுரமாம். மருந்து பண்ண கழுதைப் பால் வேண்டுமாம். அதுக்கு மேலதான் நான் திரும்பி வந்து குளிச்சிட்டு தட்டைத் தொட வரணும். நம்மால் முடியாதுங்க'' என்றான் பொன்னன்.

''பரவாயில்லை பொன்னா, உள்ளே வந்து தட்டைத் தொட்டு விட்டுப் போக எத்தனை நேரம் ஆகப் போகிறது? நாள் முழுக்கத் தண்ணீரில் இருந்து கொண்டுதானே துணி துவைக்கிறாய்? உனக்குத் தனியாகக் குளியல் எதற்கு? உள்ளே வா'' என்று கெஞ்சினார் அதிகாரி.

''வேண்டாங்க. ஒருவேளை அந்தத் தட்டை நான் தொட்டு, என் போதாத காலம் அது எனக்குத்தான்னு உறுதியாயிட்டா, அதை வைச்சுக்கிட்டு நான் என்ன பண்ணறதுங்க? வேண்டாம். மருந்துக்குப் பால் கறந்து தர முடியாது. என் காரியம் எல்லாம் கெட்டுப் போகும். அப்படி அந்த ராமருக்கு என் பக்தியிலும், அன்பிலும் சந்தோஷம் என்றால், அவரே அந்தத் தட்டை என் பின்னால் வரும்படி செய்யட்டுமே? ஆகாசத்துலேருந்து அந்தத் தட்டை



இங்கே அனுப்பியவருக்கு, அந்தத் தட்டை என் பின்னால் வரவழைக்க முடியாதா? இந்தத் தட்டு, பரிசு எல்லாத்தையும் எதிர்பார்த்தா நான் பக்தி பண்ணறேன்? இந்தப் பரிசு எனக்குக் கிடைச்சாலும் கிடைக்காட்டாலும் ராமர் எனக்குத் தெய்வமுங்க. எனக்கு எல்லாம் அவர்தானுங்க'' என்று கழுதையை விரட்டிக் கொண்டு தெருவோடு மனைவியுடன் நடந்தான் பொன்னன்.

கோவிலுக்குள் பெரிய சப்தம் கேட்டது. பளபளத்துக் கொண்டிருந்த அந்தப் பொன் தட்டு, இராமர் சன்னதியில் இருந்து கிளம்பி உருண்டது. படிகளில் ஏறி இறங்கி, மக்கள் கூட்டத்தைக் கடந்து, கோவிலின் பெரிய வாசற்படியையும் தாண்டி, கழுதைக்குப் பின்னால் தெரு மண்ணில் புரண்டு பொன்னனுக்குப் பின்னால் சென்றது!

மக்கள் மலைத்தனர்!

- அ. கமல், திருக்கண்ணங்குடி.

பேசிய பேனா

பையில் இருக்கும் பேனா
பைய ஒருநாள் தானாய்
ஐய! பேசியது தேனாய்
அசந்து போனேன் நானாய்!

'என்னில் மையை ஊற்றுகிறார்
ஏதோ தாளில் கீற்றுகிறார்;
பின்னர் அதனை மாற்றுகிறார்
பிறகும் மனதைத் தேற்றுகிறார்!

கற்பனைக் குதிரையை முடுக்குகிறார்
காணும் கருத்தை அடுக்குகிறார்
கற்றவை அனைத்தும் தொடுக்கின்றார்
காகிதம் கணக்கில முடிக்கின்றார்!

இயலோ இசையோ நாடகமோ
ஏதோ ஒன்று எழுதியவர்
புயலாய்ச் சீறி அனைத்தையுமே
பயனிலை என்றே கிழித்திட்டார்!

நல்லது அல்லது எல்லாமே
நாளும் என்னால் எழுதுகிறார்
சொல்லில் வேற்றுமை கற்பனையே
சோரா திருத்தல் என்கடமை!

- ச. ஆ. கேசவன், கழுசாலபுரம்.



பந்தயம்

நாகேஷ், பிரகாஷ் இருவரும் நல்ல நண்பர்கள். இருவருக்குமே வகுப்பில் முதல் இரண்டாவது இடம்தான்.

ஒருநாள் பிரகாஷ் நாகேஷைப் பார்த்து ''நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதில் நீ வெற்றி பெற்றால், விநாயகருக்கு நான் பதினோறு தோப்புக்கரணம் போடுகிறேன். நான் வெற்றி பெற்று விட்டால், நீ பதினோறு தோப்புக் கரணம் போட வேண்டும். சம்மதமா?'' என்று கேட்டான்.

'எப்படியும் நான்தான் வெற்றி பெறுவோம்' என்ற நம்பிக்கையில் நாகேஷும் போட்டிக்குச் சம்மதித்தான்.

பிரகாஷ் போட்டியின் விபரத்தைக் கூறினான்.

''தொழிற்பேட்டை அருகில் உன் கண்களைக்கட்டி என் சைக்கிளின் பின்னால் உன்னை உட்கார வைத்துப் பயணிப்பேன். பிறகு உன்னை சைக்கிளில் கூட்டிக் கொண்டு செல்வேன். ஓர் இடத்தில் கொண்டு போய் நிறுத்துவேன். அது என்ன இடம் என்பதை கண் கட்டை அவிழ்க்காமலேயே கூற வேண்டும். உன்னால் முடியுமா?'' என்றான்.

''நான் தயார்'' என்றான் நாகேஷ்?




மறு நாள் காலை நாகேஷும் பிரகாஷும் தொழிற்பேட்டைக்கு வந்தனர். ஒப்பந் தப்படி நாகேஷின் கண்கள் கருப்புத் துணியால் கட்டப்பட்டன. பிரகாஷின் பின்னால் கேரியரில் நாகேஷ் ஏறி அமர, பிரகாஷ் சைக்கிளை வேகமாக மிதித் தான். நாற்பத்தைந்து நிமிஷம் கழிந்த தும் ஒரு இடத்தில் சைக்கிளை நிறுத்திய பிரகாஷ், ''இது என்ன இடம் சொல்லு,'' என்று கேட்டான்.

''இது மெயின் ரோடிலுள்ள முத்து சினிமா தியேட்டர்'', என்று கண் கட்டை அவிழ்க்காமலேயே பதிலளித் தான் நாகேஷ்.

பிரகாஷ் திகைத்தான். ''கண்களைத் நான் கட்டியிருக்கேனே! எப்படிடா உன்னால் சரியாகக் கூற முடிந்தது?'' என்று நாகேஷின் கண்கட்டை அவிழ்த்த படியே ஆச்சர்யத்துடன் கேட்டான் பிரகாஷ்!

''தொழிற்பேட்டையில் சைக்கிளின் பின்னால் உட்காரச் சொல்லிப் பயணத்தை ஆரம்பித்தே. சற்று நேரத்திற்கெல்லாம் பிஸ்கட் ரொட்டி கேக் மணம் காற்றில் மிதந்து வந்தது. சரி, பேக்கரியைக் கடந்து செல்வதை உணர்ந்தேன். சிறிதுநேரம் கழிந்து ரப்பர் வாசனையை நுகர்ந்தேன். அது நிச்சயம் ரப்பர் தொழிற்சாலையாகத்தான் இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தேன். பிறகு கந்தக நெடி வந்தது. அது ஆவடி மெயின் ரோட்டில் இருக்கும் உரத் தொழிற்சாலை என்பது புரிந்தது. சற்று நேரத்தில் மேம்பாலம் ஏறி இறங்கினாய். சிதறு தேங்காய் உடையும் சத்தமும், கற்பூர வாசனையும் கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகே வந்து விட்டோம் என்பதை உணர்த்தின. ''மூணு முப்பது கிடைக்க லேன்னா இன்னொரு நாள் வரலாம். இந்த பாடாவதிப் படத்துக்கு அதுக்கு மேல் தரக்கூடாது''ன்னு யாரோ பேசிக் கொண்டது கேட்டது. சரி, சினிமா தியேட்டருக்கு வந்து விட்டோம் என்பதை உணர்ந்தேன். இப்போதாவது என் வெற்றியின் ரகசியம் புரிந்ததா?'' என நாகேஷ் கேட்க பிரகாஷ் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு நாகேஷைப் பாராட்டியதோடு விநாயகருக்கு ஒப்பந்தப்படி தோப்புக்கரணமும் போட்டான்!

– சீர்காழி இரா. சுவாமிநாதன்.



ஐயாவோட மதிப்பு!

தொலைக்காட்சியில் ஒளிபரப் பாகிக் கொண்டிருந்த நிகழ்ச்சியை வீட் டிலுள்ளவர்கள் ரசித்துக் கொண்டிருந் தார்கள்.

''என்ன ஒலித் தம்பி? என்னை எப்படி ரசிக்கிறாங்க பார்த்தியா?'' என்று கர்வத்தோடு கேட்டது ஒளி.

''உன்னை மட்டுமா ரசிக்கிறாங்க? என்னையும்தான். நான் மட்டும் ஒலிக் காம இருந்தா என்ன ஆகும் தெரியுமா? ரசிக்கவே முடியாது!'' என்றது ஒலி சற்று அதட்டலாக.

''ஓகோ! அப்படியா? நான் ஒரு நிமி ஷம் செயல்படாட்டி என்ன ஆகும் தெரி யுமில்லே? தொலைக்காட்சிப் பெட்டி யைத் திறந்து என்ன கோளாறுன்னு ஆராய்ச்சி செய்ய ஆரம்பிச்சுடுவாங்க'' என்றது ஒளி.

''ஆராய்ச்சி செய்து என்ன பிரயோ ஜனம்? நான் இயங்கலேன்னா என்ன நடக்குதுன்னே தெரியாது. நீ மட்டும் தைய்யா... தைய்யான்னு குதிச்சிக்கிட்டு இருக்க வேண்டியதுதான்'' என்று சீண்டி யது ஒலி.

''பார்க்கலாமா...? பார், இப்ப யாருக்கு மதிப்பு அதிகம்னு?'' என்று சொன்ன ஒளி, ஒரு வினாடி செயல்படா மல் நின்றது.


நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டிருந்த வர்கள், ''என்னது படத்தையே காணோம்! சத்தம் மட்டும் கேட்குது?'' என்று தங்களுக்குள் பரபரப்புடன் கேட் டுக் கொண்டிருக்கும்போதே மீண்டும் ஒளி வந்தது!

''ஒலித் தம்பி, இப்ப பார்த்தியா, என் மதிப்பை?'' என்றது ஒளி.

''இப்ப, நான் என்ன செய்யறேன் கறதைப் பார்?'' என்ற ஒலி ஒரு நிமிடம் இயங்காமல் தன் பங்குக்கு வேலை நிறுத்தம் செய்தது.

''என்னடா இது! சத்தத்தையே காணோம்! ஊமைப்படம் மாதிரி





இருக்குது?'' என்று நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சலித்துக் கொண்டிருந்தார்கள்.

உடனே மறுபடி ஒலி இயங்க ஆரம்பித்தது.

''இப்பப் பார்த்ியா ஜயாவோட மதிப்பை?'' என்றது ஒலி.

'யார் பெரியவர்?' என்று இரண்டும் மாறி மாறிச் சண்டை போட்டுக் கொள்ள, நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சலித்து, வெறுத்துப் போய் உட்கார்ந்து கொண்டிருக்க, ஒளியும் ஒலியும் இரண்டுமே இயங்காமல் செயல் இழந்து விட்டன! ஒளியும் இல்லை! ஒலியும் இல்லை!

''தொலைக்காட்சிப் பெட்டிக்கு என்ன ஆச்சு?'' என்று அந்த வீட்டுக்காரர்கள் கலங்கிக் கொண்டிருக்கும் போது திடீரென்று தொலைக்காட்சிப் பெட்டியில் நிகழ்ச்சிகள் மறுபடியும் ஒழுங்காகத் தெரிய ஆரம்பித்தன! எல்லோரும் ஒருவரையொருவர் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டார்கள்.


தொலைக்காட்சிப் பெட்டிக்குள் ஒரு குரல் கேட்டது :

''என்ன ஒளித் தம்பி! உன்னையும் தான் ஒலித் தம்பி! என்ன முழிக்கிறீங்க? யாருன்னா நினைக்கிறீங்க? நான்தான் உங்களை இயக்கும் மின்சாரம் பேசறேன்! உங்க இரண்டு பேரோட உயிர் என்கிட்டேதான் இருக்குது. ரெண்டு பேரும் யார் பெரியவங்கன்னு போட்டியா போடுறீங்க? ஜாக்கிரதை! ஒழுங்கா ரெண்டு பேரும் உங்க கடமையைச் செய்யுங்க. இல்லை, உங்க உயிரை எடுத்துடுவேன்'' என்று மின்சாரம் மிரட்டியது.

ஒளியும் ஒலியும் கப்சிப்! ''எங்களை மன்னிச்சிடுங்க'' என்று பணிவுடன் வணங்கி ஒழுங்காக இயங்க ஆரம்பித்தன.

''உலகத்தில் உள்ள எல்லோரும் பெரியவர்கள்தான். அவரவர்களுக்கு என்று ஒரு தனித்த சக்தி இருக்கிறது. எல்லாம் ஒன்றுகூடினால்தான் இயங்க முடியும். என்ன புரிகிறதா?'' என்று புத்தி சொல்லிற்று மின்சாரம். ஒளியும் ஒலியும் பலமாகத் தலையை ஆட்டின!

– பொன்மலை பரிமளம்



''வீட்டில் மாட்ட முடியாத 'பை' எது?''


''குப்'பை'...!''

– சீர்காழி ஜே. பலராமன்

''சாப்பாட்டு ராமன்களுக்குப் பிடித்த மழை எது?''

''வேற எது? 'அடை'மழை தான்!''


– வி. ராஜப்பா



''தம்பி, ராத்திரி தூங்கும் போது ஒரு நாய் என் மீது படுத்துப் புரண்டதா கனவு வந்துட்டே இருந்தது ப்பா.''

''கனவா இருக்காதுங்க... எங்க நாய் படுக்கிற பெட்ல நீங்க படுத்துத் தூங்கிட்டீங்க!''

– சக்தி அபிநயா



குழந்தையைத் தா!

காட்டில் பேராசைபிடித்தநரி ஒன்று வாழ்ந்து வந்தது. அது எப்போதும் தந்திரமாக யாரையாவது ஏமாற்றித் தனக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ளும்.

ஒருநாள் நரியின் காலில் ஒரு முள் குத்தி விட்டது. வலியுடன் வந்து கொண்டிருந்தது. ஒரு குடிசை வீட்டின் முன் கிழவி ஒருத்தி தானியம் காயவைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தது. அவள் அருகில் சென்றது.

''பாட்டி! பாட்டி! எனக்குக் காலில் முள் குத்தி ஒரே வலியாக இருக்கிறது. தயவுசெய்து அதை எடுத்து விடுங்கள்'' என்றது.

கிழவி இரக்கப்பட்டு நரியின் காலில் குத்தியிருந்த முள்ளை எடுத்துத் தூர எறிந்தாள்.

கிழவியிடம் விடைபெற்றுக் கொண்டு சிறிது தூரம் சென்ற நரி திரும்பவும் கிழவியிடம் வந்தது.

''பாட்டி! என் முள் எங்கே?'' என்று கேட்டது.

பாட்டி திகைப்புடன், ''முள்ளை அப்போதே தூர எறிந்து விட்டேனே?'' என்றாள்.




''ஐயையோ! என் அழகான முள்ளை இப்படி அலட்சியமாகத் தூர எறிந்து விட்டாயே!'' என்று ஆர்ப்பாட்டம் செய்தது நரி.

நடுங்கிப் போன கிழவி, ''உன் முள்ளுக்குப் பதிலாக இந்தக் கோழி முட்டையை வைத்துக் கொள்'' என்று சொல்லித் தன் வீட்டில் இருந்து கோழி முட்டையைத் தந்தாள்.

நரி உடனே முட்டையுடன் புறப்பட்டது. இருட்டும் நேரத்தில் மற்றொரு கிராமத்தை அடைந்து முதலில் இருந்த வீட்டைத் தட்டியது. வீட்டுக்காரர் கதவைத் திறந்தார்.

''ஐயா! வெளியில் ஒரே குளிராகவும், இருட்டாகவும் இருக்கிறது. அதனால் இன்றிரவு மட்டும் நான் இங்கே தங்க அனுமதிக்க வேண்டும்'' என்று பணிவுடன் கேட்டது நரி.

வீட்டுக்காரரும் நரியிடம் இரக்கம் கொண்டு 'சரி' இரவு மட்டும் தங்கிக் கொள் என்றார்.



''இந்த முட்டையை எங்கே வைப்பது?'' என்று கேட்டது நரி.

''இதோ, இந்தக் கோழிகளிடமே வைத்து விடு,'' என்றார் வீட்டுக்காரர்.

இரவு அனைவரும் தூங்கிய பிறகு நரி மெதுவாக எழுந்து கோழிகளின் கூண்டைத் திறந்து முட்டையைச் சாப்பிட்டு விட்டு மீண்டும் வந்து படுத்துக் கொண்டது.

விடிந்ததும் நரி வீட்டுக்காரரிடம் நன்றி கூறிவிட்டு, ''என் முட்டையைக் கொடுங்கள் நான் போகிறேன்'' என்றது.

வீட்டுக்காரர் கூண்டைத் திறந்து பார்க்க முட்டை இல்லை. வெறும் ஓடுதான் கிடந்தது!

உடனே நரி, ''ஐயோ! என் அழகிய முட்டை எங்கே போச்சு? உங்கள் கோழிகள்தான் அதைச் சாப்பிட்டிருக்க வேண்டும்'' என்றது.

பயந்து போன வீட்டுக்காரர், ''முட்டை போனால் போகட்டும். பதிலுக்கு ஒரு கோழியே தருகிறேன்''

என்று கூறி கோழி ஒன்றைக் கொடுத்தார்.

கோழியுடன் தன் பயணத்தைத் தொடங்கிய நரி மாலைப் பொழுதில் ஒரு கிராமத்தை அடைந்து முதல் வீட்டின் கதவைத் தட்டியது.

வீட்டுக்காரர் கதவைத் திறந்தார்.

''ஐயா! வெளியில் குளிர் மிக அதிகமாக உள்ளது. அதனால், தயவுசெய்து இன்று இரவு மட்டும் உங்கள் வீட்டில் தங்க அனுமதிக்க வேண்டும்'' என்று பணிவாகக் கேட்டது.

வீட்டுக்காரர், ''சரி! உள்ளே வா'' என்று கூறினார்.

''ஐயா, என் கோழியை நான் எங்கே வைப்பது?'' என்று கேட்டது நரி.

''என் ஆடுகளுடன் தங்க வை,'' என்று வீட்டுக்காரர் அனுமதித்தார்.

நரியும் அவ்வாறே செய்தது.


இரவு அனைவரும் தூங்கிய பிறகு நரி எழுந்து சென்று கோழியைச் சாப்பிட்டு விட்டு வந்து பழையபடி படுத்துக் கொண்டது.

விடிந்ததும் வீட்டுக்காரருக்கு ''வணக்கம்'' சொல்லி விட்டு ஆடுகள் தங்குமிடத்திற்கு வந்தது. கோழியைக் காணவில்லை. இறக்கைகளும், எலும்புகளும் மட்டும் இருந்தன!

''ஐயோ! என் கோழியைக் காணவில்லையே? உங்கள் ஆடுகள்தான் என் கோழியைக் கொன்று விட்டன'' என்று கத்தியது நரி.

வீட்டுக்காரர் பயத்தால் ஆடிப் போனார்.

''அந்தக் கோழி போனால் போகட்டும். பதிலுக்கு உனக்கு இதைத் தருகிறேன்'' என்று ஓர் ஆட்டுக் குட்டியைக் கொடுத்தார்.



தன் சாமர்த்தியத்தை மெச்சியபடி ஆட்டுக் குட்டியுடன் வந்து கொண்டிருந்த நரி இருட்டும் சமயத்தில் ஒரு வீட்டை அடைந்து கதவைத் தட்டியது.


வீட்டுக்காரர் கதவைத் திறந்தார்.

''ஐயா! வெளியில் பனி ரொம்பவும் கடுமையாக இருக்கு. அதனால், இன்றிரவு மட்டும் இங்கே தங்க அனுமதிக்க வேண்டும்'' என்றது நரி பணிவாக.

வீட்டுக்காரர், 'சரி'' என்று இரக்கப்பட்டுக் கூறினார்.

''என் ஆட்டுக் குட்டியை எங்கே வைப்பது?'' என்று கேட்டது நரி வழக்கம் போல்.

''என் ஆடுகளுடன் சேர்த்து வை. பத்திரமாக இருக்கும்'' என்று வீட்டுக்காரர் கூற நரியும் அவருடைய ஆடுகளுடன் தன் குட்டியையும் சேர்த்து வைத்தது.



இரவு வழக்கம் போல் நரி எழுந்து தன் ஆட்டுக் குட்டியைத் தின்று விட்டு எலும்பை வீட்டுக்காரரின் குழந்தை உறங்கிய தொட்டிலில் போட்டு விட்டுப் படுத்துக் கொண்டது.

விடிந்தது. நரி வீட்டுக்காரரிடம் நன்றி கூறி விட்டு, ''என் ஆட்டுக் குட்டியைக் கொடுங்கள். நான் போகிறேன்'' என்றது. வீட்டுக்காரர் அதை அழைத்து வந்தார்.

ஆடுகளுக்கிடையில் தனது குட்டி இல்லாததைப் பார்த்து நரி அழ ஆரம்பித்தது.

அவருடைய குழந்தையின் தொட்டிலில் எலும்புத் துண்டுகள் கிடப்பதைப் பார்த்து, ''ஐயோ! என் ஆட்டுக் குட்டியை உன் குழந்தை தின்று விட்டது!'' என்று புரண்டு புரண்டு அழுதது.

வீட்டுக்காரர், ''உன் ஆட்டுக்குட்டிக்குப் பதிலாக பெரிய ஆடே தருகிறேன் அழாதே!'' என்றார்.

உடனே நரி, ''அதெல்லாம் முடியாது. எனக்கு ஆடு வேண்டாம். உன் குழந்தையைக் கொடு!'' என்றது.

வீட்டுக்காரருக்கு நரியின் வஞ்சக நோக்கமும் தந்திரமும் புரிந்து விட்டது. இதற்குச் சரியான தண்டனையைத் தர வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டு, ''நீ சற்று வெளியில் இரு. என் குழந்தையை ஒரு சாக்கு மூட்டையாகக் கட்டித் தருகிறேன். உனக்கும் தூக்கிக் கொண்டு போக வசதியாக இருக்கும்'' என்றார்.

நரியும் மகிழ்ச்சியோடு, ''சீக்கிரம்'' என்று கூறி விட்டு வெளியில் சென்றது.

சிறிது நேரம் கழித்து வீட்டுக்காரர், ''இந்தா'' என்று மூட்டையைக் கொண்டு வந்து வைத்தார்.

நரி மகிழ்ச்சி பொங்க, மூட்டையுடன் புறப்பட்டது. மூட்டை ரொம்பவும் கனமாக இருந்தது. தூக்க முடியாமல் முக்கி முனகிக் கொண்டு நரி தூக்கிக் கொண்டு போனது. பாதி வழி போனதும் நடக்கவே முடியவில்லை. இதற்குள் காடு வந்து விட்டது. ஒருவேளை மூட்டையில் கருங்கல்லை வைத்து ஏமாற்றியிருப்பாரோ என்று நரி சந்தேகப்பட்டு மூட்டையைப் பிரித்தது. அடுத்த நிமிஷமே அதிலிருந்து இரண்டு பயங்கரமான வேட்டை நாய்கள் பாய்ந்து வெளிவந்தன. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பேராசை பிடித்த நரிக்கு சரியான தண்டனை கிடைத்தது!





கேட்கட்டுமா டாக்டர்?

★ வி. விஜயராஜ், ஜல கண்டாபுரம்.

? தேனைத் தலையில் தடவிக் கொண்டால் முடி நரைத்து விடும் என்கிறார்களே, உண்மையா? என்னுடைய நண்பன் தவறுதலாக தேனைத் தலையில் தடவிக் கொண்டான். தன்னுடைய தலைமுடி நரைத்து விடுமோ என்று அச்சப்படுகிறான். யோசனை கூறுங்கள் டாக்டர்?

! தலையில் தேனைத் தடவினால் தலைமுடி நரைத்து விடும் என்பதற்கு மருத்துவரீதியாக எந்தவித ஆதாரமும் இல்லை. இது காலங்காலமாக மக்களிடையே பரவி வருகிற மூட நம்பிக்கை. எனவே, உங்கள் நண்பரிடம் இது தொடர்பாக அச்சப்பட வேண்டாம் என்று தைரியம் சொல்லுங்கள்.

★ எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? குழந்தைகளுக்கு ஒரு வயது முடிவதற்குள் பல தடுப்பு ஊசிகளைப் போடுகிறார்களே, ஏன்? இதனால் ஆபத்து இல்லையா?

! தடுப்பு ஊசிகளால் ஆபத்தா? இல்லவே இல்லை. குழந்தைகளுக்கு இரண்டு வயது ஆகும் வரை நோய் எதிர்ப்பு சக்தி (Immunity) குறைவாக இருக்கும். அந்த சமயத்தில் தட்டம்மை, இளம்பிள்ளை வாதம், இசிவு நோய் (Tetanus), கக்குவான் இருமல், காச நோய், தொண்டை அடைப்பான் போன்ற தொற்று நோய்கள் அவர்களைப் பாதிக்காமலிருக்கவே தடுப்பு ஊசி போடுகிறார்கள். தடுப்பு ஊசி குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. மேற்சொன்ன நோய்க் கிருமிகள் உடம்புக்குள் புகுந்தால் அவற்றோடு போராடி நோய் வராமல் தடுக்கிறது. இதன் மூலம் உடல் பாதிப்பும், உயிர் ஆபத்தும் தவிர்க்கப்படுகின்றன. இப்போது சொல்லுங்கள் தடுப்பு ஊசிகளால் நன்மையா? ஆபத்தா?

தேனைத் தலையில் தடவிக் கொண்டால் முடி நரைக்குமா?

★ பி.எஸ். மணிமாறன், பரங்கிப் பேட்டை.

? கண்ணில் 'பூ' விழுதல் பற்றி விளக்கவும்.

! கண்ணில் உள்ள நிறமிழி இமைமத்தில் (Cornea) புண் ஏற்பட்டு தழும்பு உண்டாவதுதான் கண்ணில் 'பூ' விழுதல் எனப்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன! 1. வைரஸ் மற்றும் பாக்டீரியா கிருமிகள் நிறமிழி இமைமத்தைப் பாதிப்பது. 2. கண்ணில் அடிபடுதல். 3. வெளிப் பொருள் (Foreign body) நிறமிழி இமைமத்தில் புகுந்து கொள்ளுதல். 4. வைட்டமின் - ஏ - சத்துக்குறைவால் நிறமிழி இமைமத்தில் புண் உண்டாவது. 5.



அம்மை நோய் கண்ணைப் பாதிப்பது. 6. உடம்பிலிருக்கும் வேறு நோய்களின் காரணமாக நிறமிழி இழைமம் சுருங்குவது போன்றவை. பூ விழுந்தவர்களுக்குப் பார்வை தெரிவதில்லை. இந்த நோய் நிலையைச் சீராக்க 'Keratoplasty' என்றழைக்கப்படுகிற அறுவை சிகிச்சை முறை உதவுகிறது. இதில் 'பூ' விழுந்த நிறமிழி இழைமத்தை அகற்றி விட்டு, பதிலாக,



கண்தானத்தால் பெறப்பட்ட கண்ணிலிருந்து நிறமிழி இழைமத்தை எடுத்துப் பொருத்தி விடுகிறார்கள். பறிபோன பார்வை மீண்டும் கிடைக்கிறது.

★ இரணியல் ராஜா, தஞ்சை.

? இரத்த அழுத்தத்தை அறியப் பயன்படுத்துகிறார்களே, அந்த கருவியின் பெயர் என்ன? அது எவ்வாறு இயங்குகிறது?

! ஸ்பிக்மோ மானோமீட்டர். (Sphygmomanometer) இதுதான் இரத்த அழுத்தத்தை அளக்க உதவும் கருவியின் பெயர். இதில் நான்கு முக்கிய பாகங்கள் உள்ளன. 1. Cuff என்ற துணி. 2. ரப்பராலான ஒரு செவ்வக வடிவப் பை. இதற்கு Bladder என்று பெயர். Cuff என்ற துணிக்குள் இது அடக்கம். 3. பந்து மாதிரி உருண்டையாக ஒரு ரப்பர் பம்பு. 4. பாதரசம் நிரப்பப்பட்ட ஒரு சிலிண்டரும் அதனுடன் இணைந்த ஒரு ஸ்கேலும். இதை எப்படி இயக்குகிறார்கள் என்பதை இப்போது பார்ப்போம். துணியை புஜத்தில் கட்டுவார்கள். அதனுள் இருக்கும் ரப்பர் பையிலிருந்து இரண்டு ரப்பர் குழாய்கள் வெளிவரும். அவற்றுள் ஒன்று பம்புடனும் மற்றொன்று சிலிண்டருடனும் இணையும். முதலில் ஸ்கேலில் பாதரசத்தின் அளவு '0' வில் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்வார்கள். பிறகு பம்பை அழுத்துவார்கள். இந்த அழுத்தம் குழாய்கள் மூலம் ரப்பர் பைக்குச் செல்லும். இதனால் அது ஊதிப் பெரிதாகும். இந்தக் காற்றடைத்த ரப்பர்பை ரத்தக் குழாய்களை அழுத்த, கைகளுக்கு வரும் ரத்தத்தின் அளவு குறையும். ரப்பர் பையின் அழுத்தத்தை ஓரளவுக்கு அதிகரித்து விட்டு, கைக்கு ரத்தம் வருவது நின்றதும், புஜத்தைச் சுற்றிக் கட்டியுள்ள துணிக்குள் ஸ்டெதாஸ்கோப்பை வைத்துக் கொள்வார்கள். இப்போது பம்புடன் இணைக்கப்பட்ட வால்வைத் திறந்து, காற்றை வெளியேற்றி ரத்த ஓட்டம் ஆரம்பிக்கும் போது ஏற்படும் ஒலி ஸ்டெதாஸ்கோப்பில் கேட்கும். அப்போதுள்ளபாதரச மட்டத்தை ஸ்கேலில் பார்த்துக் கொள்வார்கள். இது 'சுருங் கழுத்தம்', (systolic pressure) எனப்படுகிறது. பிறகு ரப்பர்பை அழுத்தத்தை மெதுவாகக் குறைத்துக் கொண்டே வருவார்கள். ஒரு குறிப்பிட்ட அழுத்தத்தில் ரத்த ஓட்ட ஒலி சுத்தமாக



நின்று, ரத்த ஓட்டம் சாதாரணமாக கைகளுக்குச் செல்லும். இந்த அழுத்தத்தில் பாதரச அளவைக் கணக்கெடுப்பார்கள். இதற்கு விரிவழுத்தம் (diastolic pressure) என்று பெயர். சாதாரண மனிதனின் சரியான ரத்த அழுத்த அளவு எவ்வளவு தெரியுமா? 120/80 மி.மி. பாரச அளவு. இதில் 120 மி.மி. என்பது சுருங்கழுத்தம். 80 மி.மி. என்பது விரிவழுத்தம்.

புயாவுக்குக் கிடைத்த பதவி!

மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு பராமரிக்கப்படுகிறது என்ற பெருமை சிங்கப்பூர் பஸ் போக்குவரத்துக்கு உண்டு.

இந்தியாவில் பஸ்ஸில் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் இடித்துக் கொண்டு ஏறுகிறோம், இறங்குகிறோம் இல்லையா? சிங்கப்பூரில் இதைச் செய்ய முடியாது. ஏறுவதற்கு ஒரு வழி, இறங்கு வதற்கு ஒருவழி என்று இரண்டு இருக்கிறது. பஸ் நிறுத்தத்தில் வந்து பஸ் நின்றதும், இரண்டு வழிகளும் தானியங்கி முறையில் திறக்கும். ஏறுபவர்கள் முன்பக்க வழியாகத்தான்



ஏறவேண்டும். இறங்குபவர்கள், முன் பக்கக் கதவுகளின் அருகே உட்கார்ந்து கொண்டிருப்பவர்களாக இருந்தாலும் சரி, பின்பக்கம் சென்று அதற்குரிய வழியாகவேதான் இறங்க வேண்டும்.

பஸ்களில் தனியாக நடத்துனர்கள்



கிடையாது. ஓட்டுனரேதான் நடத்துனரின் பணியையும், அதாவது டிக்கெட் கொடுப்பதையும் கவனிப்பார். அவருடைய இருக்கைக்கு அருகே ஒரு கண்ணாடிச் சட்டம் இருக்கும். அதில் காசு போட ஒரு வாயும் இருக்கும்.

பஸ்ஸில் ஏறியவுடன் போக வேண்டிய இடத்தைக் கூறியதும், நடத்துனர் அதற்கான கட்டணத்தைக் கூறுவார். நாம் காசாக (நாணயமாக) அந்தக் கட்டணத்தைக் கண்ணாடிச் சட்டத்தின் வாயில் போட வேண்டும். எத்தனை சில்லரையாகப் போட்டாலும் அவை பிரிந்து, பார்த்த உடனேயே கணக்கிடுவதற்கு வசதியாகக் காட்சியளிக்கும். நடத்துனர் ஒரு பொத்தானை அமுக்குவார். கண்ணாடிச் சட்டத்தில் போட்ட காசுகள் 'கலகல'வென்று உள்ளே விழுந்து மறையும். இரண்டு எட்டில் பஸ்ஸின் முதல் இருக்கைக்கு அருகே இதற்கென உள்ள சின்னஞ்சிறிய உலோக மாடத்தில் இதற்கான டிக்கெட் வந்து விழும்.

இந்தியாவைப் போல் நோட்டைக் கொடுத்து, மீதிச் சில்லறை வாங்கி, வம்பு வழக்குத் தொடரும் நிலை சிங்கப்பூரில் இல்லை. கட்டணத்தை நாணயமாகத்தான் (காசாக) போட வேண்டும். உங்களிடம் நாணயமாக ஒரு டாலர் இருந்து, (ஒரு டாலர் என்பது 100 செண்ட்ஸ்) போக வேண்டிய இடத்திற்கு 90 செண்ட்ஸ்தான் என்றால், நீங்கள் மீதி பத்து செண்ட்களை இழக்க வேண்டியதுதான். நடத்துனர் சில்லரை தரமாட்டார். கட்டணத்திற்கு உரிய காசு, நாணயமாக இல்லை என்றால் கௌரவமாக அடுத்த பஸ் நிறுத்தத்தில் உங்களை இறக்கி விடுவார்கள். சில குறிப்பிட்ட இடங்களில் சில்லரை தரும் தானியங்கி இயந்திரங்கள் இருக்கின்றன. இவற்றில் டாலர் நோட்டைப் போட்டு நமக்குத் தேவையான சில்லறையை நாணயமாக மாற்றிக் கொள்ளலாம்.

பஸ்ஸில் ஒவ்வொரு இருக்கைக்கு அருகேயும் ஒரு சிறிய பொத்தான் இருக்கும். இதை, இறங்க வேண்டிய நிறுத்தம் நெருங்கியதும் அழுத்தினால், நடத்துனருக்கு அருகே ஒரு சிவப்பு விளக்கு எரியும். மணி ஒலிக்கும். இப்படிச் செய்தால் பஸ் நிறுத்தத்தில் ஏற ஆள் இல்லாமல் இருந்தால்கூட பஸ் நிற்கும். இறங்கிக் கொள்ளலாம். இறங்குபவர்கள் எல்லோரும் இறங்கி, ஏற

இருப்பவர்கள் எல்லோரும் ஏறிய பிறகே கதவுகள் மூடப்பட்டு, பஸ் கிளம்பும். படிக்கட்டிலேயே தொங்கிக் கொண்டு வரும் பிரச்னை எல்லாம் கிடையாது.

குளிர்ப்பதனம் செய்யப்பட்ட பஸ்களும் உண்டு. கட்டணம் இருபது செண்ட்ஸ் அதிகம்.

புயா பணியாற்றிய நிறுவனத்தில் முந்நூறுக்கு மேற்பட்டவர்கள் வேலை பார்த்தார்கள். இவர்களுடைய நலன்களைக் கவனிக்க ஓர் அமைப்பு (சங்கம்) இருந்தது. அதற்குத் தலைவராக இருப்பது பெரிய பெருமை. இவ்வளவுக்கும் அந்தப் பதவிக்கு என்று சம்பளம் கூடக் கிடையாது. ஆனாலும், பெரிய கௌரவம். அவ்வளவே.

அந்த ஆண்டு புதிய தலைவரை நியமித்தாக வேண்டும். சிக்கன மனப்பான்மை உடையவர்களையே நியமிக்க வேண்டும் என்பதுதான் மரபு.

நண்பர்கள், புயாவையும் தலைவர் பதவிக்கு விண்ணப்பிக்கச் சொன்னார்கள். இப்படி விண்ணப்பிப்பவர்களை கம்பெனியின் உயரதிகாரிகள் நேரில் பார்த்துப் பேசுவார்கள். தகுதியானவர் என்று தோன்றுபவரைத் தலைவராக நியமிப்பார்கள்.

நண்பர்களின் வற்புறுத்தலைத் தாங்காது புயாவும் தலைவர் பதவிக்கு விண்ணப்பித்தார். இப்படி விண்ணப்பித்தவர்களில் இருந்து, மூன்று பேரை நேர்காணலுக்கு வரும்படி அழைப்பு வந்தது. அவர்களுள் புயாவும் ஒருவர்.

பொதுவாக மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசிய பிறகு கம்பெனியின் இயக்குநர் பேசத் தொடங்கினார்.

''நெரிசல் மிக்க ஆர்சர்டு ரோடு பகுதியில் இருந்து முதலைப் பண்ணைக்குப் போயாக வேண்டும். பஸ் கட்டணம் எண்பது செண்ட்ஸ். உங்களிடம் இரண்டு ஐம்பது செண்ட் நாணயங்கள் இரண்டும், இரண்டு இருபது செண்ட்ஸ் நாணயங்களும் ஒரு டாலர் (நூறு செண்ட்ஸ்) நாணயமும் மட்டுமே இருக்கின்றன. என்ன பண்ணுவீர்கள்?'' என்று கேட்டார் இயக்குநர்.

''பிரச்னையே இல்லை. நான் டாக்ஸியை வரவழைத்துப் போய்விடுவேன்'' என்றார் ஒரு நண்பர்.

''எண்பது செண்ட்தானே கட்டணம்? ஒரு ஐம்பது, இரண்டு இருபது ஆக தொண்ணூறு செண்ட்ஸ் போட்டு டிக்கெட் எடுப்பேன். நஷ்டம் பத்து செண்ட்தானே? போனால் போகட்டும் என்று விட்டுவிடுவேன்'' என்றார் இரண்டாவது நண்பர்.

இயக்குனர் புயாவைப் பார்த்தார்.

''நான் டாக்ஸியிலும் போக மாட்டேன். தொண்ணூறு செண்ட்ஸ் டிக்கெட் எடுத்து பத்து செண்ட்ஸ் இழக்கவும் மாட்டேன். போவது ஊழியர் நலச் சங்கத்தின் பணிக்காகத்தானே? இயன்ற வரை சிக்கனமாக இருக்க வேண்டாமா? அதனால் ஓர் ஐம்பது, ஓர் இருபது செண்ட்ஸ் மட்டும் போட்டு எழுபது செண்ட்ஸுக்கு மட்டும் டிக்கெட் எடுப்பேன்'' என்று நிறுத்தினார் புயா.

எல்லோரும் அவர் தொடர்ந்து என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க ஆவலுடன் காத்திருந்தனர்.

''மூன்று ரோடுக்கு முன்னாலேயே அதாவது எழுபது செண்ட்ஸுக்கு உரிய பஸ் நிறுத்தத்திலேயே இறங்கிக் கொண்டு மீதி பத்து செண்ட்ஸ் தொலைவை நடந்தே சென்று சேர்வேன்'' என்று முடித்தார் புயா.

தலைவர் பதவிக்கு புயாதான் நியமிக்கப்பட்டார் என்பதைக் கூற வேண்டுமா?

– ரே

"ஒரு பேப்பர் மசாலா கொண்டு வாப்பா!"


"ரூல்டா? அன்ரூல்டா?"


– த. ஜம்பு





என்னைப் போல் இல்லை!


கருத்து: மா. வெ. கிருஷ்ணன். படம்: ரஜினி





ஜம்புவுக்கு ஓர் ஆசை!
என்னை ஓவியம் வரைந்து கூடத்துல மாட்டணும். என்ன பண்ணலாம்?
தலை சிறந்த ஓவியன் அழகனை சந்தித்து—
என் ஓவியத்தை வரைஞ்சு? தரணும்.
ரொம்ப செலவாகுமே?
பரவாயில்லே! நான் தரேன் சீக்கிரம் கொடுத்துடு! பாக்கிறவங்க திகைக்கணும்!


சில நாளில் ஓவியத்தை முடித்து ஜம்புவிடம் தந்தான் அமுதன்.
ஐயா, இதோ உங்க ஓவியம்! ஏழாயிரம் ஆச்சு!
ஜம்பு திகைத்து—
ஏழாயிரமா?
நம்ம திட்டப்படி மடக்குவோம்!
கடுமையாகக் கூறினான் ஜம்பு—
இது என்னை மாதிரியே இல்லை! பைசா கூடத் தர மாட்டேன்!
சிந்தித்தான் அமுதன்—
என்ன ஏமாற்றவா பார்க்கிறீர்கள்? பாக்கலாம்!


அழகன் பணிவாக-
உங்களை மாதிரி இல்லைன்னு எழுதித் தந்துடுங்க அது போதும்!
உடனே மகிழ்ச்சியுடன் எழுதிக் கொடுத்தான் ஜம்பு-
இதோ தந்திட்டேன்!
கருமி ஜம்பு சரியா சிக்கிக் கிட்டே! இரு...!
அடுத்த நாள் வேலைக்காரன் ஜம்புவிடம்-
உங்க ஓவியத்தை வைச்சு செருப்பு மாலை போட்டிருக்கான் அழகன்! ஜனங்க கைதட்டி சிரிக்கிறாங்க!
எங்கே..?



ஜம்பு கோபத்துடன் ஓடினான்-
என்னையா அவமானப்படுத் தறே? இரு உன்னை...
நீதிபதி முன்-
என் ஓவியத்துக்கு செருப்பு மாலை போட்டு அவமானப் படுத்திட்டார். மான நஷ்டமா ஒரு லட்சம் ரூபாய் தரணும்.
இது நன்றுடையது மாதிரி இல்லைன்னு இவரே எழுதித் தந்தது இதோ..!
வழக்கில் நியாயம் இல்லை, தள்ளுபடி செய்கிறேன்!
5



வெட்கத்துடன் ஜம்பு-
தானே குறைந்த விலைக்குத் தருவான்னு நினைச்சது தப்பாப்போச்சே!
அமுதனிடம் ஜம்பு-
சரி! ஆறாயிரம் தரேன் ஓவியத்தைக் கொடு!
மறுத்தான் அமுதன்-
முடியாது முப்பதாயிரம் தந்தால்தான் தருவேன்! ஏமாற்றினதற்கு வழக்குப் போட்டதற்கு தண்டனை வேண்டாமா..?
வருந்தினான் ஜம்பு-
நன்றாக வேண்டும்! ஏமாற்ற முயல்வோ-ருக்கு இது ஒரு பாடம்!
வேறு வழி இன்றி பணத்தைக் கொடுத்தான் ஜம்பு-
இந்தா முப்பதாயிரம் ஓவியத்தைக் கொடு...



கோகுலம்

1994
ஏப்ரல்
மாத இதழ்
மலர் : 12
இதழ் : 3

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,
அனைவருக்கும் அன்பு வணக்கம்.

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும் போது பலருக்கும் தேர்வு தொடங்கியிருக்கும். எல்லோரும் நன்கு தேர்ச்சி பெற்று புது வகுப்பிற்குப் போக இந்தப் புத்தாண்டு நன்நாளில் வாழ்த்துக்கள்.

போன இதழில் வெளியான 'பரீட்சைக்குப் பயமேன்?' கருத்துக் கோர்வையைப் பாராட்டி ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. சரியான நேரத்தில் வெளியிடப்பட்ட பயனுள்ள பகுதி என்று ஏராளமான பெற்றோர்களும், ஆசிரியர்களும் கூட இதைப் பாராட்டியிருக்கிறார்கள்.

'அபிராமியின் அட்டிகை' மிக முக்கியமான கட்டத்தில் காலடி வைக்கிறது. விறுவிறுப்புக்குக் கேட்கவா வேண்டும்?

கபில் தேவ் கிரிக்கெட்டில் படைத்துள்ள உலக சாதனை கிரிக்கெட் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கபில் தேவின், வளர்ச்சி இதுவரை அவர் செய்துள்ள சாதனைகள் பற்றியவை குறித்து சிறுவர் சிறுமியர் நடத்திய ஓர் கலந்துரையாடல் இந்த இதழில் வெளியாகியுள்ளது.

'என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்' பகுதிக்கு ஏராளமானவர்கள் எழுதியிருக்கிறார்கள். எல்லாம் பரிசீலனையில் உள்ளன. இன்னும் எழுதாதவர்கள் உடனே எழுதுங்கள்.


இடமில்லாத காரணத்தால் ''எங்கள் ஊரில் நடந்தது'' ''உங்கள் நூலகம்'' பகுதிகள் இந்த இதழில் இடம் பெறவில்லை.

அடுத்த இரண்டு இதழ்களும் விடுமுறை இதழ்கள். வழக்கமான போட்டி தவிர, விடுமுறை சிறப்புப் போட்டிகளும் உண்டு. இவை தவிர, விடுமுறையைப் பயனுள்ள வகையில் கழிக்க கலைப் பொருள்களைத் தயாரிக்க வழிகாட்டும் பகுதிகளும் உண்டு. இப்பொழுதே உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜெண்டிடம் சொல்லி வைத்து விடுங்கள்.



மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்.)



கபில்தேவ் புரிந்துள்ள சாதனையை பாற்கடல் சிறுவர் சங்கத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் உரையாடி மகிழ்கிறார்கள்.

கிரி : என்ன நரசிம்மா! ரொம்ப நேரமா பேப்பரைப் படிச்சுக்கிட்டிருக்கே?

நரசிம்மன் : எல்லாம் நம்ப நிகாஞ்சியைப் பத்தித்தான்!

ராதா : நிகாஞ்சியா? ஓ! நம்ம கபிலோட முழுப்பெயர் கபில் தேவ் நிகாஞ்சி இல்லையா? அவரைப் பத்தித்தான் படிச்சுக்கிட்டிருக்கியா?

முகுந்தன் : 'சூபர்ப்' இல்லே! இருந்தா கபிலைப் போல இருக்கணும்!

சீதா : ம்! கபில் தேவ்னால இன்னிக்கு உலகமே நம்ம இந்தியாவைப் பாராட்டிக்கிட்டிருக்கு!

கார்த்திக் : 432 விக்கட்ஸ்! அ..ப்...பா! ஃபென்டாஸ்டிக்!

கிரி : 'இண்டியன் கிரிக்கெட் ஃபீல்டி'லே, இந்த 8-2-1994 ஐ ஒரு பொன்னான நாள்னு சொல்லலாம்!

நரசிம்மன் : அதைவிட 'இண்டியன் போலிங்'லே ஒரு பொன்னாள்னும் ரொம்பப் பொருத்தமா சொல்லலாம் இல்லையா!

நிகாஞ்சி நிகழ்த்திய சாதனை!



ராதா : கரெக்ட்! அதுவும் மேவாட்ட வங்க யாருமே எதிர் பார்க்காத சூழ்நிலை யிலே....

முருகந்தன் : ஆமாம்! இந்தியாவிலே ஒரு ஃபாஸ்ட் போலரா'ல (Fast Bowler) வெற்றி பெற முடியாதுன்னு அவங்க சொல்லிக்கிட் டிருந்தாங்களாம்'!

சீதா : விக்கட் எடுக்கறதுலேயும் இந்தியா 'ஸ்லோ'. அதாவது அதிகமான விக்கட்டுகளை வீழ்த்த முடியாதவங்க என்ற எண்ணமும் அவங்களுக்கு இருந்தது!

கார்த்திக் : இப்போ கபில் அதெல்லாத் தையும் மாத்திட்டார்!

கிரி : ஒரு Fast Bowler, Fast ஆகவே முன் னுக்கு வந்துட்டார்!

நரசிம்மன் : வெளிநாட்டு 'போலர்' (Bowler) நியூஸிலாந்தைச் சேர்ந்த 'ரிச்சர்டு ஹாட்லீயை'விட அதிகமா ஒரு விக்கட் எடுத்து, 'ரிகார்டு' செய்துட்டார்! இந்த சாதனை நிகழ்ந்த பெங்களூரையும், இந்தியா-ஸ்ரீலங்கா டெஸ்டையும் நாம மறக்கவே முடியாது.

ராதா : இது முயலும் ஆமையும் கதை மாதிரி இல்லே?

முருகந்தன் : ஒருவகையிலே அப்படித் தான் சொல்லணும்! கபிலோட தொடர்ந்த உழைப்பும் விடா முயற்சியும்தான் அவ ருக்கு இந்த மகத்தான வெற்றியைத் தந் திருக்கு.

சீதா : அப்படிப்பட்ட விடா முயற்சி இல்லேன்னா அவர் இப்படி சாதனை மேல சாதனை படைச்சிருப்பாரா?

கார்த்திக் : ஆமாம்! விக்கட் எடுக்கற திலே மட்டும் இல்லே, ரன் எடுக்கறதி லேயும், காட்ச் பிடிக்கறதிலேயும் கூட சாத னைதான்.

நரசிம்மன் : இதுவரைக்கும் கபில் விளையாடின 129 டெஸ்டுலே இந்தியா விலே மட்டும் 64 டெஸ்ட் மாட்ச் விளை யாடியிருக்கிறாராம்!

முருகந்தன் : இந்தியாவிலே மட்டும் 212 விக்கெட் எடுத்திருக்கார்.

கார்த்திக் : 27,506 தடவை 'டெலிவரி' செய்திருக்கிறாராம். வேற எந்த போலரும் இந்த அளவுக்கு செய்ததில்லையாம்!

ராதா : அப்புறம் 'ரன்'களைப் பத்திச் சொல்லலையே? 5227 ரன்கள் எடுத்திருக் கார்! இதுலே எட்டுத் தடவை 'செஞ்சுரி' அடிச்சிருக்கார்!

கார்த்திக் : இவர் முதல் செஞ்சுரி அடிச்ச திலே கூட ஒரு செய்தி இருக்கு. கபில் தன்



டி. ராதா



எஸ். முருகந்தன்



கே. சீதா



சி. நரசிம்மன்

கே. கார்த்திக்



ஆர். கிரிதரன்



அம்மாகிட்டே அடிக்கடி சொல்வாராம், 'நான் கடைசியா சிக்சர் போட்டு முதல் செஞ்சரியை எடுக்கணும்'னு. அப்படியே 96 ரன் எடுத்தப்புறம், ஒரு சிக்சர் அடிச்சு செஞ்சரி எடுத்துட்டாராம்!

சீதா : அவர் எவ்வளவு 'கேட்ச்' எடுத்திருக்கார்!

நரசிம்மன் : 63 'கேட்ச்' இப்படி டெஸ்ட் மாட்ச்லே மட்டும் இல்லாம, 'ஒன் டே இன்டர்னேஷனல் மாட்சிலேயும், இது வரைக்கும் 248 விக்கட் எடுத்திருக்கார்! 3726 ரன் எடுத்திருக்கார்.

ராதா : இவ்வளவு சாதனை படைச்ச கபில் எப்போதிலேந்து கிரிக்கெட் டெஸ்ட் விளையாட ஆரம்பிச்சார்?

நரசிம்மன் : 1978 லே! அதாவது அவர் ஃபீல்டுக்கு வந்து 15 வருஷம்தான் ஆகிறது.

கார்த்திக் : கபிலோட தனிப் பெருமை, 'பாஸ்ட் போலிங்'லே ஒரு கிகார்டை உண்டாக்கினதுதான்! கபிலுக்கு முன்னால ஸ்பின் போலர்கள்தான் நிறைய விக்கட்டுகளை எடுத்துக்கிட்டிருந்தாங்களாம்!

முகுந்தன் : ஆமாம் ஆமாம்! பாகிஸ்தானிலே 'சாதிக் மொகம்மது'ன்னு ஒரு போலர். கபிலோட 'பாஸ்ட் போலிங்'கை சமாளிக்க, தலைக்கு ஹெல்மெட் போட்டுக்கிட்டுத்தான் விளையாடுவாராம்! அதுலேந்துதான் இந்தியாவோட ஃபாஸ்ட் போலிங்குலே ஒரு திருப்பம் உண்டாச்சாம்!

நரசிம்மன் : எனக்குக் கூட 'பாஸ்ட் போலிங்'லே ஆசை வந்திருக்கு!

ராதா : ஆல் தி பெஸ்ட்! ஆனா கபிலை மாதிரியே குணங்களும், முயற்சியும் உனக்கும் இருந்தா வெற்றி நிச்சயம்!

சீதா : ஆரம்ப காலத்திலே, எப்படியாவது ஒரு டெஸ்ட் மாட்சலே விளையாடணும்கிற ஆசையால், ரொம்பக் கஷ்டப்பட்டு முயற்சி எடுத்திருக்கார்! 'ப்ராக்டிஸ்' பண்ணியிருக்கார்.

கார்த்திக் : பிப்ரவரி 21 ஆம் தேதி நடந்த ஒரு விழாவிலே நமது பிரதம மந்திரி கபிலுக்கு அவரைப் பாராட்டி ஒரு நினைவுச் சின்னத்தைக் கொடுத்தார். அப்போ அவர் என்ன சொன்னார் தெரியுமா? ''98 சதவிகிதம் வியர்வை சிந்துகின்ற உழைப்பும், 2 சதவிகிதம் உத்வேகமும்தான் ஒருவரின் வெற்றிக்குக் காரணம், இவை இரண்டுமே கபில் கிட்டே இருக்கு'ன்னு குறிப்பிட்டார்.

கிரி : 'குக்கு'வோட திறமை வளர அவங்க அம்மாவும் காரணமா இருந்திருக்காங்க!

முகுந்தன் : 'குக்கு' வா? அது யாரு?

கிரி : இந்தக் 'குக்கு'வும் கபிலோட பேர்தான். அவங்க அம்மா செல்லமா கூப்பிடற பேரு! கபிலை நல்லா உற்சாகமூட்டுவாராம் அவங்க அம்மா!

நரசிம்மன் : ஆமாம்! கடினமான உழைப்பையும், Dedication, அதாவது தன்னை முழுமையா அர்ப்பணிக்கக்கற தன்மையையும், தன்னோட பெற்றோர்கள் தான் தனக்குக் கற்றுக் கொடுத்தாங்கன்னு சொல்லியிருக்கார்!

கார்த்திக் : ஒன் டே, ஸிம்பாப்வே மாட்சலே 175 ரன்களை எடுத்து, இந்தியாவுக்கு வெற்றி தேடித் தந்தது கபில்தேவ் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி!

முகுந்தன் : இந்த 432 வது விக்கட்டை எடுத்த போது அவருக்கு எவ்வளவு சந்தோஷமாயிருந்திருக்கும்?

கார்த்திக் : ஆமாம்! அந்த விக்கட் எடுத்ததும், க்ரீன் ரூமுக்குப் போயிட்டாராம்! உணர்ச்சி பொங்க அழுதாராம்! ''எல்லாம் வல்ல கடவுளும், எனது பெற்றோர்களும், குழு நண்பர்களும், ரசிகர்களும்தான் எனது இந்த வெற்றிக்குக் காரணம்''னு நிருபர்கள் கிட்டே சொன்னாராம்!

கிரி : இதுக்கு முன்னால அவர் எப்போதும் இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டு அழுததில்லையாம்! ஒரு சமயம் - அதாவது அவரோட 15ஆவது வயசுலே பள்ளிக்கூடங்களுக்கு இடையேயான (Inter-school) கிரிக்கெட் போட்டியிலே முதல் இன்னிங்ஸ்லே வெற்றியும், இரண்டாவது இன்னிங்ஸ் முடிவிலே தோல்வியும் ஏற்பட்டுதாம்! அப்போ அந்த விளையாட்டு மைதானத்துலேயே அழுதிருக்காராம்!

ராதா : எதிர் காலத்துலே கபிலோட இலட்சியம் என்னன்னு சொல்லியிருக்காரா?

நரசிம்மன் : ம்! கிரிக்கெட்டிலே ஒரே ஆட்டத்திலே மூணு செஞ்சரி அடிக்கணும்னு ஆசையாம்! அவர் இதை அடிச்சுக் காட்டவும் போறார். நாமும் பாக்கப் போறோம்! பாராட்டப் போறோம்!


சீதா : விளையாட்டுத் திறமையோட, நல்ல தன்மையும் கொண்டவராம் கபில்! ''இந்தியன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடை, எந்த வேலையையும் அலட்சியம் செய்யாதே!'' என்பாராம். விளையாட்டுத் துறை மாறுபட்ட மனிதர்களையும் ஒன்று சேர்க்கிறது என்பது அவர் கருத்து. உண்மையும் அதுதானே?

கிரி : எதிர்கால இந்தியாவுக்கு கிரிக்கெட் ஃபீல்டிலே ஒரு சிறப்பான இடம் நிச்சயம் தொடர்ந்து கிடைக்கப் போறதுன்னு நாம மகிழ்ச்சியடையலாம்!

நரசிம்மன் : ''தோன்றின் புகழொடு தோன்றுக!'' என்கிற திருக்குறளுக்கேத்த மாதிரி கபில் புகழின் உச்சக் கட்டத்துக்குப் போயிட்டார்! நாமும் புகழ்பெற வாழ்க்கையிலே சாதனைகள் செய்யக் கத்துக்கணும்!

தயாரிப்பு, புகைப்படம் :
எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்.

கடலில் ஒரு நண்பன்




ஆழி——


டால்பின் என்னும் கடல் பன்றி, மீன் இனத்தைச் சேர்ந்தது அல்ல. அது திமிங்கில இனத்தைச் சேர்ந்தது. குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டி.

டால்பின்களில் சுமார் 50 வகைகள் இருக்கின்றன. டால்பின்களில் மிகச்சிறியது சுமார் 2.5 மீட்டர் இருக்கும். மிகப் பெரியது 'கில்லர் டால்பின். 7.5 மீட்டர் இருக்கும்.


டால்பின்களில் சிலவகைகள் :




அமேசான் டால்பின்




சீன ஆற்று டால்பின்



புட்டி மூக்கு டால்பின்




கில்லர் டால்பின்




லா ப்ளாடா டால்பின்



கங்கை டால்பின்



காமர்ஸன்ஸ் டால்பின்



ரிஸ்ஸோஸ் டால்பின்



பொதுவான டால்பின்


டால்பின்களுக்கு ஒழுங்கான பல் வரிசை உண்டு. மற்ற கடல் பிராணிகளுக்கு இப்படி கிடையாது.



ஆதாரம் : SCIENCE TODAY, SCALA, TIDBITS, THE ILLUSTRATED WEEKLY.


டால்பினின் கண்கள் விநோதமானவை. அதனால் நீருக்குமேல் எவ்வளவு தெளிவாகப் பார்க்க முடியுமோ, அவ்வளவு தெளிவாக நீருக்குள்ளும் பார்க்க முடியும். பைனாகுலர் மாதிரி, தொலைவில் உள்ள காட்சிகளையும் மிக அருகில் பார்ப்பது போல் அதனால் பார்க்க முடியும். அதற்குக் கறுப்பு நிறமும் வெள்ளை நிறமும் பிடிப்பதில்லை!






டால்பின் குட்டிப் போடும்போது, குட்டியின் தலை முதலில் வெளிவந்தால், நீருக்குள் சுவாசிக்க முடியாது என்பதால், குட்டியின் வால்தான் முதலில் வெளிவரும். குட்டி வெளியே வந்ததும், மற்ற டால்பின்கள் அதை மேலே சுமந்து வந்து வெளிக் காற்றைச் சுவாசிக்கச் செய்கின்றன. ஓர் ஆண்டுவரை, குட்டி, தாயிடம் பால் குடித்து வளரும். டால்பின் பாலில் புரதமும் கொழுப்பும் அதிக அளவில் இருக்கின்றன. டால்பின் குட்டி நன்கு வளர்கிறவரை, தாயைத் தவிர மற்றொரு டால்பினும் செவிலித்தாயாக இருக்கும்.







டால்பின், மனிதனைப் போல் வெப்ப இரத்தம் கொண்டது. அதன் இரத்த ஓட்டம் விநோதமானது. மற்ற விலங்குகளின் உடலில் ஒருவழிப் பாதையான இரத்தக் குழாய்கள்தாம் உள்ளன. ஆனால், டால்பினுக்கு இரு திசைகளிலும் இரத்தம் பாயும். இதனால் எந்தவித வெளிப்புற அழுத்தத்தையும் அது சமாளிக்கும்!



சிம்பன்ஸியின் மூளை அதன் உடல் எடையில் 0.7 பங்குதான். டால்பினின் மூளை அதன் உடல் எடையில் 1.2 பங்கு! மனிதனுக்கு 2.05 பங்கு. சராசரியாக ஒரு டால்பினின் மூளை 1700 கிராம்.







டால்பின் தன் உணர்ச்சிகளைக் காட்ட பலவித சத்தங்களை எழுப்புகிறது. ஆனால், 38 விதமான சத்தங்களை மட்டுமே விஞ்ஞானிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றில் மிகச் சில வற்றை மட்டுமே எல்லோராலும் புரிந்து கொள்ள முடியும். அதன் சத்தம் கிளி கத்துவதைப் போல இருக்கும். டால்பின்களின் தொண்டையில் 'குரல் நாண்கள்' கிடையாது. அவை ஒன்றுக்கொன்று பேசிக்கொள்கின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள்!

பிராணிகளிலேயே மனிதனின் பேச்சை அதிகமாகப் புரிந்து கொள்ளுவது டால்பின்தான். அதை மனிதனைப்போல் பேச வைக்க முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அமெரிக்காவில், மார்கரெட் ஹோவ் என்னும் விஞ்ஞானி, டால்பினுக்கு ஆங்கில வார்த்தைகளை உச்சரிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார். ஹாவாயிலுள்ள லூயிஸ் எம். ஹெர்மன் என்னும் புரொபஸர் தான் வளர்க்கும் டால்பினுக்கு, 'வளையத்தைத் தொடு', பந்தைக் கொண்டுவா' என்பன போன்ற 12 சிறு சிறு வார்த்தைகளை ஆங்கிலத்தில் சொல்லி அதைச் செயல்பட வைத்திருக்கிறார்!







பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், மன வளர்ச்சியற்ற குழந்தைகளை டால்பின்களுடன் விளையாட வைத்து சிகிச்சையளிக்கிறார்கள். டால்பின்கள் அந்தக் குழந்தைகளுடன் விளையாடி அவர்களை மகிழச் செய்கின்றன!



கிரேக்க, ரோமானியப் புராணக் கதைகளில் இந்த டால்பின், மனிதனின் தோழனாக இருந்ததாகவும், கடலில் மூழ்க இருந்த மனிதர்களைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே, நாணயங்களிலும் பாத்திரங்களிலும் டால்பின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.



கடலை ஆராயும் விஞ்ஞானிகளுக்கு டால்பின்கள் பேருதவியாக இருக்கின்றன. மூழ்கிப் போகும் கப்பலின் அடியில் ஏற்படும் பழுதுகளைக் கண்டுபிடித்துப் பழுது பார்க்கிறவர்கள், டால்பினின் முதுகில் ஏறிக்கொண்டு நீருக்குள் போகிறார்கள். டால்பின்கள் கடலுக்குள் உள்ள ஆராய்ச்சி நிலையங்களுக்குப் பொருள்களையும் செய்திகளையும் கொண்டு போகின்றன. டால்பினுக்கு உத்தரவிட்டால் உடனே கீழ்படியும்!



டால்பின்களைப் பழக்கி, சர்க்கஸ் வேலைகளையெல்லாம் செய்ய வைக்கிறார்கள்! அமெரிக்காவில் இந்த சர்க்கஸ் அதிகம். இப்போது ஹாலிவுட்டில், சினிமாவிலும் டால்பின்களை நடிக்க வைக்கிறார்கள்!

டால்பின்கள் எப்போதும் விளையாடிக் கொண்டிருக்கக் கூடியவை. ஆபத்துக் காலத்தில் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ளுகின்றன. ஒரு டால்பின் தனிமையில் விடப்பட்டால் ஏங்கிச் செத்துவிடும்!


டால்பின்களின் எண்ணிக்கை அதிகமாகும் போதெல்லாம் அவை தாமாகவே ஆயிரக்கணக்கில், கரையில் ஒதுங்கி மரணமடைகின்றன! இது இயற்கையின் 'சமநிலை'. சமீபத்தில் பிரேசில் நாட்டில் இப்படி நிகழ்ந்தது!





டால்பினின் தலையில் உள்ள கொழுப்புப் பொருளிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் நுண்ணிய எந்திரங்களுக்கு உயவுப் பொருளாகப் பயன்படுகிறது. டால்பின்களைக் கொல்லுவதைத் தடைசெய்திருக்கிறார்கள்.

கதையா விடறே?



கோபால் நடுநடுங்கியபடி நின்று கொண்டிருந்தான்.

''சொல்லுடா...? ஏன் இன்னிக்கி லேட்?''- ஆசிரியர் பிரம்பை நீட்டி அவனை மிரட்டினார்.

''வழியில் ஒரு பெரியவர் சார். மயக்கம் போட்டு பிளாட்பாரத்தில் விழுந்துட்டார். அதைப் பார்த்துக் கிட்டு என்னால சும்மா இருக்க முடியலே சார். ஆட்டோவைக் கூப்பிட்டு, அவரைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு போய்ச் சேர்த்தேன். அதனால் தான் லேட்''

''சரி. டிக்கெட் புஸ்தகம் என்னாச்சு?''

''எல்லா டிக்கெட்டையும் வித்துட்டேன் சார். நூறு ரூபாய் பணமும் என்னிடம் தான் இருந்தது. இன்னைக்கி உங்களிடம் தருவதாகத் தான் இருந்தேன். ஆனா, அந்தப் பெரியவரைக் காப்பாத்தணும்னு இருந்த துடிப்பில் பணத்தையும், டிக்கெட் அடிக்கட்டையையும் எங்கேயோ விட்டுட்டேன் சார். என்னை நம்புங்க''- கோபால் அழுதான்.

''என்னடா கதை விடறே? நம்ப பள்ளியின் எட்டாம் வகுப்புக் கூரைக் கொட்டகை ஒழுகுதுங்கறதுக்காக, அதன் கூரை மாற்றுச் செலவுக்குன்னு நன்கொடை டிக்கெட் போட்டு, வித்துக் கிட்டு வரக் கொடுத்தால், வித்த பணத்தை எடுத்துச் செலவழிச்சிட்டு பொய்க் காரணமா சொல்றே?''-

உள்ளங்கையில் விழுந்த பிரம்படி தாங்காது கோபால் துடித்தான். உள்ளங்கை சிவந்து விட்டது.

''சார், என்னை நம்புங்க. நான் பொய் சொல்லலே?''

''எனக்குத் தெரியாது. டிக்கெட் பணம் நூறுரூபாய், டிக்கெட் புக் அடிக்கட்டையோட வந்தா கிளாசுக்குள்ளே வா. இல்லே, பள்ளிக்கே வராதே'' என்று அவனை வெளியில் விரட்டினார் ஆசிரியர்.

கோபால் அழுது கொண்டே பள்ளிக்கு வெளியே வந்தபோது,ஒரு கார் வந்து நின்றது. காருக்குள்...! ஆமாம், அவன் காலையில் காப்பாற்றி, மருத்துவமனையில் சேர்த்த அதே பெரியவர்தான்!

''தம்பி. என் உயிரைக் காப்பாத்தினதே நீ தாம்பா. எனக்கு இரத்த அழுத்தம் அதிகமாகி மயங்கி விழுந்துட்டேன். என்னை ஆஸ்பத்திரியிலே சேர்த்துட்டு நீ உடனேயே திரும்பிட்டியே? இரண்டு மணி நேரத்தில் எனக்கு குணமாகி, வெளியே அனுப்பிட்டாங்க. உன்னைக் காணவில்லை. நீ விட்டுப் போன பர்ஸ், டிக்கெட் புக்கின் அடிக்கட்டை, பணம் எல்லாம் கிடைச்சது. அதை வைத்துக்கொண்டு உன்னைப் பார்க்க வந்து கொண்டிருக்கிறேன்'' என்றார் பெரியவர்.

சத்தம் கேட்டு வெளியே வந்த ஆசிரியரிடம் கோபால் விஷயத்தைக் கூறினான். பெரியவரை அறிமுகம் செய்து வைத்தான்.

''சின்ன வயதில், மற்றவர்களுக்கு உதவக்கூடிய மனம் இருப்பது அதிசயம் தான். அதுவும் இத்தனை கண்டிப்பான ஆசிரியர் இருந்தும் அதைக் கூடப் பொருட்படுத்தாது, துணிந்து உதவியிருக்கிறதை எத்தனை பாராட்டினாலும் தகும். கோபாலுக்குத் தரும் பரிசாக, கொட்டகையைப் பிரித்து, புதுப்பிக்கும் முழுச் செலவையும் நான் ஏற்கிறேன் சார்''என்றார் பெரியவர்.

ஆசிரியர் கோபாலைக் கட்டி அணைத்துக் கொண்டார் பெருமித உணர்வுடன்.

- திலீப்மோகன், தருமபுரி

மற்ற பத்திரிகைகளையும் படியுங்க சார்!

★ 'என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்' பகுதியை புன்னகையுடன் வரவேற்கிறேன். சங்கராபுரம். ஆ.முருகன்.

★ 'பரீட்சைக்கு பயமேன்?' என்ற கட்டுரையைத் தேர்வு சமயத்தில் வெளியிட்டு ஒரு நல்ல வழியை மாணவர்களுக்குக் காட்டி விட்டீர்கள். குடந்தை. ஆர்.எஸ்.நாதன்.

★ பரீட்சைக்குப் பயமேன் கட்டுரை மிகவும் அருமை. அதுவும் முழு ஆண்டுத் தேர்வுகள் வர இருக்கும் சமயத்தில் இக்கட்டுரை வந்திருப்பது மிகவும் பொருத்தமானது. இக்கட்டுரையைப் படித்தபின் மாணவர்களின் பயம் போய் விடும் என்பது நிச்சயம். அது எப்படி சார் அட்டையில் கூட மாணவி பரீட்சையைக்கண்டு பயப்படுவது போல் உங்களால் படம் எடுக்க முடிந்தது! அட்டைப் படம் அருமை. சிதம்பரம். ஸ்ரீவித்யா காளிதாஸ்.

★ ''பரிட்சைக்கு பயமேன்'' போன்ற பயனுள்ள பகுதிகளை வெளியிட்டு ''கோகுலம் இருக்க பயமேன்'' என்பதை நிரூபித்துவிட்டீர்களே! சபாஷ்! காலத்திற்கேற்ற படைப்பு! இன்னும் இதுபோல வரவேற்கிறோம்! ஓரியூர் எஸ்.பி.அகிலா.

★ தேர்வு நெருங்கி வரும் இவ்வேளையில் சுவையான, பயனுள்ள விவாதத்தை இடம்பெறச் செய்து, மாணவர்களைத் தேர்வு பயத்திலிருந்து புத்துயிர் பெறச் செய்து விட்டீர். பாராட்டுக்கள். விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன்.

★ மூன்றே ரூபாய்க்கு முத்தான கதைகளையும், கவிதைகளையும், கட்டுரைகளையும், எங்கள் உள்ளங்களில் தவழவிட்ட கோகுலம் வாழ்க பல நூற்றாண்டுகள்! சித்தேரி கோகுலப்பிரியன்.

★ புயா அசத்தி வருகிறார். முயற்சி செய்தால் 'எதையும் சாதிக்கலாம்' என்பதற்கு புயா ஒரு எடுத்துக்காட்டு. துர்க்கை சன்னதி சங்கர்.

★ அபிராமியின் அட்டிகையைப் படிக்கும் போது கண்களில் நீர் ததும்புகிறது. பட்டீஸ்வரம் கருப்பையன்.

★ ''மாயா உலகில் காஸிம்'' பதினாறு பக்க வண்ணக்கதை அருமை. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதற்கு இணங்க, விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும், தன் உடன்பிறப்புகளின் மேல் கொண்ட அன்பின் காரணமாக அவர்களைத் துன்பத்தில் இருந்து மீட்ட காஸிமின் திறமை போற்றத்தக்கது. ஓவியர் ''ஜெயராஜ்'' அவர்களின் கைவண்ணம் சிறப்பு. புன்செய் புளியம்பட்டி பி.எல்.கிரிஜா.

★ எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியான ஜோக்கையே போட்டு ஏன்சார் இப்படி ஏமாறுகிறீர்கள்? கொஞ்சம் மற்ற பத்திரிகைகளையும் இதற்காகவாவது படியுங்கள் சார்!- திருச்சி, என். சங்கீதா, பரம்பிகுளம் ஏகநாத், புதுவை, நாகு.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

